தமிழர்களின் போராட்டக் கருத்துக்கள் சிங்களச் சமூகத்துக்கு செல்ல வேண்டும் பக்.02

விலை ரூபா 20

பக்கங்கள் 28

# உதயன்

35c - 29c
தெளிவான வானிலை

சுடர் 31 | கதிர் 165 | வள்ளுவர் ஆண்டு 2047 | சித்திரை 26, திங்கட்கிழமை 09.05.2016

# ஜி.எஸ்.பி. பிளஸ் வேண்டுமானால் 58 நிபந்தனைகள்

## இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் அதிர்ச்சி வைத்தியம்

கொழும்பு, மே 9
மனித உரிமைகளைப் பாதுகாத்தல், தமிழர் பிரதேசங்களில் தனியார் காணிகள் விடுவிப்பு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல் மற்றும் புதிய அரசமைப்பின் ஊடாக அதிகாரப் பகிர்வு போன்ற விடயங்களைக் கருத்தில் எடுக்குமாறு, ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை அரசிடம் வலியுறுத்தியுள்ளது.
இந்த விடயங்கள் உள்ளிட்ட 58 நிபந்தனைகளை முன்வைத்துள்ள ஐரோப்பிய ஒன்றியம், தற்போதைய அரசியல் சூழலை கவனத்தில் எடுத்துக்கொண்டால் மாத்திரமே, ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை மீளப் பெற்றுக்கொள்ள முடியுமெனக் குறிப்பிட்டுள்ளது.
இவ்வாறு கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

> வடக்கில் கைப்பற்றப்பட்ட அனைத்து தனியார் காணிகளையும் மீள ஒப்படைத்தல், இடம்பெயர்ந்துள்ள அனைவரையும் மீளக்குடியமர்த்தல் மற்றும் காணாமற்போனவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கல் போன்றவைகளில் அரசு கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை மீள வழங்குவதாயின், 58 நிபந்தனைகளைக் கவனத்தில் எடுத்துச் செயற்படுமாறு ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை அரசிடம் வலியுறுத்தியுள்ளது.
இதில், பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படல், தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல், மனித பக். 26

## 300 பக்கத்திலான அறிக்கை நாளை அரசிடம் கையளிப்பு

### புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் மக்களின் பரிந்துரைகள்

கொழும்பு, மே 9
புதிய அரசமைப்பு எவ்வாறு அமையவேண்டும் எனப் பொது மக்களிடம் கருத்தறிவதற்காக நியமிக்கப்பட்ட குழு, அறிக்கை தயாரிக்கும் பணியை நிறைவுக்குக் கொண்டுவந்துள்ளது. தற்போது செம்மைப்படுத்தல், அச்சிடுதல் ஆகிய செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.
எனினும், மேற்படி அறிக்கை நாளை செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரிடம் கையளிக்கப்படும் என்று மேற்படி குழுவின் தலைவர் லால் விஜேநாயக்க நேற்று 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.
சுமார் 300 பக்கங்கள் அடங்கிய அறிக்கையாகவே, அது அமைந்திருக்கும் என்றும், பரந்தளவில் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.
புதிய அரசமைப்பை உருவாக்குவது தொடர்பில் மக்கள் கருத்தறிவதற்காக நியமிக்கப்பட்ட மேற்படி குழுவில் அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட 20 பேர் அங்கம் வகிக்கின்றனர். இவர்கள் நாடு தழுவிய ரீதியில் சென்று, மக்களிடம் கருத்துக்களைக் கேட்டறிந்தனர். ஏப்ரல் 30 ஆம் திகதி வரையே கால அவகாசம் வழங் பக். 26

## மகிந்தவின் காலில் வீழ்ந்து வணங்கிய இராணுவத்தினர்

### ஒளிப்படங்கள் வெளியானதால் சர்ச்சை

கொழும்பு, மே 9
மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்புக்கு இருந்த இராணுவத்தினர் வெளியேறும்போது, மகிந்தவின் காலில் வீழ்ந்து வணங்கிய ஒளிப்படங்கள் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.
அத்துடன், இராணுவத்துக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில், இவர்கள் செயற்பட்டுள்ளதாக, இராணுவ உயர் அதிகாரிகளை மேற்கோள்காட்டி, அந்த இணையத்தளங்கள் செய்தியையும் வெளியிட்டுள்ளன.
மகிந்த ராஜபக்சவுக்கு வழங்கப்பட்டு வந்த இராணுவப் பாதுகாப்பு கடந்த முதலாம் திகதி நீக்கப்பட்டது. இதன்போது, அவருக்குப் பாதுகாப்பு வழங்கிய இராணுவத்தினர் வெளியேறினர். அவர்கள் வெளியேறுவதற்கு முன்பாக, மகிந்த ராஜபக்சவின் காலில் வீழ்ந்து வணங்கியுள்ளனர். இராணுவத்தினர் இவ்வாறு வீழ்ந்து வணங்கும் ஒளிப்படங்கள் இணையத்தளங்களில் வெளியாகியுள்ளன.
பாதுகாப்புக் கடமையிலிருந்த இராணுவத்தினர் இவ்வாறு அரசியல் தலைவர்களின் காலில் வீழ்ந்து வணங்குவது முறையற்றது என்று, இராணுவ உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இவ்வாறு இராணுவத்தினர் நடந்துகொண்டதன் ஊடாக, இராணுவத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளனர். இவர்களுக்கு எதிராக இராணுவ விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் என்று அவர்கள் தெரிவித்துள்ளதாக, இணைய ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன. பக். 26

முச்சந்தி முரளி



என்ன நிபந்தனை போட்டாலும் செய்வதைப் போல நடிப்பது தான் நல்லாட்சி...

## ஆற்றங்கரையிலிருந்து சிசுவின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், மே 9
பிறந்து சில மணி நேரங்களே ஆன பக். 26

## சாட்சி சொன்ன பெண்ணை தேடும் புலனாய்வாளர்கள்

### நல்லாட்சியிலும் தொடர்கிறது அச்சுறுத்தல்

யாழ்ப்பாணம், மே 9
கடந்த மார்ச் மாதம் மன்னாரில் இடம்பெற்ற காணாமற்போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வில் சாட்சியமளித்த பெண் ஒருவரைத் தேடி, அவரின் வீட்டுக்குக் கடற்படைப் புலனாய்வாளர்கள் சென்றுள்ளனர்.
இவ்வாறு தமக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளதாக, மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் செயலாளர் அன்ரனி மார்க் தெரிவித்துள்ளார்.
எனது வீட்டில் நான் இல்லாத வேளை, கடற்படைப் புலனாய்வுப் பிரிவினர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டவர்கள் நேரில் சென்று விசாரணை நடத்தியுள்ளனர் என ஆணைக்குழு அமர்வில் சாட்சியமளித்த பெண் தெரிவித்துள்ளார்.
காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு அமர்வு, கடந்த மார்ச் மாதம் 28 ஆம் திகதி மன்னாரில் இடம்பெற்றது. பக். 23

## ஒற்றுமையாகப் போராடியிருப்பின் ஆயுத வழியில் தீர்வு கண்டிருப்போம்

### செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 9
சகோதரப் படுகொலைகளினால் தான் நாம் இன்று அரசியல் தீர்வுக்காக ஏங்கும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. அன்று ஒற்றுமையாக இருந்திருந்தால், ஆயுதப் போராட்டத்தின் ஊடாகவே நாம் எமது தீர்வைப் பெற்றிருப்போம்.
இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன்.
ரெலோவின் ஸ்தாபகத் தலைவர் சிறிசபாரத்தினத்தின் 30 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வுகள் நேற்று இளங்கலைஞர் மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளதாவது:-
அகிம்சைப் போராட்டம் தோல்வியைத் தழுவியது. அதன் பின்னர் ஆயுதப் போராட்டம் தோற்றம் பெற்றது. ஆயுதப் போராட்டத்தின் ஊடாக விடிவை எட்டலாம். இந்த நம்பிக்கையுடனேயே ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதனைத் தமிழீழ விடுதலை இயக்கமே தொடக்கி வைத்தது.
இதன் ஆரம்ப காலங்களில் சிறி பக். 26

## ரயிலுடன் மோதுண்டு இளைஞன் உயிரிழப்பு

### தாயாருடன் அலைபேசியில் உரையாடிவாறு ரயில் பாதையைக் கடக்க முயன்றபோது துயரம்

கிளிநொச்சி. மே 9
தாயாருடன் அலைபேசியில் உரையாடிக்கொண்டு தண்டவாளத்தைக் கடக்க முயன்ற இளைஞர், ரயிலுடன் மோதுண்டு சாவடைந்துள்ளார் எனக் கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் கிளிநொச்சி - பரந்தன் பகுதியில் இடம்பெற்றுள்ளது.
பரந்தன் ரயில் நிலையத்துக்கு அருகில், அலைபேசியில் வவுனியாவில் உள்ள தாயாருடன் உரையாடியவாறு தண்டவாளத்தைக் கடக்க முயற்சித்தபோதே, யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற கடுகதி ரயிலுடன் மோதுண்டு குறித்த இளைஞர் உயிரிழந்துள்ளார்.
இதில் கிளிநொச்சிவட்டக்கச்சியைச் சொந்த இடமாகவும் வவுனியாவில் வசித்து வருபவருமான புவனேஸ்வரன் தனுசன் (வயது - 24) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.
இவ்வாறு அலைபேசியில் உரையாடியவாறு ரயில் பாதையில் பயணித்த குறித்த இளைஞனுக்குக் கேட்கும் திறன் குறைவு என்பத பக். 26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தமிழர்களின் போராட்டக் கருத்துக்கள் சிங்கள சமூகத்துக்கு செல்ல வேண்டும்

## நவசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 9

தமிழ் மக்கள் தங்களின் விடிவுக்காக தனித்துப் போராட முடியாது. சிங்கள சமூகத்தின் மத்தியில் தமிழ் மக்களின் போராட்டக் கருத்துக்கள் கொண்டு செல்லப்பட வேண்டும். இதனை எமது கட்சி செய்து வருகின்றது - இவ்வாறு நவசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்தார். தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் சிறி சபாரத்தினத்தின் 30 ஆவது நினைவு தினம், நல்லூர் இளம் கலைஞர் மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மக்களைப் படுகொலை செய்த மகிந்த ராஜபக்ச மீண்டும், மக்களைக் கொல்வதற்கே இராணுவப் பாதுகாப்பைக் கோருகின்றார். மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்கள் - இந்த நாட்டின் மக்கள் பல துன்பங்களை அனுபவித்தனர். இவரது காலத்தில் நடத்தப்பட்ட போரால் சாதாரண மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

போரின் விளைவு பல இலட்சக் கணக்கான மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது. எமது சிறந்த நாகரிகம், வரண்ட நாகரிகமாக மாறியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி 2002 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. இதனை எமது கட்சி ஆதரித்தது. ஆனால், மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட சில பேரினவாத சக்திகள் இதனை எதிர்த்தன. இந்த வேளையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அனுப்பிய யோசனைகளை ஏற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டது.

அதனால் நாட்டில் போர் தொடங்கியது. போர் ஆரம்பித்த போது தென்னிலங்கையில் அதற்கு ஆசிர்வாதம் இருந்தது. ஆனால் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களும், அதனால் பல இழப்புக்களைச் சந்தித்தனர். போர் முடிவுக்கு வந்த பின்னரும், மகிந்தவின் ஆட்சி தொடர்ந்தது. இவரது ஆட்சியில் ஜனநாயகம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து முன்னெடுத்த பரப்புரைகளால்தான் மகிந்தவின் ஆட்சியை வீழ்த்த முடிந்தது. அந்த ஆட்சி முடிவுக்கு வந்தமையினால் தான், நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தது. நாம் எதிர்பார்த்த சுதந்திரமும் - ஜனநாயகமும் இன்னமும் நடைமுறைப் படுத்தப்படவில்லை. இதனை நடைமுறைப்படுத்துவதற்கு நீண்ட நாள்கள் எடுக்க வேண்டியிருக்கின்றது. இருப்பினும் அரச இயந்திரம் மாறுவதற்கு காத்திருக்க வேண்டியிருக்கின்றது. சிங்கள மக்கள் மத்தியில் அவர்களது கருத்தியலை மாற்றும் முயற்சிகள் ஓரளவு வெற்றியைப் பெற்றுத் தந்துள்ளன.

ஆயினும் மகிந்த குழு பல்வேறு சதித் திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கின்றது. ஆட்சிக்கு மீண்டும் வருவதற்குத் துடித்துக் கொண்டிருக்கின்றார்கள். அதற்காக அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளைச் செய்து கொண்டிருக்கின்றனர். நாட்டில் மீண்டும் குழப்பத்தை உருவாக்குவதற்கே, இராணுவப் பாதுகாப்பை மகிந்த கோருகின்றார்.

தமிழ் மக்கள் தங்களின் விடிவுக்காக தனித்துப் போராட முடியாது. சிங்கள சமூகத்தின் மத்தியில் தமிழ் மக்களின் போராட்டக் கருத்துக்கள் கொண்டு செல்லப்பட வேண்டும். இதனை எமது கட்சி செய்து வருகின்றது. தொடர்ந்தும் செய்யும் - என்றார். (ற-ஐ-5-106)

## விலங்கு விசர் தடுப்பூசி வழங்கல் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 9

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள, யாழ்.நகர் -1 பொது சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இன்று திங்கட்கிழமை காலை 9 மணியிலிருந்து மு.ப. 11 மணி வரை முத்தமிழ் பாலர் பாடசாலையிலும், முற்பகல் 11.30 மணியிலிருந்து பிற்பகல் 1 மணி வரை மீனாட்சி அம்மன் கோயிலடியிலும், பி.ப. 2 மணியிலிருந்து பிற்பகல் 3.30 மணி வரை நமசிவாயம் பாடசாலை முன்பாகவும் நடைபெறும்.

தொடர்ந்து நாளை செவ்வாய்க்கிழமை மு.ப. 9 மணியிலிருந்து முற்பகல் 11 மணி வரை கூளாவடி வைரவர் கோயிலடியிலும், முற்பகல் 11.30 மணியிலிருந்து பிற்பகல் 1 மணி வரை ரிம்மர் மண்டபத்திலும், பிற்பகல் 2 மணியிலிருந்து பிற்பகல் 3.30 மணி வரை சிறாம்பியடி சனசமூக நிலையத்திலும் நடைபெறும்.

நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 9 மணியிலிருந்து முற்பகல் 11 மணி வரை பலாலி வீதி 2 ஆம் ஒழுங்கையிலும், முற்பகல் 11.30 மணியிலிருந்து பிற்பகல் 1 மணி வரை யாழ். வீதியிலும், பிற்பகல் 2 மணியிலிருந்து பிற்பகல் 3.30 மணி வரை பெருமாள் கோயிலடியிலும் நடைபெறும்.

எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9 மணியிலிருந்து முற்பகல் 11 மணி வரை றொலெக்ஸ் பேக்கரியடியிலும், முற்பகல் 11.30 மணியிலிருந்து பிற்பகல் 1 மணி வரை கன்னாதிட்டி காளி கோயிலடியிலும், பிற்பகல் 2 மணியிலிருந்து பிற்பகல் 3.30 மணி வரை சிவன் வடக்கு வீதி பாலர் பாடசாலையிலும் நடைபெறும்.

எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியிலிருந்து முற்பகல் 11 மணி வரை கீரிப் பிள்ளையார் கோயிலடியிலும், முற்பகல் 11.30 மணியிலிருந்து பிற்பகல் 1 மணி வரை மாவடி வீதியிலும், பிற்பகல் 2 மணியிலிருந்து பிற்பகல் 3.30 மணி வரை பிரப்பம் குளம் வீதியிலும் நடைபெறும்.

எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணியிலிருந்து முற்பகல் 11 மணி வரை பி.ஏ. தம்பி லேனிலும், முற்பகல் 11.30 மணியிலிருந்து பிற்பகல் 1 மணி வரை கில்னர் வீதியிலும், பிற்பகல் 2 மணியிலிருந்து பிற்பகல் 3.30 மணிவரை மானிப்பாய் வீதி சந்தி கூல்பாரிலும் தடுப்பு மருந்து ஏற்றப்படும்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வளர்ப்பு நாய்களுக்கு உரிமைக்கட்டணமாக 35 ரூபா செலுத்தி தடுப்பு ஊசியை ஏற்றிக்கொள்ளுமாறு அவர் தெரிவித்துள்ளார். (ற-ஐ-ரி)

## அலைபேசி இலக்கம் தர மறுத்த யுவதியைத் தாக்கிய இளைஞன்

### தட்டிக் கேட்ட தாய் மீதும் தாக்குதல்

சாவகச்சேரி, மே 9

அலைபேசி இலக்கம் வழங்க மறுத்த யுவதியைத் தாக்கியதோடு, அதனைத் தட்டிக்கேட்ட யுவதியின் தாயாரையும் தாக்கியுள்ளார் இளைஞர் ஒருவர்.

இந்தச் சம்பவம் நாவற்குழியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது, குறித்த யுவதி தண்ணீர் எடுக்க அங்குள்ள பொதுக் கிணற்றுக்குச் சென்ற வேளையில், குறித்த இளைஞர் யுவதியின் அலைபேசி இலக்கத்தைத் தருமாறு கேட்டுள்ளார். அதற்கு யுவதி மறுப்புத் தெரிவித்தார் என்றும் அதனால் குறித்த சந்தேகநபர் யுவதியைத் தாக்கினார் என்றும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மகள் அவ்வாறு தாக்கப்படுவதைத் தட்டிக்கேட்ட யுவதியின் தாயாரையும், குறித்த நபர் தாக்கியுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுக்கிலக்கான தாயாரையும், மகளையும் சாவகச்சேரிப் பொலிஸார் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். இது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர். (ற-ஐ-4,9)

## நாய்களை பதிவுசெய்யாவிடின் இனி 10 ஆயிரம் ரூபா தண்டம்!

கொழும்பு, மே 9

வீடுகளில் செல்லப் பிராணிகளாக வளர்க்கும் நாய்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். பதிவு செய்யாவிடின் 10 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்த நேரிடும். இதற்குரிய ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. -இவ்வாறு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாட்டில் 5 இலட்சம் கட்டாக்காலி நாய்கள் உள்ளன. கொழும்பில் மாத்திரம் 16 ஆயிரம் கட்டாக்காலி நாய்கள் உள்ளன. பஸ் நிலையங்கள், ரயில் நிலையங்கள், சந்தைகள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இந்தக் கட்டாக்காலி நாய்களால் தொல்லைகள் உள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்குத் தீர்வு காணவேண்டும். இதற்குத் தேசிய ரீதியில் நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. இந்த விடயம் தொடர்பில் செல்லப் பிராணி வளர்ப்புடன் தொடர்புடைய அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் பேச்சு நடத்தியுள்ளோம். நாய்களைக் கொல்வது இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையப்போவதில்லை. இந்த விடயத்துக்கு உரிய தீர்வை அமைச்சரவை எதிர்பார்க்கின்றது.

சகல தரப்பினரதும் ஆலோசனைகளைப் பெற்று தேசிய நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை முன்வைக்க வேண்டியுள்ளது. இந்தத் திட்டத்தில் சர்வதேச ரீதியில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்களையும் இணைத்துக் கொண்டு செயற்படுத்த வேண்டியுள்ளது.

செல்லப் பிராணிகளாக வளர்க்கும் நாய்களைப் பதிவு செய்யும் ஒழுங்கு உள்ளது. அதனை மக்கள் பின்பற்றுவதில்லை. அதனை நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பு இருக்கின்றது. பதிவு செய்யப்படும் செல்லப் பிராணி உரிமையாளரின் பொறுப்பில் இருக்க வேண்டும். அந்தச் செல்லப் பிராணியால் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டால், அதன் உரிமையாளரே பொறுப்புக் கூற வேண்டும் - எனவும் குறிப்பிட்டுள்ளார். (ற-ஐ-5)

## சிறி சபாரத்தினத்தின் நினைவு நிகழ்வுகள்





தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் சிறி சபாரத்தினத்தின் 30 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நினைவு கூரப்பட்டது.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) ஏற்பாட்டில், இளம் கலைஞர் மண்டபத்தில் நேற்றுக் காலை இந்த நிகழ்வு இடம்பெற்றது.

கட்சிக் கொடியை கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் முதலில் ஏற்றி வைத்தார். அதன் பின்னர், சிறி சபாரத்தினத்தின் உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டது. தொடர்ந்து அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதன் போது, நவசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண, ஜனநாயக சோசலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜெயசூரிய, ஈ.பி.ஆர்.எல். எவ். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன், வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஆகியோர் நிகழ்வில் பங்கேற்றிருந்தனர். (ற-ஐ-5-101-106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

என்றும் குறையாத ஐஸ்வர்யத்தை
அள்ளித் தரும் அட்ஷய திருதியை
திருநாளாம் 09.05.2016 அன்று எமது
ரூபி ஜுவல்லறியில் தங்க நகைகளை
கொள்வனவு செய்து ஐஸ்வர்யத்தை
அள்ளிச் செல்ல அனைவரையும்
அன்போடு அழைக்கின்றோம்.



Rube Since 1982
Jewellery

# ரூபி ஜுவல்லறி

நம்பிக்கை, கைராசி மற்றும் தரம்குன்றா



தங்கநகை உலகில் 34 வருட
அனுபவம் வாய்ந்த நாங்கள்
உலகின் எம்பாகத்தில் இருக்கும்
எமது வாடிக்கையாளர்களுக்கு
சிறந்த சேவையினை
வழங்கிக்கொண்டிருக்கின்றோம்
என்பதை மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

09.05.2016 அட்சய திருதியை அன்று
அதிகூடிய தங்க நகைகளை
கொள்வனவு செய்யும்
பத்து வாடிக்கையாளர்களுக்கு
குலுக்கல் முறையில் தங்கக் காசுகள்
காத்திருக்கின்றன. மேலும் அன்று தங்க
நகைகளைக் கொள்வனவு செய்யும்
அனைவருக்கும் பெறுமதிமிக்க
பரிசில்களும் வழங்கப்படும்.
மணி கோர்த்த ஆபரணங்களை
முன்னதாகவே ஓடர் செய்து
பெற்றுக் கொள்ளமுடியும்.




இல: 227 - 229. கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 6919, 0777 344 074

அக்ஷய திருதியை திருநாளிலே தங்க
நகைகளைப் பெற்று என்றுமே குறையாத
இன்பத்தைப் பெற்றிட அன்போடு
அழைக்கின்றோம்.



# செல்வி
## நகை அகம்

தங்கப்பவுண் நகை வியாபாரம்

# Chelvi Nakai agam

Manufacturers of Gold Jewels



22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.

1/3, Kasthuriar Road,
Jaffna.

1/3. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 021 222 9441

அட்ஷய திருதியை அழைப்பிதழ்
09.05.2016



அழகிய நவீன சிங்கப்பூர் நகைகளுக்கு

# சிங்கப்பூர் ஜுவல்லறி

# Sinkapoore
## Jewellery



நிகழும் மங்கலகரமான துர்முகி
வரு ஷம் சித்திரை மாதம் 26ஆம்
நாள் (09.05.2016)
திங்கட்கிழமை அட்ஷய திருதியை
என்னும் பொன்னான நாள்
வருகின்றது. அன்றைய தினம்
நீங்கள் வாங்கும் நகைகள்
என்றும் உங்கள் வாழ்க்கையில்
நிலைத்து நிற்கும். நாமும் இந்த
அட்ஷய திருதியை வரவேற்க
இருப்பதனால் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

அட்ஷய திருதியையன்று
நகைகளை கொள்வனவு
செய்யும்
அன்பான வாடிக்கையாளர்
அனைவருக்கும்
அன்பளிப்புப் பொருள்கள்
வழங்கப்படும்.

குறையாத செல்வத்தை வளமாக அள்ளி வழங்கும்
பொன்னான திருநாள் அட்ஷய திருதியையன்று
சொந்தமாக்கிடுங்கள் சிங்கப்பூர் ஜுவல்லறியின் தங்க நகைகளை

021 4590 260 / 021 222 3327

இல.28. கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.

No.28, Kasthuriar Road,
Jaffna.

அக்ஷய திருதியை அழைப்பு
09.05.2016

# ஸ்ரீதேவி
## ஜுவலர்ஸ்

தங்கப்பவுண் நகை வியாபாரம்

ஓடர் நகைகள் 22 கரட்டில்
குறித்த தவணையில் உத்தரவாதத்துடன்
செய்துகொடுக்கப்படும்.



பொன் சேரும் பொன்னான நன்நாளாம்
அக்ஷய திருதியை
உங்கள் எண்ணம் போல் தரம், நம்பிக்கை,
நவநாகரிகத்துக்கு ஏற்ப என்றும் மாறாத
ஸ்ரீதேவி யுவலேர்ஸ் உடன்
கொண்டாடி மகிழுங்கள்

பெற்றுக் கொள்ளும்
நகைகளுக்கு உரிய
தரச் சான்றிதழ்
வழங்கப்படும்.

இல. 80/7, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 720 1787, 077 104 2848


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வாடகை அடிப்படையில் வான் பெறுவதற்கான கேள்வி விலை கோருதல் மாகாணப்பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம், யாழ்ப்பாணம்

கட்டடங்கள் திணைக்கள பிராந்திய அலுவலகமான மன்னார் பிரதம எந்திரி அலுவலக பாவனைக்கு உற்பத்தி ஆண்டு 1995 அல்லது அதற்கு பிற்பட்ட வான் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பில் மேலதிக விவரங்களினை கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள எமது அலுவலக விளம்பரப்பலகையில் அல்லது பள்ளிமுனை வீதி, மன்னார் முகவரியில் அமைந்துள்ள பிரதம எந்திரி அலுவலகத்தில் பார்வையிட்டு கேள்விப் பத்திரத்தினைப் பெற்று 2016.05.20 ஆந் திகதி முற்பகல் 11.00 மணிக்கு முன்னராக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

எந்திரி.செ.மோகனதேவன்
தலைவர், பெறுகைக்குழு,
கட்டடங்கள் திணைக்களம், வடக்குமாகாணம்,
கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

தொலைபேசி.இல
021 222 8091

### விசேட பொதுக் கூட்ட அறிவித்தல் 13.05.2016

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை மேம்பாட்டுப் பேரவையின் விசேட பொதுக்கூட்டம் 13.05.2016 வெள்ளிக் கிழமை மாலை 3.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

இத் கலந்துரையாடலில் வைத்தியசாலை மேம்பாட்டுப் பேரவையின் ஆயுள்கால அங்கத்தவர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

திரு.அ. பங்கையற் செல்வன்
செயலாளர்.
வைத்தியசாலை மேம்பாட்டுப் பேரவை
மாவட்டப் பொது வைத்தியசாலை, கிளிநொச்சி
077 239 5778

### வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய் கிராம உபஅலுவலகம் ஆனைக்கோட்டை ஆதன பெயர்மாற்ற அறிவித்தல்

வட்டாரம் : 02
சுதுமலை வீதி
ஆதன இலக்கம்: 48/3A (புதிய இலக்கம்)
கிராமசேவையாளர் பிரிவு: J/129 சுதுமலை வடக்கு

வட்டாரம் 02 சுதுமலை வீதி ஆதன இலக்கம் 48/3A (புதிய இலக்கம்) இல் அமைந்துள்ள உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் மேற்கு பகுதி மானிப்பாய் கோவிற்பற்று சுதுமலை இறை " நம்பிராயன் தோட்டம் " என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 03 கொண்ட இவ்வாதனமானது யாழ்ப்பாணம், சுதுமலையைச் சேர்ந்த பசுபதி சுந்தரலிங்கம் பெண் தபோநிதி அம்மாள் ஆகிய இவர்களால் அதே இடத்தைச் சேர்ந்த நல்லையா பெண் புஸ்பராணி என்பவருக்கு பிரசித்த நொத்தாரிஸ் திரு.நா.முத்துவிநாயகம் அவர்களால் எழுதப்பட்ட 3592 ஆம் இலக்க 1992.11.14 ஆம் திகதிய அறுதி உறுதிப்படி தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய்கிராம உபஅலுவலக(ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நிலஅளவையாளர் திரு.எஸ். பாலேந்திரன் அவர்களால் வரையப்பட்ட 2016.03.09 இலக்க 2016.01.11 ஆம் திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனமானது " நம்பிராயன் தோட்டம் " நிலப்பரப்பு 03 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது நல்லையா பெண் புஸ்பராணி என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

செயலாளர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

### காரைநகர் களபூமி பாலாவோடை குறிஞ்சாக்குளி முத்துமாரியம்மன் பிரம்மோற்சவ விளம்பரம்

மேற்படி ,ஆலயத்தின் இவ்வருட பிரம்மோற்சவ உற்சவம் நடைபெறுவது பற்றி ஏற்கனவே பிரசுரமாகி வெளியிடப்பட்டுள்ளது.

**12.05.2016 ஆம் ஆண்டு கொடியேற்றம் என்று தவறுதலாக பிரசுரிக்கப்பட்டுள்ளது. வேத ஆகம சாஸ்திரமுறைப்படி இவ்வாலயத்தின் திருவிழா பத்து நாட்கள் மட்டுமே வருஷா வருஷம் நடைபெற்று வந்தது. அதன்படியே இந்த வருடமும் நடைபெறும் என்பதை அம்பிகை அடியவர்களுக்கு அறியத்தருகின்றோம்.**

13.05.2016 இல் கொடியேற்றத்திருவிழா
21.05.2016 இல் தேர்த்திருவிழா
22.05.2016 இல் தீர்த்தத்திருவிழா
23.05.2016 இல் பூங்காவனம்

இதன்படியே திருவிழாக்கள் நடைபெறும் என்பதை ஆலய அறங்காவலர் சபையினர் அறியத் தருகின்றார்கள்.

தலைவர்
ச.ச.இராஜரட்ணம்
ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய
அறங்காவலர் சபை

### சேவைநலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்



திரு.
தம்பையா
நிர்மலானந்தம்
(வலிகாமம் தெற்கு பிரதேச சபை வருமான பரிசோதகர்)

இன்று 09.05.2016 தனது 60 ஆவது வயதில் 38 வருட சேவையாற்றி சேவையிலிருந்து ஓய்வு பெறும் எனது நண்பன் தம்பையா நிர்மலானந்தம்

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர் ஓய்வு காலங்களிலும் நல்ல சுகபலத்தோடு வாழ இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

இணுவில்.

வாழ்த்துபவர்
நண்பன்
T.கணேசமூர்த்தி

### Spoken English

சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில
ஆசிரியர்
ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி
(Dip. in. English And Science London)
424/3. K.K.S வீதி. யாழ்ப்பாணம்.
நாகலிங்க சுவமிகள் வீதி சங்கானை.
077 675 1649

### மருந்தாளர் தேவை

பிரபல மருந்தகத்திற்கு மருந்தாளர் (Pharmacist) தேவை
077 083 1217

### நாஹறா மருத்துவ நிலையம்

* கை, கால் செயலிழக்கும் வாதம், ஆஸ்மா, இதய வால்பு அடைப்பு புண்கள், கண்டறிய முடியாத மர்ம நோய்கள் குணப்படல்.
* குழந்தையின்மைக்கான விசேட சிறப்பு சிகிச்சை.

077 321 2740
வங்கி முன்லேன்
சாந்தாவத்தை வயிரவர் கோயிலடி (ஜெகபதிவீடு)
மானிப்பாய்

### சமையலாளர் தேவை

பருத்தித்துறையில் இயங்கும் உணவகம் ஒன்றிற்கு ரொட்டி, அப்பம், தயாரிக்கத் தெரிந்தவர்கள் தேவை. தங்குமிட வசதியுமுண்டு.
076 826 0711

### தேவை

உரும்பிராய், கோண்டாவிலில் வீடுகட்டுவதற்கு 2 பரப்புக் காணியும், A9 வீதியில் அரியாலை, நாவற்குழி, கைதடியில் 4 பரப்புக் காணியும் தேவை.
078 615 5929

### காணி விற்பனைக்கு

கோப்பாய் இராஜவீதி சந்தியில் இருந்து 100 யார் தூரத்தில் இராஜ வீதி றோட்டில் 16 பரப்புக்காணி விற்பனைக்கு உள்ளது.
076 852 4875, 077 324 8915

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

### பிறேம் நகைமாடம்








09.05.2016

அக்ஷய திருதியயை முன்னிட்டு வாடிக்கையாளர்களுக்கு உங்கள் இல்லங்களில் ஐஸ்வர்யம் பெருகவும், செல்வம் செழிக்கவும், வளமான வாழ்விற்கு வாழ்த்துகின்றோம்.

அக்ஷய திருதியயை முன்னிட்டு விசேட விலைக்கழிவும் அன்பளிப்புப் பொருள்களும் வழங்கப்படும்.வாடிக்கையாளர்களுக்கு குலுக்கல் முறை மூலம் அதிர்ஷ்டசாலிகளுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

1. தங்க நாணயம்
2. குக்கர் (Gas Cooker)
3. பான் (fan)



மற்றும் 10 ஆறுதல் பரிசில்கள் வழங்கப்படும்
இன்று 09.05.2016 திங்கட்கிழமை இரவு 8.00 மணி முதல் 9.00 மணிவரைக்குள் அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.

171, பிறேம் பிளாசா, யாழ் வீதி, மானிப்பாய். 077 303 9572

### JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY

Vaddukoddai, Jaffna,
Sri Lanka.

**Computer Diploma Course - (Full time - 8 months)**
- ICT (Information & Communication Technology)

**Computer Certificate Courses - (Part time - 3/4 months)**
- Microsoft Office (Word, Excel, Access & Power Point)
- Computer Graphic Designer (PageMaker, Photoshop & CorelDRAW)
- Web Designing(Introduction of Internet,HTML,CSS,JAVA Script,PHP, MYSQL)
- AutoCAD (2D & 3D Modeling)
- Computer Hardware

- FIT (Foundation in Information Technology)- 6 months
(ICT Applications, English for ICT & Mathematics for ICT)
(Pre degree Course leads to BIT)
Certification offered by University of Colombo School of Computing(UCSC) , Sri Lanka.

A training Institute registered with the Tertiary and Vocational Education Commission (TVEC) under P25/0014

மேற்குறிப்பிட்ட கற்கை நெறிகள் 2nd week of May 2016 ஆரம்பமாகின்றன
தொடர்புகளுக்கு 0212250975/0213213139

## கத்திகளுடன் நடமாடிய அறுவர் கைதாகினர்

யாழ்ப்பாணம். மே 9
அபாயகரமான 2 கத்திகளை உடைமையில் வைத்துருந்த குற்றச்சாட்டில் 6 பேரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
பொலிஸாரின் இரவு ரோந்து நடவடிக்கையின் போது, வேம்பிராய் பகுதியில் கத்தியொன்றுடன் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியபோது, மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, அவர்கள் முன்னுக்கு பின்னர் முரணான வகையில் பதிலளித்ததுடன், தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தத் தவறியிருந்தனர் என பொலிஸார் குறிப்பிட்டனர்.
இதேவேளை கச்சாய் பகுதியில் இரவு கத்தியுடன் குற்றச்செயல் ஒன்றைப் புரிவதற்கு தயாராக நின்ற மூவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் கூறினர். இவர்கள் அனைவரும் சட்டவிரோத செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்களாக இருக்கலாம் என்ற சந்தேகம் வெளியிட்டுள்ள பொலிஸார் அவர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவித்தனர். (வ-4,107)

## பெண் காயம்

கணவனால் தாக்கப்பட்டதாகத் தெரிவித்து, மனைவி காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
ஏன் குடித்துவிட்டு வருகிறீர்கள்? என்று கணவனைக்கேட்டதாகவும், அதனால் அவர் தம்மைக் கடுமையாக தாக்கியதாகவும்குறித்தபெண் ஆரம்ப விசாரணையில் தெரிவித்துள்ளதாவும் பொலிஸார் கூறினர். இந்தச் சம்பவம் வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவில் இடம் பெற்றுள்ளது. (வ-107)

## தடம்புரண்டது கடற்படை பஸ் 21கடற்படையினர் படுகாயம்

விடுமுறைக் கொண்டாட்டத்துக்கு வீடு சென்ற கடற்படையினரை ஏற்றிச் சென்ற பஸ், விபத்துக் குள்ளானதில் 21 கடற்படையினர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலைகளில் சேர்க்கப் பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதுஎன்று செட்டிகுளம் பொலிஸார்தெரிவித்துள்ளனர்.
மன்னார் – மதவாச்சி பிரதானவீதியில்மெனிக்பாம் பகுதியில் பயணித்த போதே கடற்படை பஸ் விபத்துக்குள்ளானது.
குறித்த பஸ்ஸில் பயணித்த கடற்படையினர் விடுமுறையைக் கழிப்பதற்காக வீடுகளுக்குச் சென்றவர்கள் என்றும், காயமடைந்த 21பேரில் 19 கடற்படையினர் வவுனியா வைத்தியசாலையில் அவசர சிகிச் சைப் பிரிவிலும், இருவர் செட்டிகுளம்வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ற-ஐ-21)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜே.வி.பி. தலைமைத்துவம் மீண்டும் மாறும் சாத்தியம்

கொழும்பு, மே 8

மக்கள் விடுதலை முன்னணியில், தலைமைத்துவம் தொடர்பில் மீண்டும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. இது அந்தக் கட்சியில் பிரச்சினைக்குரிய விடயமாக தற்போது மாறியுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்கவின் நடவடிக்கை தொடர்பில் கட்சியின் அரசியல் சபை உறுப்பினர்களிடையே எழுந்துள்ள சந்தேகங்கள் இந்த முரண்பாட்டுக்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அனுர குமார திஸாநாயக்கவுக்கு எதிராக பல்வேறு முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. கட்சியின் தலைமைத்துவம் உடன் மாற்றப்படல் வேண்டும் எனவும் அதிருப்தியாளர்கள் கேட்டுள்ளனர்.

அடுத்த தலைமைத்துவத்துக்கு தொழிற்சங்கத் தலைவர் லால் காந்தவின் பெயரும், கட்சியின் செயலாளர் ரில்வின் சில்வாவின் பெயரும் முன்மொழியப்பட்டுள்ளன.

கட்சியின் உள்ளகத் தகவல்களின் படி, கடந்த நாள்களில் அனுர குமார திஸாநாயக்க திடீரென அயர்லாந்துக்குப் பயணம் மேற்கொண்டமை இந்த முரண்பாட்டுக்கு காரணம் எனக் கூறப்படுகின்றது.

அனுர குமார திஸாநாயக்க மே தினத்துக்காக இலங்கை வந்தவுடன் கட்சியின் உறுப்பினர்கள் இருவர் உட்பட வேறு இருவருடன் தலவதுகொட பிரதேசத்திலுள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் இராபோசனம் ஒன்றில் கலந்து கொண்டு நீண்ட கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார் என்றும் குறிப்பிடப்படுகின்றது.

இந்தப் பின்னணியிலேயே, தலைமைத்துவத்துக்கு எதிரான அதிருப்தி தோன்றியுள்ளது என்று கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஐ-5)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவம் வசமுள்ள காணிகளின் விவரங்கள் பாதுகாப்பு அமைச்சிடம்

## கிளி. அரச அதிபர் தெரிவிப்பு

கிளிநொச்சி, மே 9
கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பான விவரங்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதனை ஆராய்ந்தே அமைச்சு அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.- இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற அபிவிருத்தி மீளாய்வு கூட்டத்தின்போதே அரச அதிபர் குறித்த விடயத்தைத் தெரியப்படுத்தியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தின்போது அபிவிருத்தி குழு இணைத்தலைவர்களால் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அந்தத் தீர்மானங்களில் கிளிநொச்சி மாவட்டத்தில் தனியார் காணிகள், அரச காணிகளை ஆக்கிரமித்து முகாம்களை அமைத்துள்ள இராணுவத்தினர் உடனடியாக வெளியேற்ற வேண்டும் என்ற தீர்மானமும் எடுக்கப்பட்டிருந்தது.

இந்தத் தீர்மானத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் முன்மொழிய வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் வழிமொழிந்திருந்தார். பின்னர் அனைவருடைய ஏகோபித்த தீர்மானமாக இந்தத் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் முடிவடைந்து மூன்று மாதங்கள் கழிந்த நிலையில் நேற்று முன்தினம் மாவட்ட அபிவிருத்தி மீளாய்வு கூட்டம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில், அபிவிருத்தி குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றபட்டனவா? இல்லையா எனவும் இல்லை என்றால் அதற்கான காரணங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டிருந்தன.

> “கிளிநொச்சி மாவட்டத்தில் தனியார் மற்றும் அரச காணிகளில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் எங்கெங்கு எத்தனை ஏக்கர் நிலப் பரப்புக்களை ஆக்கிரமித்து வைத்துள்ளார்கள் என்று அடையாளப்படுத்தப்பட்ட விவரங்கள் யாவும் இரு நாள்களுக்கு முன்னர் பாதுகாப்பு அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளன.”

அதன்போது கிளிநொச்சி மாவட்டத்தில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரை வெளியேற்றுவது தொடர் பான தீர்மானமும் ஆராயப்பட்டது.

அங்கு கருத்து தெரிவித்த அரச அதிபர்-
கிளிநொச்சி மாவட்டத்தில் தனியார் மற்றும் அரச காணிகளில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் எங்கெங்கு எத்தனை ஏக்கர் நிலப் பரப்புக்களை ஆக்கிரமித்து வைத்துள்ளார்கள் என்று அடையாளப் படுத்தப்பட்ட விவரங்கள் யாவும் இரு நாள்களுக்கு முன்னர் பாதுகாப்பு அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக அவர்கள் ஆராய்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்று நம்புகின்றோம் என்று தெரிவித்திருந்தார்.

அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் முடிவில் இராணுவ வெளியேற்றம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன்-
இராணுவத்தை வைத்திருத்தல்- வெளியேற்றுதல் என்பது அரசினுடைய வேலை. ஆனால் இராணுவம் இருக்க வேண்டுமா? இல்லையா? என்பதை தீர்மானிப்பது தமிழ் மக்கள். கிளிநொச்சியினுடைய நகரப்பகுதியிலே 40 வீதமான காணிகள் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இதனால் எந்த அபிவிருத்தி திட்டங்களும் செய்ய முடியாமல் உள்ளது. ஆகவே இராணுவம் வெளியேற்றப்பட்ட வேண்டும் என்பதற்கு எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. ஆளுநர் என்ன சொல்லியிருந்தாலும், இராணுவம் இங்கிருத்து வெளியேறியே ஆக வேண்டும்- என்றார். (ற-ஜ-2)

# இத்தாவிலில் ப.நோ.கூ. சங்கக் கிளை அமைக்குமாறு மக்கள் கோரிக்கை

பளை, மே 9
பளை, இத்தாவில் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்து நான்கு வருடங்களாகியும், பச்சிலைப் பள்ளிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்படவில்லை என்று மக்கள் தெரிவிக்கின்றனர். அதனால் தாம் பெரிதும் சிரமங்களை எதிர் கொள்கின்றோம் என்றும்- அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது குறித்துக் கேட்ட போது; இத்தாவிலில் கிளை நிலையம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியடைந்துள்ளன. ஜுன் மாதம் தொடக்கம் அங்குள்ள தனியார் கட்டமொன்றில்கிளை நிலையம் இயங்கவுள்ளது என்று சங்கத் தலைவர் க.தியாகராசா தெரிவித்தார்.

பளைப் பிரதேசத்தில் 2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற போரால் அனைத்து மக்களும் இடம்பெயர்ந்திருந்தனர். பின்னர் 2012 ஆம் ஆண்டு இத்தாவில் சந்தியிலிருந்து, வீதியின் கிழக்குப் புறத்தில் மீளக் குடியமர்த்தப்பட்டனர்.

போரால் அங்கிருந்த அனைத்து குடியிருப்புக்கள், ஆலயங்கள், பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை உட்பட வர்த்தக நிலையங்கள் பாடசாலை போன்றவை முற்றாக அழிவடைந்திருந்தன.

மக்கள் மீள் குடியமர்வின் பின்னர் வீடமைப்புத் திட்டங்கள் மூலம் 282 குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளனர். எனினும் இத்தாவில் பகுதியில் மீள்குடியமர்வின் பின்னர் ஒரேயொரு வர்த்தக நிலையம் மட்டும் இயங்கி வருகின்றது. பல நோக்கக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளையை அமைக்குமாறு பகுதி மக்கள் சங்க நிர்வாகத்துடன் கோரிக்கை விடுத்திருந்த போதும், கிளை நிலையம் அமைக்கப்படவில்லை.

இதனால் இந்தப் பகுதி மக்கள் தமது அன்றாடப் பொருள்கள் வாங்குவதற்கு நான்கு கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் உள்ள பளைக்குச் செல்ல வேண்டிய நிலை காணப்படுகிறது. முன்னர் இத்தாவிலில் சங்கத்தின் கிளை இயங்கிய காலத்தில், இத்தாவில், வேம்பொடுகேணி, கச்சார் வெளி, செல்வபுரம், இந்திராபுரம் உள்ளிட்ட 600க்கும் மேற்பட்ட மக்கள் அதனால் பயன் பெற்றனர்.

தற்போது இந்திராபுரம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ள நிலையில், மக்களின் தேவைகளுக்காக இத்தாவிலில் ப.நோ.கூ. சங்கக் கிளை அமைக்கப்பட வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக சங்கத்தின் தலைவர் க.தியாகராசாவுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது; இத்தாவில் பகுதி மக்கள் மீள்குடியமர்வின்போது முழுமையான கட்ட வசதி இல்லாததால் சங்கத்தை இயக்க முடியவில்லை. சங்கத்துக்கான நிரந்தரக் காணி வசதியும், அங்கு இல்லாததால் நிரந்தரக் கட்டடம் அமைக்க முடிய வில்லை. இருப்பினும் தற்போது அங்குள்ள தனியார் கட்டடம் ஒன்றை வாடகைக்கு எடுத்துள்ளோம். இந்தக் கட்டடத்தில் சங்கக் கிளையை இயக்க சங்கத்தால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அனேகமாக ஜுன் மாதம் முதலாம் திகதி தொடக்கம் சங்கக் கிளை இயங்கும். - என்று தெரிவித்தார். (ற-ஜ-9)

## அலங்கார உற்சவமும் சங்காபிசேகமும்

யாழ்ப்பாணம், மே 9
ஏழாலை துர்க்காதேவி ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவமும், 108சங்காபிசேகமும்நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளன.

உற்சவத்தைத் தொடர்ந்து எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சங்காபிசேகமும், மகேஸ்வர பூசையும் நடைபெறவுள்ளது. (ற-ஜ-ரி)







# கடற்கரைக்கு உரிமைகோரும் தனி நபரால் மீன்பிடி பாதிப்பு

## பொலிகண்டி மீனவர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 9
வல்வெட்டித்துறை – பொலிகண்டிச் சந்தியிலிருந்து மூன்றாம் கட்டை வரையிலான கடற்கரைப் பகுதியை தனியார் ஒருவர் உரிமை கோரியுள்ளார். இதனால் மீன்பிடி நடவடிக்கைகள் பாதிப்படைகின்றன என்று அந்தப் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். இது குறித்து வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளனர்.

இது குறித்துக் கேட்டபோது –
முதலமைச்சர் அலுவலகத்தால் இது தொடர்பில் விளக்கம் கேட்கப்பட்டது. காணியை உரிமை கோரும் நபர் உறுதிகளை வைத்திருக்கின்றார். இந்த விடயத்தை முதலமைச்சருக்கு தெரியப்படுத்தியிருக்கின்றோம் என்று பருத்தித்துறைப் பிரதேச செயலர் தெரிவித்தார்.

[illegible] கடற்கரையை அண்டிய [illegible] சந்தியிலிருந்து மூன்றாம் கட்டை வரையிலான கரையோரப் பகுதிகளை இதுவரை காலமும் பயன்படுத்தி வந்தோம். அந்தப் பகுதியில் படகுகளை நிறுத்தி வைத்திருந்தோம். தற்போது படகுகளை அகற்றுமாறு தனி நபர் ஒருவர் தெரிவிக்கின்றார்.

நாம் படகுகளை நிறுத்தும் பகுதி தனக்குரியது என்று அவர் கூறுகின்றார். இதனால் நாம் பாதிக்கப்படுகின்றோம். எனவே இது தொடர்பில் நடவடிக்கை எடுங்கள் என்று மீனவர்க் முதலமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முதலமைச்சர் இந்த விடயம் தொடர்பில் பிரதேச செயலகத்திடம் விளக்கம் கோரியுள்ளார். அதற்குரிய விளக்கம் பிரதேச செயலகத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றுபருத்தித்துறைப் பிரதேச செயலர் ஜெயசீலன் தெரிவித்தார். அந்தக் காணியை உரிமை கோரும் நபர் அதற்குரிய காணி உறுதிப் பத்திரங்களை வைத்துள்ளார் என்று பிரதேச செயலர் குறிப்பிட்டார். (ஜ-5-101-109)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தேக நபர்களுக்கு பிணை

யாழ்ப்பாணம், மே 9
குருநகரில் மோதலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதாகி மறியலில் இருந்த 9 சந்தேகநபர்களும் யாழ். நீதிவான் நீதிமன்றால் கடுமையாக எச்சரிக்கப்பட்டு நேற்றுமுன்தினம் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த மாதம் 27 ஆம் திகதி குருநகர்தொடர்மாடிப் பகுதியில் பிறந்த தின நிகழ்வொன்றில் கலந்துகொண்ட உறவினர்கள் சிலர், உற்சாக மிகுதியில் இரு குழுக்களாக தமக் குள் மோதிக் கொண்டனர்.

இதனால் அவர்களில் சிலர் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸாரின் அவசர சேவை இலக்கமான 119 ஊடாக முறைப்பாடு கிடைக்கப்பெற்றது.

இதனையடுத்து குழப் பத்தில் ஈடுபட்டவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, மறுநாள் நீதிமன்றில் முற்படுத்தப் பட்டனர். நீதிமன்றால் நேற்றுமுன்தினம் வரை அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, அவர்களைக் கடுமையாக எச்சரித்த நீதிவான் சி.சதீஸ்தரன் ஒவ்வொருவரையும் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆட் பிணையில் செல்ல அனுமதியளித்தார். (ற-ஐ-103)

# தமிழ் மக்களில் அக்கறை கொள்ளாது சுகபோக அரசியல் செய்தவர் டக்ளஸ்

### கோடீஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

திருக்கோவில், மே 9
போரின் போது தமிழ் மக்கள் சிக்குண்டு வேதனையில் தவித்தபோது டக்ளஸ் தேவானந்தா மகிந்த அரசுடன் இணைந்திருந்தவர். தமிழ் மக்கள்பற்றிஎந்த அக்கறையும் கொள்ளாது தனது சுகபோக அரசியலில் வாழ்ந்தவர். இன்று தன்னால் எதுவும் முடியாத நிலையிலேயே போலி பசப்பு வார்த்தைகளையும், கொக்கரிப்புக்களையும் பேசி வருகின்றார். - இவ்வாறு அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அம்பாறை மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவருமான க.கோடீஸ்வரன் தெரிவித்தார்.

> கடந்த ஆட்சிக் காலத்தின்போது ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா எவ்வாறு தனது அரசியலை கொண்டு சென்றார் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் இன்று தமிழ் மக்கள் மீது ஏதோ மிகுந்த அக்கறை கொண்டவர் போல் கூக்குரல் இடுகின்றார்.

திருக்கோவிலில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரை யாற்றுகையிலேயே அவர் இவ் வாறு குறிப்பிட்டார். இதுகுறித்து அவர் மேலும் தெரி வித்துள்ளதாவது:-

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற குறைநிரப்பு பிரேரணையின் போது கூட்டமைப்பு அரசுடன் சேர்ந்து வாக்களிக்காமல் விட்டிருக்குமானால், இன்றுள்ள நல்லாட்சி கெட்டாட்சியாக மாறியிருக்கும். அவ்வாறு இல்லாமல் தமிழ் மக்களின் நலன்கருதி நல்லாட்சிக்கு முட்டுக்கொடுக்கும் ஒரு கட்சியாகவே கூட்டமைப்பு இருந்து வருகின்றது.

கடந்த ஆட்சிக் காலத்தின் போது ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர்டக்ளஸ்தேவானந்தா எவ்வாறு தனது அரசியலை கொண்டு சென்றார் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் இன்று தமிழ் மக்கள் மீது ஏதோ மிகுந்த அக்கறை கொண்டவர்போல் கூக்குரல் இடுகின்றார். கோழி போன்று கொக்கரித்துக்கொண்டு போலிப் பாசாங்கு காட்டிக் கொண்டிருக்கின்றார்.

அத்துடன் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களை சேர்த்துக் கொண்டு புதிய கட்சியொன்றை உருவாக்கியுள்ளார். தமிழ் மக்களுக்கு கிடைக்கவேண்டிய உரிமைகள், செல்வாக்குகள் அனைத்தையும் இல்லாமல் செய்ய வேண்டும். இதற்காக சில நாடுகளுடனும், பேரினவாத கட்சிகளுடனும் சம்பந்தத்தை ஏற்படுத்தி தமிழ் மக்களுக்கான விடிவு கிடைத்து விடக்கூடாது என்ற சதித் திட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது இவர்களது எந்தவிதமான கொக்கரிப்புக்கும் அடிபணியாது. இவர்களது கதைகளை பொருட்படுத்தப்போவதுமில்லை. எமது மக்கள் நலன் சார்ந்த விடயத்தில் கூட்டமைப்பு எப்போதும் எந்த விடயத்தை எடுத்துக்கொண்டாலும் சரியான பாதையிலே தான் செல்லும்.

பல சந்தர்ப்பங்களில் பேரினவாதிகள் கூட்டமைப்பைப் பிரித்தாள பல பிரயத்தனங்களை எடுத்தார்கள். ஆனால் தமிழ் மக்கள் அதற்குஒருபோதும் இடம்கொடுக்கவில்லை. இடம் கொடுக்கவும் மாட்டார்கள். மக்கள் எப்போதும் கூட்டமைப்பினர் மீதும், அதன் தலைமை மீது பற்றுறுதி கொண்டவர்களாக இருக்கின்றார்கள். அதற்காகவே எமது மக்களின் உரிமைகள், அபிவிருத்திகள் என்பவற்றைப் பெற்றுக்கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். எப்போது தமிழ் மக்களுக்கான விடிவு, உரிமை கிடைக்கவில்லையோ, அன்றே எமது கட்சி இந்த நல்லாட்சி அரசைத் தள்ளி வீழ்த்தி விட்டு வெளியேறும் என்பதில் மாற்றுக் கருத் துக்கு இடமில்லை - என்றார். (ற-ஐ-5-42)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒற்றையாட்சி தீர்வைத் தராததாலேயே சமஷ்டிக் கட்டமைப்பைக் கோருகிறோம்

## சிறிநேசன் எம்.பி. தெரிவிப்பு

> இனப் பிரச்சினைக்குத் தமிழர்கள் கனதியான தீர்வை எதிர்பார்கின்றனர். நல்லாட்சியில் எவ்வாறான அபிவிருத்திகள் நடைபெறும்?, எவ்வாறான தொழில்கள் கிடைக்கும்? என்றெல்லாம் சிந்தித்துக் கொண்டிருக்கின்றனர்.

கொழும்பு, மே 9

ஒற்றையாட்சியானது தமிழர் பிரச்சினைக்குத் தீர்வைத் தரவில்லை. இதனாலேயே உரிய அதிகாரப் பகிர்வுடன் சமஷ்டிக் கட்டமைப்பு அரசியல் தீர்வாகக் கோரப்படுகின்றது. - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது–

இனப் பிரச்சினைக்கு தமிழர்கள் கனதியான தீர்வை எதிர்பார்கின்றனர். நல்லாட்சியில் எவ்வாறான அபிவிருத்திகள் நடைபெறும்?, எவ்வாறான தொழில்கள் கிடைக்கும்? என்றெல்லாம் சிந்தித்துக் கொண்டிருக்கின்றனர்.

அதிகாரப் பரவலாக்கல் பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது. உலகில் ஒற்றையாட்சி, சமஷ்டி என இரண்டு வகையான ஆட்சிகள் நடக்கின்றன. ஒற்றையாட்சியானது எமது பிரச்சினைகளுக்கான தீர்வுகளைத் தரவில்லை. அந்த வகையில் தான் எமக்குரிய அதிகாரங்களைச் சரியான முறையில் பகிரும் வகையில் சமஷ்டிக் கட்டமைப்பைக் கோருகின்றோம். எமது மக்களின் பிரச்சினைகளை நாமே தீர்க்கும் வகையில் அதிகாரம் வேண்டும். மத்திய அரசில் தங்கியிருக்க வேண்டிய நிலை இல்லாமல், எமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் வகையில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும்.

அதேவேளை, கடந்த காலங்களில் ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டனர், கொல்லப்பட்டனர். அதற்கான விசாரணைகள் இன்னமும் நடத்தப்படவில்லை. சிவராம், நடேசன் விடயத்திலும் இப்படித்தான் நடக்கின்றது - என்று தெரிவித்துள்ளார். (ற-ஜ-5)

# அமெரிக்க நாடாளுமன்ற குழுவினர் இலங்கைக்கு

கொழும்பு, மே 9

அமெரிக்க நாடாளுமன்றத்துக்கும், இலங்கை நாடாளுமன்றத் துக்கும் இடையிலான, ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில், அமெரிக்க நாடாளுமன்றக் குழுவினர் இலங்கைக்கு வந்துள்ளனர்.

அமெரிக்க நாடாளுமன்றத்தில் காத்திரமான அரசாட்சி, ஜனநாயக நிறு வனங்களை வலுப்படுத் தல் போன்ற நோக்கங்களுக்காக அமைக்கப்பட் டுள்ள, ஜனநாயகப் பங்காளர் என்ற அமைப்பைச் சேர்ந்த, காங்கிரஸ் உறுப்பினர்களே இங்கு வந்துள்ளனர். நாடாளுமன்றத்துடனான ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில், இந்தக் குழுவினர் நாடாளுமன்றத் தின் உறுப்பினர்களுடன் கடந்த வியாழக்கிழமை கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர்.

கொழும்பிலுள்ள அமெரிக்கத்தூதுவர் அதுல் கெசாப் பால் ஒழுங்குபடுத்தப்பட்ட இந்தக் கலந்துரையாடலில், எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், அமைச்சர்கள் ரவூப் ஹக்கீம், மனோ கணேசன், தயாசிறி ஜெயசேகர மற்றும் பல நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண் டனர். (த-ஜ-5)

# காதலைத் தடுத்த தாயை கத்தியால் வெட்டிய மகள்

இளைஞனுடனான காதலைக் கைவிடுமாறு வற்புறுத்திய தாய் ஒருவரை, அவரது மகள் கத்தியால் வெட்டிக் காயப்படுத்தியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் பதுளை மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளது. காயங்களுக்கு உள்ளான தாயார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் தெரிவித்துள்ளதாவது–

தாயார் தனது மகளின் காதலைக் கண்டித்துள்ளார். தொடர்ச்சியாக இந்தக் காதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்துள்ளார். காதலைக் கைவிடும் படி அவர் வற்புறுத்தியுள்ளார். அதனால், மகள் சமையலறையில் இருந்த கத்தியை எடுத்து, தனது தயாரை வெட்டியுள்ளார் என்று குறிப்பிட்டனர். தாயாரின் உடல் நிலை கவலைக்கிடமானதாக இல்லை என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அத்துடன் மகளைத் தேடிப் பொலிஸார் வலைவிரித்துள்ளனர். (ற-ஜ-5)

# இலங்கை மின்சார சபையை ஆறு பிரிவுகளாக்க தீர்மானம்

கொழும்பு, மே 9

இலங்கை மின்சார சபையை ஆறு நிர்வாகப் பிரிவுகளின் கீழ் கொண்டு வருவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

அதன்பிரகாரம் மின் உற்பத்தி இயந்திரங்களை இயக்குவதும், பராமரிப்பதும் இருவேறு நிர்வாகப் பிரிவுகளின் கீழும், மின் விநியோகம் நான்கு நிர்வாகப் பிரிவுகளின் கீழும் கொண்டு வரப்படவுள்ளது என்று மின்சார சபை வட் டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறு பிரிக்கப்படும் ஆறு நிர்வாகப் பிரிவுகளுக்கு பொது மக்கள் பயன்பாட்டு ஆணைக் குழுவால் தனித்தனி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டு, தனித்தனியாக நிர்வகிக்கப்படும் எனவும் தெரியவருகின்றது.

மின்சாரம் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கென நியமிக்கப்பட்ட அமைச்சர்களின் குழுவால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைக்கு அமைவாக மின்சார சபை ஆறு நிர்வாகப் பிரிவுகளாகப் பிரிக்கப்படவுள்ளது.

அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, சம்பிக்க ரணவக்க, இரான் விக்கிரமரத்ன, சாகல ரத்நாயக்க அடங்கிய குழுவே இந்தத் தீர்மானத்தை எடுத் துள்ளது.

அந்தத் தீர்மானத்தை ஒரு மாத காலத்துக்குள் நிறைவேற்ற வேண்டும் என்று இலங்கை மின்சார சபைக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, அமைச்சர்களின் குழு மேற்கொண்டிருக்கும் இந்தத் தீர்மானத்தை ஆட்சேபித்து இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்கள் சங்கம் மின் சக்தி மற் றும் புதுப்பிக்கத் தக்க சக்தி அமைச்சருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது எனத் தெரிய வருகின்றது. (ற-ஜ-5)


## எமது அன்புக்கும் பாசத்துக்குமுரிய தந்தை

# ஜெயரட்ணம் பாலேந்திரன் அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அப்பா என்ற இச் சொல்லுக்குள் இத்தனை விம்பங்களாக ஆழக்கிடந்த நினைவுகள் இன்று எழுத்துருவாகின்றது. சொற்கள் பெரும் அலையாகின்றது. கைகள் சிறு துடுப்பாகின்றது. ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த சமூகத்தில் எல்லோரும் சமம் என மதித்தவர் நீங்கள். அன்பான பேச்சும் அதற்கிணையான செயலும் ஆற்றுபவர் நீங்கள். நேர்த்தியான நடத்தை கொண்டு வாழ்வில் எளிமையை இயல்பாக்கியவர் நீங்கள். உதவிகளை நாடியதில்லை. ஆனால் நீங்கள் உதவுவதற்கு என்றுமே தயங்குவதில்லை. துரத்தி வரும் சலுகைகளைத் தூரத்தே விரட்டும் மனிதர்களைக் கவிதைகளிலும் வரலாறுகளிலும் மட்டும் தான் என்றிருந்தோம். நேர்மையான சுயநலமற்ற வாழ்வு எந்த நவீன உலகிலும் சாத்தியம் என வாழ்ந்து காட்டியவர் நீங்கள்.

வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்ட தேசத்தில் உங்கள் பிள்ளைகள் மேல் கூட வன்முறை பிரயோகிக்காதவர் நீங்கள். இந்த சமூகத்தில் உறுதியாய் வாழ்ந்த நீங்கள் கணவராய், அப்பாவாய் குடும்பத்துக்குச் சிறந்த வழிகாட்டியாய் சமூகத்துக்கு நல்ல மனிதனாய் வாழ்ந்தீர்கள். பெண்ணுக்குக் கட்டுப்பாடுகள் விதித்து வீட்டுக்குள் முடங்கும் இந்தச் சமூகத்தில் உங்கள் கரம் பிடித்த நாள் முதல் முழுச் சுதந்திரத்துடன் வாழ்ந்தவர் அம்மா. அம்மா முடிவெடுக்கும் ஆற்றல், சமூகத் தொண்டாற்றும் செயற்றிறனும் கொண்டவராக இருப்பதற்குக் காரணம் நீங்கள் கொடுத்த தைரியமும் அன்பும் அப்பளுக்கற்ற நம்பிக்கையும் தான். ஆணாதிக்கம் வேரூன்றிய சமுதாயத்தில் உங்கள் மனைவியைப் பெருமையுடனும் சுயத்துடனும் தன் அடையாளங்களுடன் பெரிய தங்கச்சியாய் வாழ வைத்தவர் நீங்கள். உங்கள் கடைக்குட்டி பிரணவனுடன் சிறுபிள்ளையாய் மாறி விளையாடுவதை நேரில் காண வேண்டும் என்று காத்திருந்தோம். அது வெறும் காட்சியாய் போனதேனோ. எட்டு வருடங்களுக்குள்ளே பிரணவன் உங்கள் பிராணன் ஆகி பிரியாதவன் ஆகிவிட்டான். நீங்கள் வராவிட்டாலும் உங்கள் கதிரையில் யாரையும் இருக்கவிட மாட்டேன் என்கிறான் பிரணவன். ஆடம்பர செலவுகளை நீங்கள் ஒருபோதும் விரும்பியதில்லை. ஆயினும் எமது தேவைகளை நிறைவேற்றாமல் போனதுமில்லை. பணம், பொருள் ஈட்டும் நோக்குடன் வாழும் மனிதர்கள் மத்தியில் சமூக வாஞ்சையோடு வாழ வேண்டும் என்று வாழ்ந்து காட்டினீர்கள். இறுதியில் உங்கள் முகம் பார்க்க இயலாமல் தொலை தூரத்தில் துவண்டு நிற்கின்றோம். ஆனால் அப்பா நீங்கள் வளர்த்தெடுத்த உறுதிமட்டும் உரமாய் நிற்கின்றது. நீங்கள் அழுதது நாங்கள் ஒருபோதும் கண்டதில்லை. இயல்பாகவே அது என்னுள்ளும் குடிகொண்டது. உங்களிடம் கேட்க நினைத்தவற்றில் ஒன்று நீங்கள் எச்சந்தர்ப்பத்திலாவது அழுததுண்டா? ஏன் என்றால் யாரும் இல்லாத தனிமையான அறையில் இருட்டில் உட்கார்ந்து கொண்டு உங்கள் மகன்மார் உங்களைப் போல் வாழ வேண்டுமென்று நினைக்கின்றோம்.நாங்கள் சத்தமில்லாமல் அழுகின்றோம். அதேபோல் சொல்வதற்கும் நிறைய இருக்கின்றது. அதில் ஒன்று அன்று நான் உங்கள் சைக்கிளில் முன்னால் இருக்கின்றேன். யாழ்ப்பாணத்தில் கடை கடையாய் தேடுகின்றோம். கடைக்காரர்கள் கை விரிக்கின்றார்கள். கப்பல் வரவில்லையென்று ஏமாற்றத்துடன் வீடு திரும்புகின்றோம். ஆனால் மறுநாள் வாங்கிக் கொண்டு வருவீர்கள் என்று தெரியும். இன்று இங்கிலாந்தில் எளிதாகக் கிடைக்கும் 'மலிபன் சொக்லேற் கிறீம் பிஸ்கட்' ஆனால் இப்போது வாங்க முடியவில்லை. அந்த பிஸ்கட் தந்தது வெறும் சுவை மட்டுமல்ல. எங்களுக்கும் உங்களுக்குமான சண்டை, கோபம், மகிழ்ச்சி இன்னும் எண்ணற்ற உணர்வுகளை எல்லோர் வாழ்விலும் அப்பா என்பவர் நண்பனாக, தலைவனாக, ஆசானாக வழிகாட்டியாகப் பல்வேறு துறைகளில் பார்க்கப்படுவதுண்டு. ஆனால் நீங்கள் அப்பாவாகவே எப்போதும் எங்களுடன் இருந்தீர்கள் இருப்பீர்கள். சாவகச்சேரியில் பிறந்து சுதுமலையில் வாழ்ந்தவர். வாழ்ந்த இடத்தில் வாழ்ந்தவர். எல்லோருக்கும் வாஞ்சையோடும் உரிமையோடும் விடை கொடுத்தீர்கள் அப்பா. அது சொல்லிப்போது உங்கள் வாழ்வின் நேர்த்தியையும், கீர்த்தியையும்.

உங்கள் அன்பு மகன்கள்
குமரன், நந்தன், பிரணவன்,
திருமதி சிவகாம்பிகை பாலேந்திரன்

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

(சே/1088)
(11,18)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின் தடை அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 9
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று திங்கட்கிழமையும், நாளை செவ்வாய்க்கிழமையும் காலை 8.30 மணியலிருந்து மாலை 5.30 மணி வரை பின்வரும் இடங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும்.
இன்று திங்கட்கிழமை கிளிநொச்சி பிரதேசத்தில் வலைப்பாடு, கிராஞ்சி, வேரவில், சாந்தபுரம் ஆகிய இடங்களிலும், வவுனியா பிரதேசத்தில் ஆதி விநாயகர் கோவில் பிரதேசம், குருமன்காடு பிள்ளையார் கோவில் பிரதேசம் ஆகிய பிரதேசங்களில் மின் தடைப்படும்.
நாளை செவ்வாய்க்கிழமை யாழ்.பிரதேசத்தில் சங்கத்தானை, டச்சுறோட், அல்லைப்பிட்டி, மண்கும்பான், சோளாவத்தை, வங்களாவடி, மண்கும்பான் தேசிய நீர்வழங்கல் வடிகால்சபை, மண்கும்பான் கடற்படை முகாம், மண்டைதீவு கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும், வவுனியா பிரதேசத்தில் ஆதி விநாயகர் கோவில் பிரதேசம், குருமன்காடு பிள்ளையார் கோவில் பிரதேசம், மாமடு சந்தியலிருந்து பதவியாவரை, சி.இ.சி. கல்லுடைக்கும் ஆலை ஆகிய இடங் களிலும், மன்னார் பிரதேசத்தில் முதலைக்குத்தி ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ற-ஐ-ரி)

# கிளிநொச்சியின் முக்கிய இடங்களில் அபிவிருத்தி நகர் உருவாக்கத் திட்டம்

> கிளிநொச்சிக்கே உரிய தனித்துவத்தோடு விவசாய பண்பாட்டையும் உட்சேர்த்தவாறு நகராக்கம் அமையப் பெற வேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மாவட்ட மட்டத்தில் புத்திஜீவிகளை உள்ளடக்கிய முகாமைத்துவக் குழுவொன்றை உருவாக்கி நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து திட்டமிட்ட வகையில் இடம்பெற வேண்டும்.

கிளிநொச்சி,மே 9
கிளிநொச்சியின் முக்கிய பிரதேசங்களை அபிவிருத்தி நகரங்களாக உருவாக்குவதற்கு கிளிநொச்சி மாவட்ட செயலகம் திட்டமிடப்பட்டுள்ளது.
அதற்கமைய பரந்தன் உப நகரத்தை கைத்தொழில் மைய நகரமாகவும், கரடிப்போக்குச் சந்தியை சேவைகளின் மைய நகராகவும், கிளிநொச்சி நகரை கைத்தொழில் வணிக சேவைத் தொழிற்றுறை நகராகவும், இரணைமடுச் சந்தியை சுற்றுலா மற்றும் கல்வி அபிவிருத்தி நகராகவும், திருமுறிகண்டி பண்பாட்டு நகராகவும் உருவாக்குவாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.
கிளிநொச்சி மாவட்டத்தை நகரமயமாக்கல் திட்டத்தின் கீழே இவ்வாறு திட்டமிடப்பட்டுள்ளது.
நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கிளிநொச்சி நகரை திட்டமிட்ட வகையில் வடிவமைப்பது தொடர்பான விசேட கலந்துரையாடலிலே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.
கிளிநொச்சி நகரத்தை திட்டமிட்ட வகையில் அபிவிருத்தி செய்வது தொடர்பான சாத்தியப்பாடுகள் குறித்து அபிவிருத்தி குழு இணைத்தலைவர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு விளமளிக்கும் வகையில் விரிவாக ஆராயப்பட்டன.
அத்துடன் இந்த நகரங்களுக்கிடையேயான இணைப் புச்சாலைகள் ஏ-9 வீதிக்குச் சமாந்தரமாக உருவாக்கப்பட்டு, அபிவிருத்தி செய்யப்படும் எனவும் மாவட்ட செயலகத்தால் இணைத்தலைவர்களுக்கு காணொலிகளுடன் விளக்கமளிக்கப்பட்டன.
இந்த விளக்கத்தை அடுத்து கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன்- கிளிநொச்சி நகரத்தைத் திட்டமிட்டு அமைப்பதற்கான முன்வரைவு இங்கே முன்னளிக்கப்பட்டமை மகிழ்ச்சியளிக்கின்றது. இங்கு தரப்பட்டிருக்கின்ற நகராக்கல் திட்டம் தொடர்பில் தொடர்ச்சியான கருத்துப் பரிமாற்றங்கள், உட்சேர்க்கைகள், நீக்கங்கள் அவசியமாகின்றன. கிளிநொச்சிக்கே உரிய தனித்துவத்தோடு விவசாய பண்பாட்டையும் உட்சேர்த்தவாறு நகராக்கம் அமையப் பெற வேண்டும். எமது மண்ணில் பிறந்து வளர்ந்து கல்வித்துறையில் மிளிர்கின்ற கல்வியியலாளர்களிடமும் சமூக அக்கறையோடு இயங்குகின்ற, சமூக நேசிப்பாளர்களிடையேயும் புலம்பெயர்ந்து வாழுகின்ற இந்த மண்ணைச் சேர்ந்தவர்களிடமிருந்தும் கருத்துக்கள் பெறப்பட்டு முடிவுகள் எடுக்கப்படவேண்டும். இதற்காக மாவட்ட மட்டத்தில் புத்திஜீவிகளை உள்ளடக்கிய முகாமைத்துவக்குழுவொன்றை உருவாக்கி நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணைந்து திட்டமிட்ட வகையில் இடம்பெற வேண்டும்.- என்றார்.
இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கயன் இராமநாதன், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள் மற்றும் துறைசார் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (ற-ஐ-21,426)

## சின்னம் சூட்டும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,மே 9
கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் கனிஷ்ட மாணவ முதல்வர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பாடசாலை முதல்வர் திருமதி லு.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணக் கல்வி வலய உடற் கல்வி சேவைக் கால ஆசிரிய ஆலோசகர் என். ஸ்ரீமுருக தாஸ்காந்தன் கலந்து கொள்ளவுள்ளார். (ற-ஐ-422)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 9
செயற்றிறன் அரங்க இயக்கத்தின் தலைவர் தே. தேவானந்தனின் நல்லூர் நாடகத் திருவிழா -2015 என்னும் நூல் வெளியீடு எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆசிரியர் பா.செல்வேள் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் துணைத்தூதுவர் ஆ. நடராஜனும், சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்ட செயலக பிரதம கணக்காளர் கதிரவேல் கமலேஸ்வரனும் கலந்து கொள்ள வுள்ளனர். (ற-ஐ-ரி)



வவுனியா உக்கிளாங்குளம் மக்கள் குடியிருப்பு பகுதிக்குள் நேற்றுமுன்தினம் அதிகாலை நுழைந்த முதலை ஒன்று, அந்தப்பகுதி இளைஞர்கள் சிலரால் மடக்கிப் பிடிக்கப்பட்டது. குறித்த முதலை பொலிஸார் மற்றும் வனவிலங்கு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-21)


# விபத்தை ஏற்படுத்தியவருக்கு அபராதத்துடன் சமூகப்பணி

சாவகச்சேரி, மே 9
மதுபோதையில் வாகனத்தைச் செலுத்தி விபத்தை ஏற்படுத்தியதுடன், விசாரணைக்குச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தருக்கு லஞ்சம் கொடுக்க முயன்ற நபருக்கு சாவகச்சேரி நீதிமன்று 13 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்ததுடன், அவரை 80 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்துமாறும் உத்தரவிட்டது.
கொடிகாமம் பாலாவி தெற்கில் வசிக்கும் குறித்த நபருக்கு எதிராக, கொடிகாமம் பொலிஸார் மதுபோதையில் வாகனம் செலுத்தியமை, ஆபத்தான முறையில் வாகனத்தைச் செலுத்தி விபத்தை ஏற்படுத்தியமை, விசாரணைக்குச் சென்ற பொலிஸாருக்கு லஞ்சம் கொடுக்க முற்பட்டமை போன்ற குற்றச்சாட்டுக்களுடன் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.
வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். அஇதனையடுத்து இந்த நபருக்கு 13 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து, 80 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்த நீதிமன்ற சமுதாயஞ் சார் சீர்திருத்தப் பிரிவில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டது.
இதேவேளை- மதுபோதையில் வீடுகளில் குழப்பம் விளைவித்த குடும்பத் தலைவர்கள் இருவரை 80 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.
சாவகச்சேரி பொலிஸார் மட்டுவில் தெற்கு மற்றும் நாவற்குழி ஐந்து வீட்டுத் திட்டம் ஆகிய இடங்களில் அயலவர்கள் கொடுத்த தகவலையடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். (ற-ஐ-9)

## மரண அறிவித்தல்

### Dr. மயிலு குணரட்ணம்

(ஓய்வுபெற்ற வைத்திய கலாநிதி - யாழ்.போதனா வைத்தியசாலை)



அரியாலை, கண்டி வீதியைப் பிறப்பிடமாகவும், இல.82, புங்கங்குளம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட Dr. மயிலு குணரட்ணம் 06.05.2016 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயிலு - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான மகாதேவா - கமலாதேவி தம்பதியரின் பாசமிகு மருமகனும், சந்திராணியின் அன்புக் கணவரும், சத்தியேந்திரா, புவீந்திரா, யசீந்திரா, சாமினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், அருள்ஜோதியின் அன்புமிகு மாமனும், நேத்தன், டிலன் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ் சென்றவர்களான ஜெயரட்ணம், Dr விஸ்வரட்ணம் மற்றும் Dr.செல்வரட்ணம், ஜெயராணி, காலஞ் சென்ற யோகராணி மற்றும் Dr. கணேசரட்ணம், புஸ்பராணி, Dr.செல்வராணி, புனிதராணி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2016) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 4 மணியளவில் சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

82, புங்கங்குளம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

021 222 2703

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பாட்டும் நானே பாவமும் நானே என்ற போக்கில் நல்லாட்சி அரசு!

இரப்பானைப் பிடித்ததாம் பறப் பிராந்து என்று தமிழில் பேச்சு வழக்கு வாசகம் ஒன்று உண்டு. அதே நிலை பூநகரி பரமன்கிராய் வாழ்தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது!

அவர்களுக்குச் சொந்தமான காணிகளை, இராணுவத்தினருக்குப் பறிப்பதற்கான ஏற்பாட்டின் முதற்கட்டம் இன்று திங்களன்று ஆரம்பமாகிறது; அதற்கான நில அளவைப் பணிகளும் இன்று ஆரம்பமாகின்றன.

பூநகரி பரமன்கிராய் வாழ் தமிழ் மக்களின், அரசியல் தலைவர்களின் எதிர்ப்பையும் விஞ்சி, ஒரு துளியும் மக்கள் கோரிக்கைக்கு காது கொடுக்காது, அரசு -- படையினர் - தமக்கு உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி செயற்படப் போகிறார்கள்!

ஆண்டாண்டு காலமாக (எங்கள்) தமிழ் மக்கள் வாழ்ந்த தாய் நிலம், அதிகாரத்தைப் பயன்படுத்தி அபகரிக்கப்படும் நல்லாட்சி அரசின் பெரும் கொடுமை அரங்கேற்றப்பட உள்ளது!

மகிந்த ஆட்சிக்கும் மைத்திரி அரசுக்கும் இடையில், ஒரு துளியேனும் வித்தியாசம் இல்லை என்பது நிரூபிக்கப்படுகிறது! பூநகரி பரமன்கிராய் வாழ் தமிழ் மக்களின் பூர்வீகச் சொத்து, பலாத்காரமாக அரசால் பறித்து எடுக்கப்படும் “கொடுமை” அரங்கேற்றப்பட - செயற்படுத்தப்பட உள்ளது.

தமிழ் மக்களுடைய பூர்வீகக் காணிகளைப் பறித்து எடுப்பதுதான் மைத்திரி அரசின் தார்மீகம் என்றால், அது நன்றி மறந்த செயல் என்பதற்கும் அப்பாற்பட்ட துரோகம் அன்றி வேறல்ல!

மைத்திரி அரசின் நல்லாட்சி, நல்லிணக்கம் இது என்றால் --

அது “ஆசியாவின் அதிசயம்” என்ற நிலைக்கு உயரும் - அதனால் பாதிப்பும் பின்னடைவும் தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி, இந்த நாடு முழுவதற்கும் என்பதை அரச தலைவர்கள் உணர்வார்களா...??

இத்தனைக்கும், வடக்கில் படையினர் வசமுள்ள மொத்தக் காணிகளின் விவரங் கள் குறித்து, ஜனாதிபதியின் செயலாளர் அபயக்கோன் தலைமையில் ஆராயப்பட்ட தாகத் தகவல்.

அவ்வேளை, மக்களிடம் -- உரிமையாளர்களிடம் -- காணிகளை வழங்குவது குறித்து ஆராயப்பட்டதாகவும் தகவல்.

சமவேளையில் --

பூநகரி - பரமன்கிராய் பிரதேசத்தின், பொதுமக்களின் கடும் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது, அவர்களின், காணிகள் பலாத்காரமாகப் பறித்து எடுக்கும் கைங்கரியங்கள் இடம்பெற உள்ளன.

பாட்டும் நானே, பாவமும் நானே என்ற அதர்மம், தமிழ் மக்களிடம் தான் அரங்கேற்றப்பட வேண்டும் என்ற போக்கு, நோக்கு என்பது அவர்களுக்கு இழைக்கப்படும் பெரும் கொடுமையிலும் கொடுமை அல்லவா?

மொத்தத்தில் தமிழ் மக்கள், தொடர்ந்து ஏமாற்றப்படுவதுடன், அவர்களுக்கு உரித்தான உரிமைகள் தட்டிப் பறிக்கப்படும் என்பதே நிஜத்திலும் நிஜம்! யாரிடம் அவர்கள் சொல்லி அழுவது....??

# மைத்திரி அரசின் சவாலும் மகிந்தவின் எதிர்பார்ப்பும்

எம்.ஐ.முபாறக்



மைத்திரி - ரணில் அரசு எதிர்நோக்கி வரும் சவால்களுள் மிக முக்கியமானவையாக அரசியல் தீர்வையும், போர்க் குற்ற விசாரணையையும் குறிப்பிடலாம். இவை இரண்டும் பெரும்பான்மை இன மக்களுடன் நேரடியாக தொடர்பு பட்டவையாக இருப்பதால் இவற்றை இராஜதந்திர ரீதியில் கையாள வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது.


இவை இரண்டும் வடக்கு - கிழக்குத் தமிழருக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பவையாக இருக்கின்ற போதிலும், இவை சிங்கள மக்களுடனும் தொடர்பு படுவதே இந்த சிக்கல் நிலைக்குக் காரணம்.

அரசு தமிழர் சார்பில் இதுவரை காலமும் தீர்த்து வைத்த சில பிரச்சினைகளை எடுத்துப் பார்த்தால் அவை எந்த வகையிலும், சிங்கள மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவை அல்ல. ஆனால், அரசியல் தீர்வு மற்றும் போர்க் குற்றச்சாட்டு போன்ற விடயங்கள் அப்படியானவை அல்ல. இவை சிங்கள மக்களுடன் பின்னிப் பிணைந்து நிற்கின்றன.

தமிழருக்கு அதிக அதிகாரங்களை வழங்கக்கூடியதாக அரசியல் தீர்வு அமைந்து விட்டால் அது தமிழீழத்தை உருவாக்கிவிடும் என்று சிங்களவர்கள் அஞ்சுகின்றனர். இதனால்தான் இந்த விடயங்களை மிகவும் கவனமாகக் கையாள வேண்டியுள்ளது. அதற்காகத்தான் அரசியல் தீர்வை உள்ளடக்கியதான புதிய அரசியல் அமைப்பு உருவாக்கம் தொடர்பில் அரசு மக்கள் கருத்துக்களைத் திரட்டுகின்றது.

அடுத்தது போர்க் குற்ற விசாரணை. இது அரசியல் தீர்வை விடவும் சிக்கலானது. இந்த விசாரணையின்போது இராணுவத்தினர் குற்றவாளிகளாகக் காணப்பட்டு அவர்கள் தண்டிக்கப்பட்டால் அது இராணுவத்துக்கு இழைக்கப்படும் துரோகமாகப் பார்க்கப்படும். இராணுவத்துக்கு எதிரான அரசாக இந்த அரசு பார்க்கப்படும். அது மகிந்தவுக்கு வாய்ப்பாக அமைந்து விடும்.

> போரை வெற்றி கொண்ட இராணுவத்தினருக்குத் தலைமை தாங்கியவர் மகிந்த என்பதரல் மகிந்தவின் மீது இராணுவத்தினருக்கு மதிப்பு அதிகம் என நம்பப்படுகின்றது. அவ்வாறான மகிந்தவின் பாதுகாப் புக்கு நியமிக்கப்பட்ட இராணுவத்தினர் மகிந்தவுக்கு விசுவாசமாக இருக்கக் கூடும் என்றும், அவ்வாறு இருக்கும் பட்சத்தில் அரசுக்கு எதிரான மகிந்தவின் சதி நடவடிக்கைகளுக்கு அந்த இராணுவத்தினர் துணைபோவர் என்றும் அரசு கருதியது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அரசு இராணுவத்தினருக்கு எதிரானது அல்ல என்று நிரூபிப்பதற்காகவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன போர்க் குற்றம் என்ற பதத்தை நீக்கி மனித உரிமை மீறல்கள் என்று இப்போது கூறிவருகின்றார்.


போரைவெற்றிகொண்ட படையினருக்குத் தலைமை தாங்கினார் என்பதற்காகப் படையினர் மத்தியில் மகிந்தவுக்கு செல்வாக்கு உண்டு என்பதை அறிந்த அரசு அந்த செல்வாக்கை அழிப்பதற்கான முயற்சியில் இறங்கியது.


அந்த இராஜதந்திர நடவடிக் கையை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காகத்தான் ஐக்கிய தேசியக் கட்சி சரத் பொன் சேகாவைத் தன்னுடன் இணைத்து அமைச்சராக்கியது. சரத் பொன்சேகாவின் ஆலோ சனைப்படி மகிந்தவுக்கு இருக்கும் செல்வாக்கைத் தகர்த்து அரசு மீது படையினருக்கு நம்பிக்கை ஏற்படும் செயற்பாடுகளில் அரசு ஈடுபட்டுள்ளது.

சரத் பொன்சேகா நாடாளுமன்ற உறுப்பினரானதும் அவர் மகிந்தவுக்கு எதிரான தாக்கு தலை நாடாளுமன்றில் இருந்து தொடங்கினார். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மகிந்த பணம் கொடுத்தமை, போர் முடிந்ததாக அறிவிக்கப்பட்ட 2009 மே மாதம் 19 ஆம் திகதி புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடன் இருந்தமை போன்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அதிரடியாக ஆட்டத்தைத் தொடக்கி வைத்தார். அந்த ஆட்டத்தின் அடுத்த பகுதி தான் மகிந்தவுக்கான இராணுவப் பாதுகாப்பை நீக்கி அவர்களுக்குப் பதிலாகப் பொலிஸாரை நியமித்தமை.

மகிந்தவின் பாதுகாப்புக்கு நியமிக்கப்பட்டவர்கள் இராணுவத்தினர் என்பதால் அவர்கள் மகிந்தவுக்கு விசுவாசமாக இருக்கக்கூடும் என்றும், அவ்வாறு இருக்கும் பட்சத்தில் அரசுக்கு எதிரான மகிந்தவின் சதி நடவடிக் கைகளுக்கு அந்த இராணுவத்தினர் துணைபோவர் என்றும் அரசு கருதியது.

இதனால், மகிந்தவின் அந்தரங்க - அரச எதிர்ப்பு செயற்பாடுகளை அரசால் அறிந்து கொள்ள முடியாமல் போய்விடும். ஆகவே, அரசுக்கு எதிரான மகிந்தவின் செயற்பாடுகளை அவ்வப்போது அறிந்து கொண்டு அதற்கேற்ப காய்நகர்த்துவதற்கு அரசின் உளவாளிகள் மகிந்தவின் அருகில் இருப்பது அவசியமாகின்றது. அதற்கு ஏற்பவே அரசு இராணுவத்தினரை நீக்கிவிட்டு பொலிஸாரை மகிந்தவின் பாதுகாப்புக்கு நியமித்துள்ளது.





> மகிந்தவின் அந்தரங்க - அரச எதிர்ப்புச் செயற்பாடுகளை அரசால் அறிந்து கொள்ள முடியாமல் போய்விடும். ஆகவே, அரசுக்கு எதிரான மகிந்தவின் செயற்பாடுகளை அவ்வப்போது அறிந்துகொண்டு அதற்கு ஏற்ப காய்நகர்த்துவதற்கு அரசின் உளவாளிகள் மகிந்தவின் அருகில் இருப்பது அவசியமாகின்றது. அதற்கு ஏற்பவே அரசு இராணுவத்தினரை நீக்கிவிட்டு பொலிஸாரை மகிந்தவின் பாதுகாப்புக்கு நியமித்துள்ளது.

இந்த உண்மையை மகிந்த உணர்ந்ததால் தான் இந்தப் பாதுகாப்பு மாற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றார். தனது செயற்பாடுகள் அனைத்தும் தற்போது நியமிக்கப்பட்டிருக்கும் பொலிஸாரின் ஊடாக உடனுக்குடன் அரசுக்குத் தெரிய வரும் என மகிந்த அஞ்சுகின்றார்.

இது மகிந்த ஆட்சியில் அவரால் பின்பற்றப்பட்ட பாதுகாப்பு முறைமை தான். எதிர்க்கட்சியினரின் நடமாட்டத்தை எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பாதுகாப்புப் பிரிவினரின் ஊடாகத்தான் மகிந்த அறிந்து கொண்டார். இதனால் அப்போது எதிர்க்கட்சி முக்கியஸ்தர்கள் முக்கியமான கூட்டங்களுக்கு பாதுகாப்பின்றியே சென்றனர்.

அந்தப் பாதுகாப்பு முறைமை இன்று மகிந்தவையே திருப்பித் தாக்கத் தொடங்கியுள்ளது. இராணுவத்தினர் மகிந்தவின் செயற்பாடுகளுக்குத் துணையாக இருப்பார்கள் என அரசு ஊகித்தது சரி தான் என்பது பின்பு தெரியவந்தது.

அந்த இராணுவத்தினர் மகிந்தவிடம் இருந்து விடைபெற்றுச் செல்லும் போது அவரது காலில் வீழ்ந்து வணங்கி - அதிக மரியாதை செலுத்தி விட்டுத்தான் - சென்றனர்.

ஆகவே, அரசின் கணிப்பு சரி என்பதை அரசு பின்னர் உணர்ந்து கொண்டது. இந்தப் பாதுகாப்பு மாற்றம் பொன்சேகாவின் ஆலோசனைப்படியே செய்யப்பட்டது என்று உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பாதுகாப்பு ஏற்பாட்டைச் செய்தவர் பொன்சேகா தான் என்பதை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நாடாளுமன்றில் சொல்லாமல் சொல்லிவிட்டார். பொன்சேகா மகிந்தவுக்கு எதிராக மிகவும் நுட்பமாகத் காயை நகர்த்திச் செல்கிறார் என்பது இதன் மூலம் தெளிவாகின்றது.

மகிந்தவைச் சுற்றி இப்போது அரசின் கண்கள் 24 மணி நேரமும் கண்காணிக்கின்றன என்பதை மகிந்த உணர்ந்துகொண்டதால் தான் அவர் இந்தப் பாதுகாப்பு மாற்றத்தை எதிர்க்கின்றார்; நாடாளுமன்றில் தனது விசுவாசிகளை வைத்து கலவரத்தை ஏற்படுத்துகின்றார்.

ஆனால், மகிந்தவின் இந்தக் காடைத்தனம் தொடர்ந்தும் பிரதமர் ரணிலின் இராஜதந்திரத்துடன் போட்டியிட்டுத் தோற்கப் போவது நிச்சயமே. ■

# பெத்த மனம் பித்து பிள்ளை மனம் கல்லு

நவீன யுகத்தில் எத்தனையோ மாற்றங்கள், விசித்திரங்களும் வியப்புகளும் ஏராளம் தினம் நடந்தேறும் நிகழ்வுகள் சில மகிழ்வையும் பல மனதை நெகிழவைத்து நெருடியும் செல்கிறன.

இன்றைய இளையவர்கள் அழிவுப்பாதையை நோக்கிப் போகும் வேகம் அச்சத்தையும் வேதனையையும் தருகிறது. தன் வழியே தனிவழியாகி பெறுமதிமிக்க தனது அழகிய வாழ்வைச் சூழல் மாசடைவதுபோல் மாற்றம் காணச்செய்துள்ளனர். இவர்களின் எதிர்காலம் என்ன ஆகுமோ என்ற கேள்விக்குறியாய் கேரளக் கஞ்சாவும் மது மயக்கமும் விட்டு இவர்கள் தெளிவு பெறுவது எப்போது.

இவர்களின் அடிதடி அடாவடித்தனங்களால் வருணபகவான் பொறுமை இழந்து கொதித்தெழுந்து வெப்பத் தணலில் எம்மை எல்லாம் வேகவைத்துவிட்டானோ. தற்போது சில நடுத்தர வயதினர் கூடப் பெற்றோரை மதித்து பாசமுடன் இருப்பதைக் காண்பது அரிது. இன்று கௌரவமான சூழலில் பிறந்தோரும் தனது மனைவி பிள்ளைகள் சகிதம் பெற்றோரை உதாசீனப்படுத்துவதும் - பாராபட்சம் காட்டுவதும் வழமையான நிகழ்வுகள். இவர்களுக்கு வாழ்க்கைத் துணை தேடித்தரும் பெற்றோர் அந்த நிழலில் வாழ வேண்டிய கட்டாயம். இது பிள்ளையின் பாசப் பிணைப்பும் கடமையும் கூட. பிஞ்சு விரல் பிடித்து நடை பயிற்றுவித்து அந்த ஸ்பரிசத்தோடு எத்தனையோ கனவுகள், கற்பனைகளோடு, தியாகங்களோடு வளர்த்தவர்களைப் பெரும் சுமையாய் இல்லங்களிலும் தெருவோர யாசகர்களாய் அலையவிடுவது துர்ப்பாக்கியமே. சற்று வசதியானவர்கள் என்றால் இருக்கும்வரை சுரண்டி அம்போ என்று கைவிடுவதும் மனதில் இருப்பதைப் பகிர்ந்து கொள்ளமுடியாமல் மனவிரக்தியுடன் மனநலம் பாதிக்கும் நிலைமைக்கு தள்ளப்படுவதும் பெற்ற மனம் பித்தாகி பிள்ளை மனம் கல்லாகிப் போனதால் நஞ்சுண்டு உயிரை மாய்க்கும் நிலைமைக்கு முதியோர் தள்ளப்படுவதும் மகா கொடுமை.

பிள்ளைகள் பேரன், பேர்த்திகள் என்று இறுதி மூச்சுவரை உழைக்கும் இவளை அன்னையர் தினத்தன்று வாழ்த்தி வணங்குவோம்.

**- உதயன் வாசகி, கல்வயல்.**

# சம்பந்தப்பட்டவர்கள் கொஞ்சம் கவனியுங்கள்

புதுக்குடியிருப்பு - கைவேலி (புரந்தன் வீதி) திம்பிலிக்குச் செல்லும் சந்தியில் இருந்து முறிகண்டி பிள்ளையார் கோயில் வரையான இடத்தில் இரவு நேரம் மாடுகள் படுத்துறங்குவதால், மக்களின் போக்குவரத்தில் பெரும் சிரமங்கள் ஏற்படுகின்றன.

மேய்ச்சலுக்குப் போய்விட்டு வரும் மாடுகள் இருட்டாகியவுடன் தங்கள் இடத்துக்குப் போகாமல், குறிப்பிட்ட இடத்தில் தங்கி விடுகின்றன. இதனால் வீதியால் போகும் மக்கள் மட்டுமல்ல, வாகனங்களும் பெருமிடரை எதிர்கொள்கின்றன. விபத்துக்களும் ஏற்படுகின்றன.

புதுக்குடியிருப்பு-கைவேலி வயற்பிரதேசங்கள் சிறுபோகம் விதைத்து நெல் முளைவிட்டிருக்கும் நேரத்தில், மேய்ச்சல் மாடுகளைக் கட்டுப்படுத்தாவிட்டால், கமக்காரர் விளைச்சலில் நட்டத்தை எதிர்நோக்கவேண்டிய நிலைமைகள் தோற்றம் கொள்ளும்.. எனவே சம்பந்தப்பட்ட கால்நடை உரிமையாளர்களும் அரச அதிகாரிகளும் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

**- வன்னிவாசி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடாவின் அல்பேர்ட்டா மாகாணத்தில் பரவிய தீ, அயல் மாகாணமான சஸ்காச்சுவானுக்கும் பரவ ஆரம்பித்துள்ளது. வேகமாகப் பரவி வரும் இந்தத் தீயைக் கட்டுப்படுத்த ஆயிரத்து 400 தீயணைப்பு வீரர்கள், 133 உலங்கு வானூர்திகள், 14 வாயுத்தாங்கிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. முன்னெச்சரிக்கை பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், சஸ்காச்சுவான் மாகாணத்தில் இருந்தும் மக்களை முன்னெச்சரிக்கையுடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அல்பெர்ட்டா மாகாணத்தில் 90 ஆயிரம் பேர் இது வரை வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். (ஐ-ரி4)

## சிரியா
## ஊடக

டமாஸ்கஸ்,மே 9
சிரியாவின் அலெ
கடந்த வருடம் ஜூ
மற்போன ஸ்பானி
ளர் மூவர் தற்போது
யப்பட்டுள்ளனர்
ஊடக அமைப்பின்
வித்துள்ளார்.
நேற்றுமுன்தினம் அ
வலைத் தளமான
னைத் பதிவேற்றியு
னியோ பம்லிகா,
லோபஸ் மற்றும்
ஆகியோர் விடுவிக்
அவர் தனது பக்கத்தி
பிட்டுள்ளார். ஆன
தவிர வேறு எந்தத் த

## எகிப்
## சுட்

கைரோ, மே9
எகிப்தில் மாறு வேடத்
அதிகாரி உட்பட 8 பொ
தெரியாத துப்பாக்கி
கொன்றனர். ஹெல்
பொலிஸ் வாகனம் த
இந்தச் சம்பவம் இ
என உள்துறை அமை
தெரிவித்துள்ளது.
தானியங்கி துப்பாகி
ஆயுதக் குழுவினர்,

## ஈரான் இராணுவத்தினர் 13 பேர் சிரியாவில் சாவு

தெகரன், மே 9
சிரியாவில் இடம்பெற்று வரும் போரில் ஈரானிய இராணுவ வீரர்கள் 13 பேர் உயிரிழந்துள்ளனர். இவர்கள் ஈரானின் உயர் அடுக்குப் பாதுகாப்பு வீரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் போரில் 21 பேர் காயமடைந்துள்ளனர் என ஈரானிய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.
கான் ரொமன் கிராமத்தைப் போராளிகள் கைப்பற்றிய தாக்குதலில் இவர்கள் உயிரிழந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பல போராளிக் குழுவினர் இணைந்து தாக்கிய தாக்குதலில் குறித்த பகுதி கைப்பற்றப்பட்டதாயினும், பல போராளிகள் உயிரிழந்துள்ளனர்.
இதேவேளை - ஈரானிய அதிகாரி, சிரியா ஜனாதிபதியைச் சந்தித்தார். இந்தச் சந்திப்பின்போது, கடந்த 5 வருடங்களாக இடம்பெற்ற போருக்கு ஆதரவு வழங்கியது போன்று, தொடர்ந்தும் நாம் எமது அதரவை வழங்குவோம் என்று ஈரானின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
ஈரானின் அரசியல் ஆலோசகர் தெரிவிக்கையில்; சிரியாவில் ஏற்பட்டுள்ள தீவிரவாதம், அந்த நாட்டைச் சார்ந்ததல்ல மாறாக எமது பிராந்தியத்தைப் பாதிக்கும். எனவே இந்த விடயத்தில் நாம் சிரியாவுக்கு ஆதரவு வழங்குவோம் எனத் தெரிவித்தார். (ஐ-ரி4)

# நாட்டுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவோம்

## வட கொரியா அறிவிப்பு



பியாங்யாங், மே9
எமது நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் விடுத்தால், அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவோம் என வட கொரிய ஜனாதிபதி கிம்- யோங்-உன் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.
ஆளும் தொழிலாளர் கட்சி மாநாட்டின் இரண்டாம் நாளான நேற்றுமுன்தினம் அந்த நாட்டு மக் களிடையே உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அணு ஆயுதங்களை கைவசம் வைத்துள்ள, பொறுப்புகள் மிகுந்த நாடு என்ற வகையில் எங்கள் நாட்டின் மீது அணு ஆயுதங்களை பயன்படுத்தி மூர்க்கத்தனமாக பிறநாடுகள் தாக்குதல் நடத்த முற்பட்டு, அதன்மூலம் எங்கள் நாட்டு இறையாண்மைக்கு அச்சுறுத்தல் நேர்ந்தாலன்றி நாங்களாக அணு ஆயுதங்களைப் பயன்படுத்த மாட்டோம்.
அத்துடன், அணு ஆயுத குறைப்பு தொடர்பான சர்வதேச நிர்பந்தங்கள் விவகாரம் தொடர்பாக நேர்மையான வகையில் ஒத்துழைப்பு வழங்கவும், உலகளாவிய அளவில் அணு ஆயுத பரவலை நடைமுறைப்படுத்தவும் வட கொரியா தயாராக இருப்பதாகவும் கிம்-யோங்-உன் இதன்போது தெரிவித்தார்
36 வருடங்களின் பின்னர் வட கொரியாவின் ஆளுங்கட்சி மாநாடு வெகுவிமரிசையாக இடம்பெற்று வருகின்றது. ஜனாதிபதி கிம்-யோங்-உன் இன் ஆளுமையும், ஆதிக்கமும் பாராட்டுவதற்காக மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதனால் தலைநகர் பியாங்யாங்கில் வசிக்கும் மக்கள் தமது சொந்த வைபவங்களைத் தள்ளிவைக்கும் படி உத்தரவிடப்பட்டது. மேலும் வட கொரியாவின், பொருளாதார வளர்ச்சி, மின் உற்பத்தி என்பவ றில் வளர்ச்சியை ஏற்படுத்த கிம்மினால் 5 வரு திட்டம் முன்வைக்கப்பட்டது. இதற்கிடையில் 12 வெளிநாட்டு ஊடகங்களுக்கு அழைப் விடுக்கப்பட்டும், இது வரை நிகழ்வில் கலந் கொள்ள அனுமதிக்கப்படவில்லை. ஆனா அரசு ஊடகச் செய்திக் குறிப்பின் அடிப்படையி தகவல்கள் வெளிக்கொணரப்படுகின்றன.
(ஐ-ரி4

## சரக்குக் கப்பலுடன் மீன்பிடி படகு விபத்து

### 17 பேர் மாயம்

கிழக்கு சீனக்கடல் பகுதியில் சரக்குக் கப்பலுடன் மீன்பிடி படகு மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் கப்பலில் இருந்து கடலில் மூழ்கிய 17 பேரின் நிலை என்ன என்பது தெரியாத நிலையில், அவர்களைத் தேடும் நடவடிக்கையில் சீனாவைச் சேர்ந்த கடலோரக் காவல் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.
நேற்றுமுன்தினம் இரவு வெளிநாட்டுக்குச் சொந்தமான அந்தச் சரக்குக் கப்பலுடன் சீனாவைச் சேர்ந்த மீன்பிடி படகு மோதியதில் படகில் இருந்த 19 பேர் கடலில் மூழ்கினர்.
இது தொடர்பான தகவல் அறிந்ததும், விரைந்து வந்த கடலோரக் காவ படையினர் இதுவரை இரண்டு மீனவர்களை உயிருடன் மீட்டுள்ளன எஞ்சியுள்ளவர்களையும் மீட்கும் முயற்சியில் அந்தப் பகுதியில் தீவி தேடுதல் வேட்டை நடத்தப்பட்டு வருகிறது.
மோதலுக்கான காரணம் இன்னமும் தெளிவாகத் தெரியவில்லை. மோத தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த சரக்கு கப்பல் 40 ஆயிரத்து 485 தொன் நிறையுள்ள பொருள்களைச் சுமந் செல்லக் கூடியது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-ரி4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ாவில் கடத்தப்பட்ட ...கவியலாளர் விடுவிப்பு

...9
...அலெப்போ நகரில்
...ஜுலை மாதம் காணா
...ானிய ஊடகவியலா
...பாது விடுதலை செய்
...னர் என ஸ்பானிய
...யின் தலைவர் தெரி

...ம் அவர் தனது சமூக
...ான டுவிட்டரில் இத
...றியுள்ளார். அன்டோ
...ா, ஜோஸ் மானுவல்
...றும் ஏஞ்சல் சஸ்ரர்
...டுவிக்கப்பட்டனர் என
...கத்தில் மேலும் குறிப்
...ஆனால், இதனைத்
...த்த் தகவலும் உடனடி
யாக வெளியிடப்படவில்லை.

கடந்த வருடம் ஜுலை மாதம் 10 ஆம் திகதி துருக்கில் இருந்து சிரியாவினுள் வந்தடைந்த இவர்கள், ஜுலை மாதம் 13 ஆம் திகதியில் இருந்து காணாமற் போயினர். அங்குள்ள போராளிக் குழுக்களால் கடத்தப்பட்டிருக்கலாம் என்று செய்திகள் வெளியாகியிருந்தன.

முன்னதாக கடத்தப்பட்ட ஊடகவிய லாளர்கள் போராளிகளால் படு கொலையும் செய்யப்பட்டனர். ஆனால், இந்த ஊடகவியலாளர்கள் விடுவிக்கபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த ஜுன் மாதம் ஜப்பானிய ஊடகவியலாளர் ஒருவர் கடத்தப்பட்டு, இன்னும் விடுவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-ரி4)

# ...தில் பொலிஸார் ...டுக் கொலை

...வடத்தில் இருந்த, ஒரு
...3 பொலிஸாரை இனம்
...ாக்கிதாரிகள் சுட்டுக்
... ஹல்வன் பகுதியில்
...ம் தாக்கப்பட்ட போது
... இடம்பெற்றுள்ளது
...அமைச்சகம் நேற்றுத்
...து.
...பாகிகளுடன் வந்த
...னர், பொலிஸ் வாக
னத்தை நிறுத்தி தாறுமாறாகச் சுட்ட பின்னர் தப்பிச் சென்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எவரும் பொறுப்பேற்றகவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து இன்று வரை எகிப்தில் பொலிஸார், இராணுவத்தினரின் உயிரிழப்புகள் அதிகரித்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ-ரி4)



# ஏரியில் கரையொதுங்கிய 35 தொன் இறந்த மீன்கள்

பீஜிங்,மே 9

சீனாவின் தெற்குப் பகுதியில் உள்ள ஏரியில் குறிப்பிட்ட ஒரு வகை மீன் இனம் இறந்து மிதக்கின்றது. குறைந்தது 35 தொன் நிறையில் இவை இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன. ஹினான் மாகாணத்தில் கடந்த புதன் கிழமையில் இருந்து இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால் அந்தப் பகுதி மக்கள் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்ததுடன், துர்நாற்றம், வளி மாசடையும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளன.

ஆனால், உவர் நிலையில் ஏற்பட்ட மாற்றம் தான் குறித்த வகை மீன்களின் இறப்புக்குக் காரணம் என அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும், நீரோட்ட மாற்றத்தால் குறித்த வகை மீன்கள் ஏரிப்பகுதிக்கு தள்ளப்பட்டுள்ளன. இதனால் உவர் நிலையில் ஏற்பட்ட மாற்றம் இறப்பை தோற்றுவித்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் சுற்றுச் சூழல் அதிகாரிகள் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். சிப்பி இன மீன் போன்று தோற்றமளிக்கும் இவற்றை அப்புறப்படுத்த, பல மணி நேரங்கள் எடுத்துள்ளன. (ஐ-ரி4)

...ன்பவற்
...5 வருட
...ல் 128
...ழைப்பு
...கலந்து
...ஆனால்
...டையில்
...ன.
(ஐ-ரி4)

...து

...காவல்
...ளனர்.
... தீவிர

...மோதல்
...ரக்குக்
...சுமந்து
(ஐ-ரி4)


31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் திருநாவுக்கரசு ராசரெத்தினம்
(விஜிதா அரிசி ஆலை உரிமையாளர் - தாவடி)

அன்னை மடியில் 07.12.1938
இறைவன் அடியில் 09.04.2016

மண்ணில் பிறந்த மணிவிளக்கே எண்ணில் இதயம் சுமந்த திருவிளக்கே
வள்ளுவன் வாசுகி வாழ்ந்த வாக்கை இதுவென வாழ்ந்து காட்டிய குலவிளக்கே
உயிருக்குயிராக இருந்து எம்மையும் சகோதரர்களையும் பாசத்துடன் காத்த அப்பாவே
இணையில்லா வாழ்வு வாழ்ந்து பாசமழை பொழிந்து பழமரமாய் தாம்
காலூன்றிய வேளை கனவாய் காற்றாய்.... தெய்வம் அழைத்ததென அம்மா எமைப் பிரிந்து
ஆறு திங்கள் ஆகவில்லை அதற்குள் அழைத்தானோ
ஆறவில்லை எங்கள் துயரம் ஆறாத மனத்தோடு நாமிங்கே வாடுகின்றோம் தந்தையே!
தங்கள் ஆத்மா சாந்தியடைய இறையடி பணிகின்றோம்.

இன்று (09.05.2016) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

Dr.சுரேஷ் (பல்வைத்தியர்)
குளப்பிட்டிச்சந்தி,
ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நட்சத்திரப் பொதுப் பலன்கள்

**நட்சத்திரப் பொதுப்பலன்கள் பற்றி கடந்த சனிக்கிழமை அச்சுவினி, பரணி நட்சத்திரங்களைப் பார்த்தோம். இன்று கார்த்திகை, ரோகிணி பற்றிப் பார்ப்போம்.**

## கார்த்திகை

கார்த்திகை நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் ஆள்பாதி, ஆடைபாதி என்பதற்கு முழு உதாரணமாய்உங்களதுஉடைகளையும், ஆபரணங்களையும்பேணிக்காப்பீர்கள். மற்றவர்களைக் கவரும் விதமாய் உங்களது செயல்பாடுகள் அமைத்துக் கொள்வீர்கள். மன துக்குப் பிடித்தமான உணவு வகைகளை ருசித்துச் சாப்பிடுவீர்கள். மற்றவர்களால் புகழப்படும் காரியங்களைச்செய்வதில்அதிகஆர்வம் கொண்டிருப்பீர்கள். பயணம் செய்வதிலும் அதிக நாட்டம் உடையவராய் இருப்பீர்கள்.

வருங்காலத்துக்கான சேமிப்பை மேற்கொள்வதில் அனைத்து வழிகளையும் பின்பற்றுவீர்கள். அற்ப நித்திரை உடையவர், சொல் சாதுரியம் உடையவர், பொய் பேசியாவது பொருள் சம்பாதிக்கும் திறமை உடையவர், அறிவாளி, அரசர்கள் விருப்பத்துக்கு உரியவர், பரிசு பெறுபவர், பலவான், வஞ்சக மனம் உடையவர், மார்பில் மரு உடையவர், வழக்குத் தொடுக்கும் துணிந்த மனம் உடையவர். செல்வந்தராகவும், திறமை மிக்கவராகவும் இருப்பர். ஆசார அனுஷ்டானங்களில் பிடிப்புடன் திகழ்வர். கலைகளை ஆர்வமுடன் கற்கும் சுபாவமிருக்கும். மனதில் மென்மை குடிகொண்டிருக்கும். பெண்களிடம் நட்புடன் பழகும் இயல்பைப் பெற்றிருப்பர்.

கல்வியில் ஆர்வம் இல்லாவிட்டாலும் வாழ்க்கைக்குத் தேவையான தகுதிகள் யாவும் இவர்களிடம் இருக்கும்.

1. கார்த்திகைமுதல்பாதத்தில்பிறந்தவர், ஆசாரமுள்ளவர், வித்துவான். பிரபு இலாபசேகரர். சூரர். பசுப்பீரிதி உள்ளவர். புத்திமான் ரோகமுள்ளவர்.
2. கார்த்திகை இரண்டாம் பாதத்தில் பிறந்தவர். வெற்றியுடையவர்களை நண்பனாகக் கொண்டவர். சாஸ்திரங்களை விரும்பாதவர்.
3. கார்த்திகைமூன்றாம்பாதத்தில்பிறந்தவர், துஷ்ட பெண்களைச் சேரு பவர். புத்தியற்றவர், மிகுந்தசூரன், தீமைகளையே பிரதானமாகச் செய்பவர்.

## ரோகிணி

ரோகிணி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் அனைத்து வகையான புத்தகங்களைப் படிப்பதிலும் ஆர்வத்துடன் இருப்பீர்கள். சுத்தத்துக்கு முதலிடம் கொடுப்பீர்கள். எந்த நேரத்திலும் சுத்தமாக இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் உங்களது செயல்களை அமைத்துக் கொள்வீர்கள். மற்றவர்களிடம் நயமான முறையில் பேசி சிக்கலான சமயங்களிலும் திறமையாகச்சமாளித்துவிடுவீர்கள்.அனைத்துக் காரியங்களிலும் திட்டமிட்டே செயற்படுத்துவீர்கள். உங்களது அனைத்துச் செயல்களும் எதிர்காலத்தை முக்கிய குறிக்கோளுடன் கொண்டதாகஇருக்கும். திறமையாக மற்றவர்களிடம் வேலை வாங்குவதில் சமர்த்தராய் இருப்பீர்கள். தண்ணீர் அதிகம் குடிப்பதில் விருப்பம் உடையவர், சொன்ன சொல் கேட்பவர். இரண்டு கண்களும் பருத்து நெற்றி சுருங்கி இருப்பவர். வஞ்சகம் பேசா தவர், வலுத்த உள்ளங்கால் உடையவர், திடமான நடையுடையவர். கற்றறிந்தவர்களுடன் நட்பை விரும்புபவராகத் திகழ்வர். பார்ப்பதற்கு கம்பீரமான தோற்றம் கொண்ட இவர்கள் ஊர் சுற்றும் இயல்பைப் பெற்றிருப்பர். மக்கள்செல்வாக்குச் சிறப்பாகஇருக்கும்.மூலவரானகிருஷ்ண பரமாத்மா அருள் பாலிக்கிறார்.

1. ரோகிணி முதல் பாதத்தில் பிறந்தவர் பொருள் உள்ளவர், அழகுள்ளவர், அலைச்சல் படுவோர், கருமி, அன்னியருக்குத் துன்பம் தருபவர், பொறுமையற்றவர், வர்மி, ரோசம் உடையவர், ரோகம் உடையவர்.
2. ரோகிணி இரண்டாம் பாதத்தில் பிறந்தவர் கருணை உடையவர். சாந்த குணம் உடையவர். ரோகி, ஆசாரம் உள்ளவர், உண்மை பேசுவார், விரும்பிய பெண்ணை மணப்பான், வாய்சாதுரியம் உள்ளவர், ஆசை உள்ளவர்.
3. ரோகிணி மூன்றாம் பாதத்தில் பிறந்தவர் கணித வித்தையில் வல்லவர், சங்கீதஞானம் உடையவர், மந்திரங்கள் அறிந்தவர், சுகவான், பஞ்ச காவியங்கள் அறியாதவர்.
4. ரோகிணி நான்காம் பாதத்தில் பிறந்தவர் உண்மை பேசுபவர், அன்னியரின் சொத்தை விரும்புபவர், பெண் போகத்தில் விருப்பம் உடையவர்.

(தொடரும்)

---

# குழந்தை வளர்ப்பும் எதிர்காலமும்

சி.நற்குணலிங்கம்

நாம் வசிக்கும் வீடே அறிவு வளர்ச்சிக்கும், ஒழுக்கத்துக் கும் தளமாக அமைகிறது. உயர்ந்த எண்ணங்களை உருவாக்கும் களமாக ஒருவனுக்கு அவனது வீடே அமைகிறது. வீட்டிலுள்ளவர்கள் நல்லறிவோடு, நல்லுணர்வோடு தாங்கள் கெடாத தன்மையோடு பிறர் கெடாமல் இருக்கத்தக்க சூழலையும் உருவாக்கிக் கொள்ள வேண்டும். பெற்றோர் என்ற சொல்லுக்கு ஏற்ற தகுதி படைத்தவர்களாக பிள்ளைகளைப் பெற்ற தாய் தந்தையர் வாழவேண்டும். பெற்றோருக்கான சகல தகுதிகளையும் பெறுவதுடன் நன்மக்களை எமது தேசத்துக்குத் தரும் பெற்றோராக வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

பெற்றோராக உமது பொறுப்பை எப்போது மறக்கிறோமோ? வழிகாட்டலை எப்போது கைவிடுகிறோமோ? அப்போது முதல் தொடங்குகிறது மனிதக் குழந்தைகளிடமிருந்து வன்மமும், வன்முறையும். எனவே பெற்றோரே குழந்தை வளர்ப்பில் எந்தச் சந்தர்ப்பத்திலும் உங்கள் பிடி தளரக்கூடாது. வழிகாட்ட மறந்தீர்களோ உங்கள் தலைமுறை உங்களுக்கே வன்முறையைக் கற்பிக்கும். ஆகவே பெற்றோரே வளமான எதிர்கால தலைமுறை உருவாக்கம் உங்கள் கைகளில் தான் உள்ளது. நீங்கள் எந்த அளவுக்கு உங்கள் குழந்தை வளர்ப்பில் அக்கறை காட்டுகிறீர்களோ, அதற்கேற்ப குழந்தைகளின் எதிர்காலம் சிறக்கும். இல்லையேல் பிள்ளையின் வாழ்வு மட்டுமல்ல உங்கள் வாழ்வும் வலிக்கும்.

குழந்தைகளுக்குச் சரியானதை, பொறுமையாகச் சொல்லிக் கொடுக்க வேண்டும். அதைவிடுத்து கோப உணர்வுடன் சொல்வதன் மூலம் எதுவும் நடக்காது. அன்போடு அமைதியாகச் சொன்னால் குழந்தைகள் எதையும் ஏற்று நடப்பதுடன், எதையும் பெற்றோரிடம் பயமின்றி மனதில் இருப்பதைப் பகிர்ந்து கொள்ளப் பழகிவிடுவார்கள். அத்துடன் பெற்றோர் சிலர் தமது பிள்ளைகளுக்கிடையில் பாரபட்சம் காட்டி வளர்ப்பார்கள். பாரபட்சம் காட்டுவது அவர்களை விரக்தி கொள்ளச் செய்துவிடும். அது பாரதூரமான விளைவுகளுக்கும் இட்டுச் செல்லும். "அடித்து வளர்க்காத குழந்தையும், ஒடித்து வளர்க்காத முருங்கையும் நன்றாக வளரா" என்பது பழமொழி. இதில் முதல் வார்த்தை இன்று முற்றும் கோணலாக வந்து விட்டது. அதனை மனநல மருத்துவர்கள் எச்சரிக்கிறார்கள். குழந்தைகளின் செயலைக்கண்டிப்பது என்பது தண்டிப்பதைவிட சிறந்ததாகும். தண்டிப்பது என்பது குழந்தைகளுக்கு முன்பே புரியவைக்காமல் தவறு செய்யும் பட்சத்தில் அவர்களை அடித்து துன்புறுத்துவதாகும். கண்டிப்பது என்பது ஒரு செயலைச் செய்யும் போது நல்லது எது? கெட்டது எது? என்பதை புரிய வைப்பதாகும். குழந்தைகள் தவறு செய்தால் கண்டிப்புடன் எளிய முறையில் குழந்தைகளுக்கு புரியவைப்பது தான் சிறந்ததாகும். நாம் அவர்களை வன்முறைக்கு உள்ளாக்கக் கூடாது என்பதை பெற்றோர் தமது மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்கின்றனர் குழந்தைகள் நலமருத்துவர்கள்.

நல்லதொரு வழிதடத்தின் கீழ் குழந்தைகள் பயணிப்பது எப்படி என்பதை கற்றுக் கொடுக்க வேண்டும். அதற்கு பெற்றோர் முன்மாதிரியானவர்களாகக் காணப்பட வேண்டும். குழந்தை முன்னிலையில் சிகரெட் பிடிப்பது, மது அருந்துவது, கணவன் மனைவி சண்டையிடுதல், தகாத வார்த்தைப் பிரயோகம், பிள்ளைகளிடம் தப்பிப்பதற்காக பொய்பேசுதல் இவற்றை தவிர்த்துக் கொள்ள வேண்டும். பெற்றோர் சொல்வதைக்குழந்தை ஏற்க வேண்டுமானால் முதல் பெற்றோரை பிள்ளைகள் மனமார ஏற்க வேண்டும். அதற்கேற்ற நடத்தைக் கோலங்களை பெற்றோர் பின்பற்ற வேண்டும்.



பெற்றோரின் கடுமையான எச்சரிக்கைகள் தோல்வியில் தான் முடியும். அதிக அறிவுரைகள் எச்சரிக்கைகள் பிள்ளைகளுக்கு பெரிதும் பிடிக்காது. உன்னத நட்பின் மூலம் தான் சாதிக்க முடியும். நட்புடன் அணுகுவதன் மூலம் அவை நல்ல ஆலோசனையாக எடுத்துக் கொள்ளப்படும். எதிர்ப்புக்களையும் அளவுக்கு மீறிக் காட்டக் கூடாது. கேட்டதற்கெல்லாம் குறைசொல்வது கூட தவிர்க்கப்பட வேண்டும். அது தேவையற்ற சந்தேகங்களை மனதில் தோற்றுவிக்கும். இதன் விளைவாக பெற்றோரில் வெறுப்பும் ஏற்பட வாய்ப்புண்டு. அத்துடன் உங்கள் குழந்தையுடன் அடுத்த வீட்டுக் குழந்தையை ஒப்பிட்டுப் பேசாதீர்கள். குழந்தைகளை எப்படி வளர்க்க வேண்டும் என்பதைவிட அவர்களை எப்படியெல்லாம் வளர்க்கக் கூடாது என்பதைத் தான் முதலில் பெற்றோர் தெரிந்து கொள்ள வேண்டும். அதன் மூலம் குழந்தைப் பருவத்திலிருந்து சிறந்த எதிர்காலப் பிரசையை உருவாக்க முடியும். உங்கள் குழந்தைகளை அதிகமாக நேசியுங்கள். அவர்களை நேசிக்காமல் உங்கள் வாழ்க்கை சிறக்காது. வாழ்க்கையில் நீங்கள் செய்யும் எந்தவொரு செயலும் அர்த்தம் தராது. உங்களது குழந்தை வளர்ப்பிலேயே குழந்தையின் எதிர்காலம் மட்டுமல்ல, உங்களின் எதிர்காலம் மட்டுமல்ல, சமுதாயத்தின் எதிர்காலம் மட்டுமல்ல, நாட்டின் எதிர்காலமே தங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சு.ஜெயகோபாலசாமி

(‘பிரபஞ்சத்தில் தூலமும் சூக்குமமும்’ என்ற தலைப்பில் 06.05.2016 திகதிய உதயனில் பிரசுரமான கட்டுரையின் தொடர்ச்சி இது.)

# சிவத்தை ஆன்மா அடைய வழியென்ன?

**தீட்ஷா பேதம்:** வேதாகமம் கூறுவது என்ன? இத்தனை மேலாய சிவத்தை ஆன்மா அடைய (ஈடேற) என்ன வழி? அறுவகைத் தீட்சை பெற்றுயர வேண்டுமென்கிறது வேதாகமம். (சப்த, ஸ்பரிச, நயன், ரூப, ரச, ஸ்கந்தம்) முதலில் முதலாவது சமயதீட்சை பெற்று (சரியைத் தொண்டை) சிவனடியார்க்கும் ஆலயத்துக்கும் தொண்டு செய்வதாகும்,

**இரண்டாவது கிரியை:** இது விசேட தீட்சை பெற்று கிரியை வழிபாட்டு முறையாகிய சிவனடியார்க்கும், சிவாலயத்துக்கும் தொண்டு செய்வதுடன் சிவலிங்க பூசையும் மேற்கொள்வதாகும். மேலும் நிர்வாண தீட்சை பெற்று சரியை, கிரியை, யோகம், தொண்டையும் சிவத்துக்கும், சிவாலயத்துக்கும், சிவனடியார்க்கும் தொண்டாற்றியும் சிவலிங்கப் பூசை செய்தும்,ஞானபூசைசெய்தும்,அதன்மேல் ஆச்சா ரியார் அபிசேகம் பெற்று சிவனடியார்க்கும், சிவாலயத்துக்கும் சிவத்துக்கும் தொண்டு செய்து (வர்ணாச்சிரமத்திக்கேற்ப சந்தியா வந்தனம் செய்வதே சிறப்பாயமையும்) ஆச்சாரியார் அபிசேகம் பெற்று சிலோக நிலைநின்று சரியைத் தொண்டுமாற்றி சிவலிங்கப் பூசை செய்தும், ஞானபூசை செய்தும், மேலான தீர்க்கை, பிரதிட்டை முதலியன செய்தும் வரக்கூறுகிறது.

ஹோமத்துடன் கூடிச்செய்வது ஔத்திய தீட்சையாம். இது நயன, ஸ்பரிச வாசக, மானச, யோக, சாஸ்திர மெனும் 6 வகைப் பெறும். இவ்வாறு ஆறு வகை தீட்சையும் சக்தி தீர்க்கையாகிய ஞானவதி பிரகாரம் ஆறு வகையும், கிரியாவதி பிரகாரம் மாந்திரிய தீர்க்கையாகிய ஆறுவகை தீட்சையாயும், மொத்தம் பன்னிரு வகைப்படும். இந்தப் பன்னிரு தீர்க்கையும் சமய விசேட நிர்வாண தீர்க்கைக்கு உட்படும் போது (3×12=36) முப்பத்தாறு வகைப்படும். சமய விசேட நிர்வாண ஆச்சாரியார் அபிடேகமாக நான்கும் சேர 40 வகை தீட்சை பெற்றவர்கள் தேசிகராவர்.

சாத்திரங்கள் ஓதுகின்ற சட்டநாத பட்டரே வேர்த்திரைப்பு வந்தபோது வேதம் வந்து உதனமோ மாத்திரைப்போது உள்ளே மறித்து ஓங்க வல்லீரேல் சாத்திரப்பை நோய்களேது. சத்தி முத்தி சித்தியே என்கின்றார் 20 சித்தர்கள். மேலும் மானுட பிறப்பை நோக்கின் தூரம் தூரம் தூரமென்று சொல்லுவார்கள் சோம்பர்கள். பாரும் மண்ணும் விண்ணுமாய் பரந்த அந்தப் பராபரம், ஊரும் நாடும் காடும் மேடும் உழன்று தேடு ஊமைகள் நேரமது ஆகுமுன்னே அறிந்து வந்து நில்லுமே என்கின்றார் சித்தர். நாலு வேதமோதுவீர், ஞானபாத மறிகிவீர் பாலினுள் நெய் கலந்தவாறு பாவிகள் அறிகிலீர், ஆலமுண்ட கண்டனார் அகத்துள்ளே இருக்கவே, காலன் என்று சொல்லுவீர் கனவிலு மறிகிலீர், வித்தில்லாத சம்பிரதாயம் மேலுமில்லை கீழுமில்லை, தச்சில்லாத மாளிகை படைத்தவாறு அது எங்கனே பெற்ற தாயை விற்றடிமை கொள்ளுகின்ற பேதைகாள் சித்தில்லாதபோது சீவன் இல்லை இல்லையே என்றும் மொழிந்தார் சித்தர்.


**சரியையின் சாரம்:** சிவாலயத்துக்கும் சிவனடியார்க்கும் தொண்டு செய்து இதனால் வரும் மோட்சமடைதல் “சாலோகமுத்தி”

**கிரியையின் வழிநின்று:** சரியைத் தொண்டுடன் சிவத்தை அகமும் புறமும் பூசித்தால் கிடைக்கும் மோட்சம் “சாரூப முத்தி”

**யோக வழிநின்று:** சரியை கிரியையுடன் கூடி, பின் தாமும் சிவமும் ஒன்றென உணர்ந்து தியானத்தில் இருத்தல். இதனால் கிட்டும் மோட்சம் “சாமீப முத்தி”

**ஞான வழிநிற்றல்:** பசு, பதி, பாசம் என்ற முப்பொருளையும் அறிந்து நிட்டை கூடி சிவங்கூடி சிவயோகத்திலிருந்து சிவத்துடன் ஐக்கியப்படல் “சாயுச்சிய முத்தி”

“உவமை இல்லா கலைஞானம், உணர்வரிய மெய்ஞானம், தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார்” மணிவாசகப் பெருமானும் குருந்த மரநிழலிலே சிவத்தால் ஆட்கொள்ளப்பட்ட சாம்பவ தீர்க்கையாகிய திருவடி தீட்சை பெற்ற நிலை போன்றதே.



திருவடி தீட்சை என்பது காதலால் வருவது. அன்பு வழியில் வாழ்ந்து அண்ணலை அன்பு கொண்டு மனத் திருத்தி, அவன் அடித்தொண்டு பரவும் அன்பினால் வருவது. அன்பு கொண்டார் வர நேரம் தவறின் வழிமேல் விழி வைத்துக் காத்திருப்பது அன்பின் அடையாளம். பேசிக் கல்யாணம் செய்வதில் முதலில் வருவது அன்பு. ஆனால் காதலித்து வீடு விட்டு பெண் ஓடுவதும், மாப்பிள்ளை பெண்ணை நாடி வந்து சிறை எடுத்துச் சென்று திருமணம் புரிவதும் காதல். முருகப்பெருமானும் சிறைமீட்டுச் சென்றே வள்ளியைத் திருமணம் புரிந்ததாகக் கந்தபுராணம் கூறுகிறது. வள்ளிஎன்பதுமெய்அடியார்களேயாம். சோதிப்பிளம்பினுள் திருஞான சம்பந்தப் பெருமானின் திருமண விழாவுக்கு வந்த சிவனடியார் கூட்டத்தினுடன் திருஞானசம்பந்தப் பெருமானும் மணமகளும் திருநாவுக்கரசரும் சிவத்துடன் சோதியுட்கலந்த வேளை பாடியபாடல் “காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி” என்பதாகும். காதல் என்பது அன்பினும் பல படி மேலானதாகும். உண்மைக் காதலாலேதான் சிவம் வந்திறங்கி, இரங்கி, அருள் புரிவதையும் ஈற்றில் மோட்ச நிலையை அருளி ஐக்கியப் பட்டுச் சிவத்துடன் கலப்பதையும் காட்டி நிற்கும். சிற்றின்ப நிலையில் ஐக்கியம் என்றால் திருமணம் ஆகும். இவற்றைத் தான் வள்ளி திருமணம் விளக்கி நிற்கின்றது. முத்திக்கொரு வித்தாய் முருகன் திகழ்கின்றான்.

> **இரண்டு என்று பன்னிரு விழியெனத் தொகுக்க, குழந்தைகள் விளையாட்டு நடக்கும் வேளை இந்த விளையாட்டுப் பிணக்கை பார்வதி தீர்க்க, சிவன் கண்டு இரசிக்கும் வேளையுமாய் சிவனின் ஆஞ்ஞையாலே நாரத மாமுனி மாங்கனியைக் கொண்டு சமூகம் தருகின்றான். வந்த முனியும் இது ஞானக்கனி என்றும், பிரித்தால் ஞானம் கெட்டுவிடும் என்கிறார்.**

**மெய்யடியார்**

மெய்யடியார் யார்? மனம், வாக்கு, காயங்களால் நெஞ்சுருகி கண்களினின்று ஆனந்த பஸ்பம் ஆறாய்ப் பெருக, தன்னை மறந்து தன்நிலை கெடும் வரை பிரமனின் மண்டையோட்டில் பிச்சை புகும் கொன்றை மாலையை தலைக்கணிந்த சிவனை தலையாலே வணங்குபவரும், அசுரரும் தேவரும் பாற்கடலை திருவமுதுக்காகக் கடைந்த போது, மத்தின் நாணாய் நின்ற வாசுகி வேதனை தாங்காது கக்கிய ஆலகால விடத்தை அசுரரும் தேவரும் அமரரும் உய்யும்பொருட்டுத்தாமே உட்கொண்டு கண்டத்தை நீல நிறமாக்கிய சிவனை கண்களே கண்டு நெக்குருகி தொழுபவரும், செம்மேனியனின் திருவிளையாடல்களை செவி உற்றும் சுடலையிலே நடமிடும் பிரானை வாயார வாழ்த்தியும், மேகங்கள் உறையும் கயிலைமலை நாதனை நெஞ்சார நினைத்து உருகியும், நஞ்சுப்பையை வாயினுள் கொண்டிருக்கும் பாம்பை அரையில் செறித்தவனாய பரம்பொருளைத் தன் கைகளைக் கூப்பித் தொழுபவரும், அரன் உறையும் அழகிய கோபுர வாயிலுக்குச் செல்லாதிருக்கும் கால்களால் பயன் என்ன என்னும் நினைவுடன், அவனே எமக்கும் துணை, பிறிதொரு துணை எமக்கில்லையே என்னும் முடிவுடனும், உறுதியுடன் இறுமாந்திருந்து திருமாலொடு நான்முகனும் காணத் திருவடியைத் தேடிக் கண்டு கொண்டவனே மெய்யடியான். “மனத்துக்கண் மாசிலன் ஆதல், அனைத்திறன் ஆகுல நீர் பிற”

**“மாயா” மாங்கனி ஞானம்**

“நெஞ்சமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே மஞ்சனத் தீர்த்தம் கொள்ளவராய் பராபரமே” என்றார் தாயுமானவர். (மா+யா=மாயா) “மா” என்றால் பரந்து விரிந்த, “யா” என்றால் ஒருங்கியும் ஒடுங்கிய ஒடுக்கத்துள் ஒடுங்கியும், விரிவினுள் விரிவாயும் உள்ளார் சிவன். மாயையால் பிரபஞ்சத்தைப் படைப்பதே படைப்புத் தொழில். இதன் விளக்கத்தை மற்றும் வினா விளக்கத்தில் பார்ப்போமாக.

“மா” என்றால் மாமரம் என்றும் கருத்துப்படும். மாவின் விளக்கம் மாங்கனியிலேயே அடங்கிவிட்டது.

**திருக்கயிலை ஆனந்த கோலங் கொண்ட நிலை:**

கனகசபையிலே, பார்வதி சகிதம் சிவனிருக்க திருவாசலிலே தமயனின் மூக்கைத் (துதிக்கையை) தம்பி இஞ்சியும், முளமும், சாணும் போட்டு அளக்க, தம்பியின் கண்களை தமயன் எண்ணி ஒன்று, இரண்டு என்று பன்னிரு விழியெனத் தொகுக்க, குழந்தைகள் விளையாட்டு நடக்கும் வேளை இந்த விளையாட்டுப் பிணக்கை பார்வதி தீர்க்க, சிவன் கண்டு இரசிக்கும் வேளையுமாய் சிவனின் ஆஞ்ஞையாலே நாரத மாமுனி மாங்கனியைக் கொண்டு சமூகம் தருகின்றான். வந்த முனியும் இது ஞானக்கனி என்றும் பிரித்தால் ஞானம் கெட்டுவிடும் என்கின்றான். ஒருவரே உரித்தானவர் என்றும் மொழிந்து சிவன் கையிலளித்து விடுகின்றான். குழந்தைகளோ கணக்கியலில் அளவைப் போட்டியில் ஒருவரை ஒருவர் சினந்து தாயிடம் முறையிட்டு, குழந்தைப் பருவப் பிடிவாதம் இடும் நிலை விட்டு இப்போ அந்த ஞானக்கனிக்குப் போட்டியிட்டு எனக்கு எனக்கு என்று வாதித்து வர, சிவனே உலகை யார் முதலில் வலம் வருகின்றாரோ அவருக்கே ஞானக்கனி என்று திருவாய் மலர, மனோ வேகத்தையும் மிஞ்சிய வேகத்தைக் கொண்ட தாவடி ஓட்டு மயிலில் ஆரோகணித்து இதோ ஒரு நொடியில் சுற்றி வருகின்றேன் என்று புறப்பட்டான் ஆறுமுகன். செல்லுமிடமெல்லாம் ஒவ்வோர் லோகத்திலும் தாய், தந்தையரைக் காண்கின் றான். சர்வேஸ்வரன் சர் வலோகங் களிலும் காட்சி தருகின்றான். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பென்குயின் பறவையால் ஏன் பறக்க முடிவதில்லை?

பென்குயின், ஈமூ, கிவி என உலக அளவில் 40 வகையான பறக்காத பறவைகள் இருப்பதாகவும், இதுவும் பரிணாம வளர்ச்சியின் ஒரு கட்டம் என்றும் உயிரியல் வல்லுநர்கள் சொல்கிறார்கள். ஒரு கழுகு, தனக்கான இரையைத் தேடி நீண்ட தூரம் பறக்கிறது. கிடைத்த இரையைத் தூக்கிக்கொண்டு மிக உயரத்துக்குச் செல்கிறது. இப்படிப்பலநூறுஆண்டுகளாகத் தொடர்ந்து செய்ததால், பார்வை கூர்மையாகவும், நகங்கள் இரையைக் கவ்விப் பிடிப்பதற்கு ஏற்ற வகையிலும் மாறின. பென்குயின் பறவைகள், தான் இடம்பெயர்ந்த நிலப் பகுதியிலேயே தமக்கான உணவைத் தேடிக் கொண்டன. அதனால், பறக்கவேண்டிய அவசியம் இல்லாமலே போய் விட்டது. எனவே, அவற்றுக்கு இறக்கைகள் இருந்தும் பறப்பது இல்லை.




# ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு

ஒரு கிராமத்தில் ஒருவன் அழகிய புள்ளிமான் ஒன்றைத் தன் வீட்டில் வளர்த்து வந்தான். ஒரு நாள், அந்த மான் காணாமற் போய்விட்டது. இதைப் பொறுத்துக் கொள்ள முடியாத அந்த மனிதன், அந்த மானைப் பிடித்துப் போயிருப்பவனைப் பழிவாங்கத் துடித்தான். கடவுளிடம் முறையிட்டான். கடவுளும் வந்தார். கடவுளிடம் அந்த மனிதன், தான் ஆசையாய் வளர்த்த மானை மீட்டுத் தாருங்கள் என்று தானே கேட்டிருக்க வேண்டும்? ஆனால் அவன் அவ்வாறு கேட்கவில்லை. மாறாக, ஆத்திரத்தில், நான் ஆசையாய் வளர்த்த மானை யாரோ அபகரித்துச் சென்று விட்டார்கள். அந்த மானைத் திருடியவன் யாராக இருந்தாலும் அவனை என் முன் நிறுத்த வேண்டும் என்று கேட்டான். அதற்குக் கடவுள், பக்தா! மானை நான் உனக்குத் திருப்பித் தருகிறேன். ஆனால், மான் காணாமற் போனதற்குக் காரணமானவர்கள் யார் என்று கேட்காதே என்றார்.

கடவுளே! நான் மிகுந்த கோபத்தில் உள்ளேன். மானைத் திருடியவனைப் பழிவாங்காமல் விட மாட்டேன். எனவே, திருடியவனை இங்கு வரவழைக்க வேண்டும் என்று பிடிவாதமாகக் கேட்டான்.

இதனைக் கேட்ட கடவுள், சரி. நீ கேட்கின்ற வரத்தை தருகிறேன். ஆனால், பின்னால் வருத்தப்படக் கூடாது என்றார். அந்த மனிதனும் சரி என்றான்.




தந்தேன் நீ கேட்ட வரத்தை. அந்த மானைத் திருடிச் சென்றவர் உன் பின்னால் நிற்கிறார், என்று பக்தனிடம் கூறினார் கடவுள். உடனே பக்தன் திரும்பிப் பார்த்தான். மிகப் பெரிய சிங்கம் ஒன்று நின்று கொண்டிருந்தது.

சிங்கத்தைப் பார்த்தவுடன், பழிவாங்கும் கோபம் மறைந்து, பயம் கவ்விக் கொண்டது. அய்யோ கடவுளே காப்பாற்று! என்று அலறியடித்துக் கொண்டு ஓடினான் அவன்.

இந்தக் கதையில் வரும் பக்தனுக்கு அறிவு வேலை செய்யவில்லை.

ஆத்திரம் தான் வேலை செய்தது. அது அழிவைத் தந்தது. எனவே, கோபத்தைத் தவிருங்கள்.

அன்புடனும், அமைதியுடனும் வாழுங்கள்.



# எங்க ஊரு யானை

உருவில் பெரிய
யானை
தெருவில் நடந்து
வந்தால்
திரளும் கூட்டம் காண

பசிக்கும் யானை
புசிக்க
பழத்தை அள்ளித்
தருவோம்
பாகன் கையில்
கொடுக்க
பணமும் கொஞ்சம்
தருவோம்

முறங்கள் போன்ற
காதை
முன்னும் பின்னும்
ஆட்டி
தொங்கும்
தும்பிக் கையைத்
தூக்கித் தருமே ஆசி.!





# வரலாற்றில் இன்றைய தினம்

1502 கொலம்பஸ் புதிய உலகுக்கான தனது கடைசிப் பயணத்தை (1502-1504) ஸ்பெயினில் இருந்து தொடங்கினார்.

1671 ஐரிஷ் இராணுவ அதிகாரியான தோமஸ் பிளட் லண்டன் கோபுரத்தில் ஆங்கிலேய அரச நகைகளைக் களவெடுக்க முனைந்த போது கைது செய்யப்பட்டார்.

1874 குதிரையால் செலுத்தப்படும் உலகின் முதலாவது பயணிகள் வண்டி பம்பாய் நகரில் அறிமுகப்படுத்தப்பட்டது.

1901 ஆஸ்திரேலியாவின் முதலாவது நாடாளுமன்றம் மெல்போர்னில் திறந்து வைக்கப்பட்டது.

1914 துடுப்பாட்டத்தில் 3000 முதற்தர விக்கெட்டுகளைக் கைப்பற்றிய பெருமையை ஜாக் ஹேர்ண் பெற்றார்.

1919 இலங்கையில் முதன் முதலாக உணவுக் கட்டுப்பாடு நடைமுறைக்கு வந்தது. அரிசிப் பாவனை மாதமொன்றுக்குச் சராசரியாக 30,000 தொன் இலிருந்து 20,000 ஆகக் குறைக்கப்பட்டது.

1920 போலந்து இராணுவம் உக்ரேனின் கீவ் நகரைக் கைப்பற்றிய வெற்றி நிகழ்வு கிரெசாட்டிக் நகரில் இடம்பெற்றது.

1927 கன்பராவில் அவுஸ்திரேலியாவின் நாடாளுமன்றம் திறந்து வைக்கப்பட்டது.

1933 மகாத்மா காந்தி தனது சட்டமறுப்பு இயக்கத்தைக் கைவிட்டார்.

1936 இத்தாலி அடிஸ் அபாபா நகரை மே 5 இல் கைப்பற்றிய பின்னர் எரித்திரியா, எதியோப்பியா, இத்தாலிய சோமாலிலாந்து ஆகிய நாடுகளை இணைத்து இத்தாலிய கிழக்கு ஆபிரிக்கா என்ற நாடு உருவாகியது.

1940 - இரண்டாம் உலகப் போர்: டென் ஹெல்டர் என்ற இடத்தில் பிரெஞ்சு நீர்மூழ்கிக் கப்பலை ஜெர்மனிய யு-9 நீர்மூழ்கிக் கப்பல் தாக்கி மூழ்கடித்தது.


1942 இரண்டாம் உலகப் போர்: உக்ரேனில் சின்கிவ் நகரில் 588 யூதர்கள் நாசிகளினால் கொல்லப்பட்டனர்.

1945 இரண்டாம் உலகப் போர்: சோவியத் ஒன்றியம் வெற்றி நாளைக் கொண்டாடியது.

2002 ரஷ்யாவில் காஸ்பீஸ்க் என்ற இடத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 43 பேர் கொல்லப்பட்டனர்.



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....



# அம்மா சுட்ட தோசை

அம்மா சுட்ட தோசை
அரிசி மாவுத் தோசை
நெய்யை ஊற்றிச் செய்த
முறுவலான தோசை
வறுத்த கடலைச் சட்டினி
கரைத்து தொட்டுத்
தின்னவே
வயிற்று பசி தீர்ந்ததும்
தட்டைக் கழுவிக்
கவிழ்த்துவேன்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யானை (மோடி)க்கு வந்த ஆசை..!

மன்னரின் யானையொன்று அயல் நகரங்களுக்குள் சென்று அங்குள்ள பயிர்களை அழித்தும்,வளங்களைச் சேதப் படுத்தியும் மக்களில் பலரைக் கொன்றும், படுகாயப் படுத் தியும் பெருந்தொந்தரவுகளையும், துன்பங்களையும் கொடுத்து வந்தது.இது போதாதென்று அங்கேயே தங்கியிருந்து பல சோதனைகளை கொடுத்தும் வந்தது.

பாதிக்கப்பட்ட மக்கள் இதுபற்றி மன்னரிடம் முறையிட்டபோதும் மன்னர் அது தொடர்பில் பொருட்படுத்தவும் இல்லை; பெரிய விடயமாகக் கருதவுமில்லை.தன்னுடைய யானை மீது வீண் புகார்களையும்,குற்றச்சாட்டுக்களையும் முன்வைப்பதாக கூறி முறைப்பாடு தெரிவித்தவர்களைக் கடிந்தும் கொண்டார். மன்னனின் இந்தச் செயல், யானையின் அட்டகாசம் தொடர்பில் மேற்கொண்டு முறையிடுவதற்கு எவருக்கும் துணிச்சலைக் கொடுக்கவுமில்லை.

இந்த நிலையிலே பாதிக்கப்பட்ட மக்கள் முல்லா என்பவரைச் சந்தித்து மன்னரின் யானையால் தங்களுக்கு ஏற்பட்ட,ஏற்பட்டு வருகின்ற தொந்தரவுகள் பற்றி எடுத்துக்கூறினர். மன்னரிடம் இது தொடர்பில் இடித்துரைத்து தமக்குத் தீர்வைப் பெற்றுத் தருவது தொடர்பில் ஏதாவது செய்யவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர். முல்லாவும் தன்னிடம் உதவி கேட்டு வந்த மக்களை நோக்கி நீங்கள் எல்லோரும் ஒன்று திரண்டு அந்த யானையைப் பிடியுங்கள்.பின்னர் ஒரு மரத்தில் கட்டிப்போட்டு விடுங்கள் என்றார்.

ஐய்யய்யோ மன்னரின் யானையைப் பிடித்து மரத்தில் கட்டி வைத்துவிட்டு நாங்கள் உயிர் வாழ, முடியுமா..? மன்னர் கடுமையான தண்டனைகளை விதிப்பார் என்ற அச்ச உணர்வை ஊர் மக்கள் வெளிப்படுத்தினர்.

முல்லாவோ நீங்கள் நான் சொன்னவாறே செய்யுங்கள். மன்னரிடமிருந்து தூதுவர்கள் எவராவது வந்து கேட்டால் முல்லாதான் யானையைக் கட்டிப் போடச் சொன்னதாகக் கூறி விடுங்கள் என்றார். மக்களும் அவ்வாறே செய்தனர். முல்லாவிற்கான அழைப்பாணை மன்னரிடம் இருந்து வந்தது. விசாரணைகள் இடம்பெற்றன. யானைக்கு திருமண ஆசை வந்ததன் விளைவாகத் தான் இந்த அழிவுகளை அது திட்டமிட்டு செய்ததன் தாற்பரியங்களை சூட்சுமமாக எடுத்துக் கூறி மன்னருக்கு உண்மை நிலைகள் எடுத்துரைக்கப்பட்டன.இறுதியில் இழப்புக்களுக்கான விலை, பாதிக்கப்பட்ட மக்களிடம் போய்ச் சேரும்படி மன்னரால் நியாயமான முறையிலே வழங்கப்பட்டது. இது ஒரு நீதிக் கதை.

இதே போன்றதான நிலைமைகளைத் தமிழ் மக்களும் கடந்த அறுபது ஆண்டுகளாக இலங்கைத் தீவிலே அனுபவித்து வருகின்றனர்.பூர்வீகக் குடிகளாக,தனித்துவமான இனமாக, அனைத்து உரித்துக்களையும் உடைய ஒரு தேசமாக தமது நியாயமான அபிலாசைகளைக் கேட்டிருந்தும் எதுவும் கிடைக்கவில்லை.மாறாக அழிவுகளும்,சிதைவுகளும் மீள்தலின்றி இன்னமும் ஊசலாடிக் கொண்டிருக்கின்றன. வலிகளும்,வேதனைகளும் ரணமாகி ஓலமிட்டுக் கொண்டிருக்கின்றன.இந்த நிலையிலே அழிவின் பின்புலமாக இருந்த சர்வதேசம் என்ற வல்லாதிக்கங்கள் எங்களைப் பாவக் கண்ணோடு பார்த்தார்கள்.எமக்கான தீர்வுகள் வேண்டும் என்ற நியாயத்தை எடுத்துக் கூறினோம்.அவர்களும் வட்ட மேசைகளில் இது தொடர்பில் பேரம் பேசினார்கள். நல்லிணக்கம் மலரும்.சமத்துவம் கிட்டும், விசாரணைகள் இடம்பெற்று இனப் பிரச்சனைக்கான நிரந்தரத் தீர்வுகள் வழங்கப்படும் என்று சொல்லப்பட்டது.அதற்கான பிரேரணைகள் கொண்டுவரப்பட்டும் விட்டன. ஆனால் எது வும் கிட்டவில்லை.செயற்பாடுகள் வேகம் குறைந்து காணப்படுகின்றன. எல்லோரையும் நம்பியே கெட்டு(ம்)ப் போகிறோம்.

இந்த நிலையிலே தமிழக சட்ட சபைத் தேர்தல் அட்டையாக ஒட்டத் தொடங்கிவிட்டது. கட்டத் துரைகள் பலர் கட்டம் போட்டு பிதற்றவும் தொடங்கி விட்டனர்.தொப்புள் கொடி உறவாக,தமிழர்கள் அதிகம் வாழ்கின்ற அயல் தேசமாக தங்களின் உறவுகள் கொத்தாக அழிக்கப்பட்டபோது எதுவும் காத்திரமாகச் செய்துவிடாது வாய் பொத்தியிருந்தவர்கள் வார்த்தைகளில் நல்லுறவு தொடர்பில் பேசத் தலைப்பட்டு விட்டனர். உறவு என்று பேசுவதற்கு இவர்கள் தகுதியானவர்களா..?? தெரியவில்லை..! கடந்து சென்ற தமிழன் வரலாற்றின் இரத்த சரித்திரத்திலே பல அடக்கு முறைகளைச் செய்தவர்கள் அல்லவா இவர்கள். தியாக தீபம் திலீபன், கிட்டு, தியாகச் சாவடைந்த அன்னை பூபதி என்ற விடியல் தரப் பிறந்த மோட்சங்களின் பாவச் சுமையாளிகள் அல்லவா இவர்கள் எப்படி மனச்சாட்சியோடு இருப்பார்கள்- நடப்பார்கள்.




# பெண்களுக்கு கைகொடுப்போம்...

உடுவிலூர் கலா

விடியலில் நனைந்திட்ட பெண்கள் சிகரத்தை தொட்டு விட்டனர். விடியலைத் தேடும் பெண்கள் தன்னம்பிக்கையோடும், தளராத முயற்சியோடும் வாழ்வில் பயணிக்கின்றனர். இன்னொரு புறமாக அதீத வளர்ச்சி கொண்டு பண்பாட்டின் எழிற் கோலங்களை அலங்கோலமாக்கி பெண்மையை மாசுபடுத்தும் பெண்கள்.

இவற்றுக்கெல்லாம் எதிராக சந்தோசத்தை பறிகொடுத்தவர்களாக வாழ்வாதாரமின்றி தனிமையாக எமக்காகப் பொழுது விடியுமா? என்கிற விடைகிடைக்காத வினாவுடன் வேதனையுடன் வாழும் பெண்கள். தொடர் போரின் கொடூரம். வன்னிபோரில் ஆயிரக்கணக்கான பெண்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளனர். இதில் இளம் விதவைகளே ஏராளம். போர் முடிந்தது. இன்று இந்தப் பெண்களின் நிலை என்ன?

உடைமைகள் உயிர்கள் இழந்து விதவைகளாகி எப்படி வாழ்வது? என்கிற போராட்டத்தோடு சில தனித்துவிட்ட உறவுகள், பிள்ளைகளைத் தாங்கி தலைமைத்துவத்தோடு ஏராளமான பெண்கள் வன்னியில் வாழ்கின்றனர்.

வசந்தமே வீசாதா? தமது வாழ்வில் என ஏங்கும் இவர்கள் ஒவ்வொருவருக்குள்ளும் ஓராயிரம் வேதனைகள் ஒளிந்திருக்கின்றன. இவர்களில் ஒருசாராரின் கணவன்மார் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். புகைப்படத்தை ஏந்தியவர்களாக வருவோர், போவோரிடம் நீதிகேட்கும் இவர்களுக்கு மிஞ்சுவது கண்ணீரே. சில விதவைகள் தடுப்பு முகாமில் இருந்து வந்த முன்னாள் போராளிகளையே திருமணம் செய்து ஏதோ துணை என்ற பெயரோடு வாழ்கின்றனர்.

விசாரணைக்காக அழைத்துச் சென்றவர்கள் வருடங்கள் பலசென்றும் திரும்பிவராமல் போனதால் நெற்றியில் பொட்டோடு, கணவன்மார் எங்கோ உயிரோடு இருப்பதாக நம்பி வாழும் பெண்களின் பரிதாப நிலை சொல்லி மாளாது.

எமது கைப்பைக்குள் கணவன்மாரின் வேதனைகளை நிரப்பிச் சுமந்து கொண்டு வாழ்கிறோம் என அந்தப் பெண்கள் கண்ணீர் சிந்தி கூறுவதைக் கேட்க சித்தமே கலங்குகிறது. இன்னும் சில பெண்கள் "நாங்கள் ஒழுக்கமாக வாழ்ந்தவர்கள். இன்றும் ஒழுக்கமாகத்தான் வாழ்கிறோம்" என வேதனையிலும் பலமாக கூறுகின்றனர்.



இவர்கள் பொருளாதார வசதிகள் எதுவுமின்றி நாளாந்த வாழ்வாதாரத்துக்கே மிகவும் கஷ்டப்படுகிறார்கள். தம்மை யாரும் கருணையுடன் பார்க்கவில்லை என குற்றம் கூறுகிறார்கள். தமது நிலைகளை வேதனைகளை வாய்விட்டுச் சொல்கிறார்கள். பூப்போன்ற பெண்மை கொண்ட இவர்கள் போராளிகளாக இணைந்ததாலும், வன்னியில் குடியிருந்ததாலும் இவ்வாறானதொரு இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். உண்மையில் இவர்களது வாழ்வியல் கொடூரமானது. வெறுமையானது. இவர்களது வாழ்வை மேம்படுத்த வேண்டியது, இவர்களைத் தாங்க வேண்டியது எம் ஒவ்வொருவரதும் தலையாய கடமையாகும்.

அரச அரசசார்பற்ற நிறுவனங்கள் இவர்களை முதன்மைப்படுத்தி வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும். புதிய ஆலயங்களையோ விகாரைகளையோ கட்டுவதை விடுத்து, ஆன்மிக புனரமைப்புகளை நிறுத்தி அவற்றுக்கு ஏற்படும் செலவை வன்னிப் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தச் செலவிட வேண்டும்.

இன்று எம்மவரின் திருமணங்களை மண்டபங்கள் சொல்லி நிற்கின்றன. தொகையான பணத்தை மண்டபங்களுக்குச் செலவிட்டு திருமணம் செய்வதை விடுத்து, அந்தப் பணத்தை இப்பெண்களின் வாழ்வாதாரத்துக்கு உதவச் செய்யலாம். புலம்பெயர் தமிழர் விடுமுறைக்காக இங்கு வந்து கடற்கரைகளிலும், பொது இடங்களிலும் கூடி மதுவைச் சுவைத்து உல்லாசச் செலவு செய்கின்றனர். இவர்கள் ஒரே ஒரு தடவை சுற்றுலாவாக வன்னியை நோக்கிச் சென்று அங்கு கண்ணீரோடு வாழும் பெண்களைத் தொடர்பு கொண்டு அவர்களுக்கு தம்மால் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும். புலம் பெயர் நாடுகளில் வாழும் தமிழர் இந்தப் பெண்களுக்காக ஓர் அமைப்பை உருவாக்கி நிதிதிரட்டி இவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். உண்மையில் அங்கவீனமாக, உணவின்றி , கல்வி கற்க வசதி இன்றி, மழை வெயிலில் பாதுகாப்பான வீடுகளின்றி ஏக்கத்தோடும், வேதனையோடும் ஏராளமான பெண்கள் வாழ்கின்றனர். இவர்கள் இருளுக்குள் வாழ்கிறார்கள் என்பதே உண்மை.

போர் இவர்களுக்குக் கொடுத்த வலி தீரப்போவதில்லை. ஆனாலும், அவர்கள் வாழ்ந்தாக வேண்டும். வாழ்வாதாரத்தை முன்னெடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். வன்னியில் ஒருவேளை உணவுக்கு வழியின்றி அல்லற்படும் பெண்கள் பெற்ற பிள்ளைகளை உணவூட்டி, கல்வி கொடுக்க முடியாத நிலையில் பெண்கள். விழியிழந்த பெண்கள் உடலுறுப்புக்கள் உணர்விழந்த நிலையில் பெண்கள் இப்படி எத்தனை எத்தனையோ....


யாழ்ப்பாணத்தில் அழகுக்கலை நிலையங்களில் அழகுச்சிகிச்சை பெற முண்டியடிக்கும் பெண்களை என்னவென்பது? தோலின் நிறத்தை வெண்மையாக்க பயன்படுத்தும் கிறீம்களின் விலை ஒரு குடும்பத்துக்குச் சோறு போடும்.

அன்பான சகோதரிகளே, எமது சகோதரிகள், எமது தாய்மார்கள், எமது தொப்புள்கொடி உறவில் வந்த பெண்கள் கண்ணீரோடு வாழும் நிலை, ஒரு தடவை சிந்தித்துப் பாருங்கள். பத்திரிகைகளில் தையல் இயந்திரம், ஆடு, சைக்கிள் தாருங்கள் என கண்ணீரோடு வினவும் பெண்களின் கண்ணீரைத் துடைக்க எம்மால் ஆன உதவிகளைச் செய்ய வேண்டும். எமது அழகை மேம்படுத்த நாம் செலவிடும் பணத்தை ஒருவேளை அவர்களின் உணவுக்கு கொடுக்க முன் வந்தால் பேருதவியாக இருக்கும்.

பெண்களாகிய நாம் மகளிர் அமைப்புகளை உருவாக்கி எந்த வகையில் நிதி திரட்டலாமோ, அந்த வழியில் எல்லாம் திரட்டி வன்னி வாழ் பெண்களைத் தேடிச் சென்று அவர்களது துன்பத்தில் பங்கு கொண்டு எம்மாலான உதவிகளைச் செய்யவேண்டும்.

எமது பெண்களை நாமல்லவா தாங்க வேண்டும். அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதன் மூலம், வாழ்வாதாரத்தை உயர்த்த முடியும். எங்கள் வீட்டுக்கதவைத் தட்டும் தென்றல் அந்தப்பெண்கள் வீட்டுக் கதவையும் தட்டட்டுமே. உதவிக்குத் தயாராகுங்கள் பெண்களே. நாளாந்தம் காரணமின்றி எவ்வளவோ செலவு செய்கிறோம். சிறுதுளி பெருவெள்ளம். எம்மால் முடிந்ததைச் செய்வோமா பெண்களே...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** மனக்குழப்பம் உருவாகி மறையும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். இலாபம் மிதமாக இருக்கும். கண்களின் பாதுகாப்பில் தகுந்த கவனம் தேவை.

**இடபம்:** எவரிடமும் சாந்த குணத்துடன் பழகுவீர்கள். தொழிலில் வருமானம் திருப்தியளிக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர். நீண்டநாள் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**மிதுனம்:** பேச்சு, செயலில் நிதானம் பின்பற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் உள்ள சிரமத்தைப் பிறரிடம் விவாதிக்க வேண்டாம். பண விடயத்தில் எச்சரிக்கை தேவை. உடல் நலனில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்:** தைரியத்துடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். உறவினர் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். பிள்ளைகளின் செயற்பாடு பெருமை சேர்க்கும்.

**சிங்கம்:** விலகிச் சென்ற உறவினரும் நெருங்கி வருவர். தொழில், வியாபாரம் செழித்து, புதிய சாதனை உருவாகும். நிலுவைப் பணம் கிடைக்கும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**கன்னி:** மனம் விரும்பாத நிகழ்ச்சியைத் தவிர்ப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் தடை குறுக்கிடும். இலாபம் சுமார். பெண்களுக்கு பணத்தேவை அதிகரிக்கும். சீரான ஓய்வு உடல் நலம் காக்கும்.

**துலாம்:** சிலரது பேச்சால் அதிருப்தி கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். உடல்நலத்துக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படும். புத்திரர் பெருமை தேடித் தருவர்.

**விருச்சிகம்:** அவமதித்தவரையும் பெருந்தன்மையுடன் ஏற்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை காண்பீர்கள். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும். மனைவியின் பாசம் நிறைந்த அன்பில் மகிழ்வீர்கள்.

**தனுசு:** புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடு சிறக்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் பன்மடங்கு உயரும். உடல் ஆரோக்கியம் பெறும்.

**மகரம்:** முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். வருமானம் திருப்தியளிக்கும். பிள்ளைகளின் வளர்ச்சியில் அக்கறை உண்டாகும்.

**கும்பம்:** திட்டம் நிறைவேறும் முன் முடிவு பற்றி பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உருவாகிற போட்டியைச் சமாளிப்பீர்கள். எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பணக்கடனில் ஒரு பகுதி செலுத்துவீர்கள்.

**மீனம்:** உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு எளிதாக நிறைவேறும். ஆதாயம் உயரும். குடும்பத்துடன் விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**ஆசிரியர்:-** ஏன்டா லேட்..?
**மாணவன்:-** வீட்டில பிரச்சினை..!
**ஆசிரியர்:-** என்ன பிரச்சினை..??
**மாணவன்:-** வீட்டில பாட்டி செத்திட்டாங்க..! எரிக்கிறதா.. புதைக்கிறதா என்று பிரச்சினை..!
**ஆசிரியர்:-** அதில் என்ன பிரச்சினை..??
**மாணவன்:-** எரிச்சா பிரச்சினை இல்லை.. புதைச்சா தான் பிரச்சினை..!
**ஆசிரியர்:-** அதில் என்ன பிரச்சினை..??
**மாணவன்:-** புதைச்சா அந்த இடத்தில.. புல்லு முளைக்குமா..? முளைக்காதா என்று தான் பிரச்சினை..!
**ஆசிரியர்:-** அதில் என்ன பிரச்சினை..??
**மாணவன்:-** புல்லு முளைக்காட்டி பிரச்சினை இல்லை.. முளைச்சா தான் பிரச்சினை..!!
**ஆசிரியர்:-** அதில் என்ன பிரச்சினை..??
**மாணவன்:-** முளைச்ச புல்லை மாடு.. திண்ணுமா? திண்ணாதா என்று தான் பிரச்சினை..!
**ஆசிரியர்:-** அதில் என்ன பிரச்சினை..??
**மாணவன்:-** முளைச்ச புல்லை.. மாடு திண்ணவில்லை என்று தான் பிரச்சினை இல்லை.. திண்றால் தான் பிரச்சினை..!
**ஆசிரியர்:-** அதில் என்ன பிரச்சினை..??
**மாணவன்:-**அந்த இடத்திலை முளைச்ச புல்லை திண்ற மாடு.. பிழைக்குமா.. பிழைக்காதா என்று தான் பிரச்சினை..!
**ஆசிரியர்:-** அதில் என்ன பிரச்சினை..??
**மாணவன்:-** மாடு பிழைச்சிட்டா பிரச்சினை இல்லை.. மாடு செத்துட்டா தான் பிரச்சினை..!
**ஆசிரியர்:-**அதில் என்ன பிரச்சினை..??
**மாணவன்:-** வேறு என்ன..?? எரிக்கிறதா.. புதைக்கிறதா என்று தரன்..!!!!
**ஆசிரியர்:-** ???????













## மத கஜ ராஜா வெளியீடு அடுத்த வாரம்



சுந்தர்.சி இயக்கத்தில் விஷால், அஞ்சலி, வரலட்சுமி ஆகியோர் நடித்த "மத கஜ ராஜா" திரைப்படம் வெளியீட்டுக்கும் இரண்டு வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. சில பல நிதிப் பிரச்சினைகள் காரணமாக இத்தனை நாள்களாக வெளியாகாமல் முடங்கிக் கிடந்த இந்தப் படம், கடந்த சில வாரங்களாக வெளியாகும் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டது. அடுத்த வாரம் வெளியாகும் "கோ 2" வுடன், "மத கஜ ராஜா"வும் இணைந்துள்ளது. இந்த முறை கண்டிப்பாக இந்தப் படம் வெளியாகும் என நம்பிக்கையுடன் காத்திருக்கிறது விஷால் தரப்பு.



### புன்னகை மன்னன்

**இழந்தவைகள் எதுவும் நமக்கானதல்ல
இருப்பவைகள் எதுவும் இழப்பதற்கில்லை...!**

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1 | | | | 3 | |
| 9 | | | 2 | | | 1 | | |
| 2 | | 1 | | 4 | | | 9 | |
| | | 4 | | | 2 | | 7 | |
| | | | | 3 | | | | |
| | 2 | | 6 | | | 8 | | |
| | 1 | | | 2 | | 6 | | 8 |
| | | 8 | | | 3 | | | 5 |
| | 7 | | | | 6 | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | 1 | 8 | 9 | 3 | 7 | 2 | 4 |
| 4 | 2 | 8 | 7 | 6 | 5 | 3 | 9 | 1 |
| 3 | 7 | 9 | 2 | 4 | 1 | 8 | 5 | 6 |
| 2 | 8 | 3 | 1 | 7 | 6 | 5 | 4 | 9 |
| 1 | 4 | 6 | 9 | 5 | 8 | 2 | 3 | 7 |
| 5 | 9 | 7 | 3 | 2 | 4 | 6 | 1 | 8 |
| 7 | 6 | 5 | 4 | 3 | 9 | 1 | 8 | 2 |
| 9 | 1 | 2 | 5 | 8 | 7 | 4 | 6 | 3 |
| 8 | 3 | 4 | 6 | 1 | 2 | 9 | 7 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.

2005 இல் இது உலக அளவில் பிரபல்ய மானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | பாசையூர் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 800 | 800 | 800 | 800 |
| நண்டு | 250 | 500 | 300 | 400 | 400 | 300 | – |
| கணவாய் | 600 | 600 | 500 | 400 | 600 | – | – |
| பாரை | 550 | 500 | 500 | 600 | 600 | 600 | 450 |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 1000 | 600 | 600 |
| சீலா | 300 | 500 | 400 | 400 | 500 | 500 | 400 |
| விளை | 650 | 500 | 400 | 500 | 450 | 600 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 300 | 400 | 400 |
| கும்பிளா | 400 | 350 | 300 | 400 | 400 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | – | – |
| ஒரா | 400 | 400 | – | – | 450 | – | – |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 300 | 400 | 370 |
| நகரை | 250 | 250 | – | 300 | 400 | 300 | 350 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 120 | 100 | – |
| ஒட்டி | 300 | 250 | 150 | 250 | 300 | – | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 350 | 400 | 300 | 200 |
| மதனம் | 150 | 300 | 180 | – | 300 | 400 | 300 |
| கொய் | 100 | 200 | 60 | 80 | 120 | 100 | – |
| பாலை | 400 | 250 | 250 | 300 | 500 | 500 | – |
| வாழை | 100 | 150 | 200 | 300 | 400 | 300 | – |

## பொருத்தமான காலணிகள்

காலணிகள், இப்போதெல்லாம் ஆடம்பரத்துக்கு அவசியமாக மாறிவருகின்றன. காலுக்கு இதமாக இருக்கவேண்டும் என்பதற்காக வாங்கப்பட்ட காலணிகள் காலமாற்றத்தில் அழகுக்கும், ஆடம்பரத்துக்கும் மாறியதில் ஆச்சரியமில்லை என்றாலும், ஆடைக்கும், அணிகலன்களுக்கும் கொடுக்கும் அதே முக்கியத்துவத்தை செருப்புக்கும் கொடுத்து வாங்கி அணிந்து மகிழ்கின்றனர் இன்றைய தலைமுறையினர்.

அதனால் தான் ஆடை, அணிகலன்களுக்கு நிகராக காலணிகளின் விலையும் அதிகரித்து வருகின்றது. இப்போதெல்லாம் பல ஆயிரம் ரூபாய் வரை செருப்புகள் விற்கப்படுகின்றன.

கலர்புல் செருப்புகளையும், ஆடைக்கு ஏற்ற செருப்புகளையுமே இன்றைய இளம் பெண்கள் விரும்புகின்றனர். ஆனால் செருப்பு என்பது நமது உள்ளங்காலோடு நெருங்கிய தொடர்பு உடையதால் அதை வயதுக்கு தக்க படியும், தேவைக்கு தக்கபடியும் வாங்குவது முக்கியமானது. ஏனென்றால் உள்ளங்காலுடன் நமது உடலில் உள்ள அனைத்து நரம்புகளும் தொடர்புடையது.

இப்போது திருமணம் போன்ற விசேடங்களுக்கும், வீடு, சுற்றுலா போன்று ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விதமான செருப்புகளைப் பெண்கள் அணிகின்றனர். உடலுக்கு தகுந்தபடி செருப்புகளை வாங்குவது நல்லது. பொருத்தமான செருப்புகளை அணிபவர்களுக்கு தன்னம்பிக்கை அதிகமாக இருக்கும். பொருத்தமில்லாத செருப்புகளை அணிந்தால் தன்னம்பிக்கை குறையும்.

செருப்புகளை தேர்ந்தெடுத்து வாங்கும் போது மூன்று விடயங்களைக் கவனித்து வாங்குவது நல்லது. அவை சௌகரியம், அழகு, நிறம் ஆகியவை. கண்ணைப் பறிக்கும் கலர்களை விட இளநிறமே, மற்றவர்களை ஈர்க்கக் கூடியதாக இருக்கும். முன்பகுதி குறுகி, குதிக்கால் உயர்ந்து இருப்பதையே இன்றைய இளம்பெண்கள் விரும்புகின்றனர். செருப்புகளின் முன் பகுதி குறுகி உள்ளதால் விரல்கள் அழுத்தத்துக்கு உள்ளா கின்றன. மேலும், வர்மப் புள்ளிகளும் அழுத்தப்படுவதால், உடலில் பலவித பிரச்சினைகளை ஏற்படுத்தும். இதனால் தலைவலி, கண் வலி, சோர்வு, கால்வலி ஆகிய பிரச்சினைகள் ஏற்படும். மேலும் இறுக்கிப் பிடிக்கும் விரல்களில் கொப்பளங்கள் ஏற்படும். இயல்பாக நடக்க முடியாமல் நெருக்கடி ஏற்படும். இன்றைய பேன் விரும்பிகள் அனைவருமே குதிகால் உயர்ந்த செருப்புகளையே அணிகின்றனர்.



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 80 | 80 | 80 | 120 | – | 40 | 80 |
| கத்தரி | 100 | 80 | 100 | 100 | 80 | 80 | 70 | 40 |
| கரட் | 80 | 80 | 80–200 | 100 | 80 | 100 | 70 | 120 |
| மரவள்ளி | 60 | 60 | 50 | 80 | 60 | 60 | 40 | 40 |
| பயிற்றை | 160 | 100 | 100 | 120 | 140 | 60 | 80 | 60 |
| பாகல் | 120 | 100 | 140 | 120 | 120 | 120 | 110 | 100 |
| கருணைக்கிழங்கு | 100 | – | 100 | – | 70 | – | 60 | 50 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 80 | 80 | 80 | 90 | 65 | 80 |
| சி.வெங்காயம் | 80 | 120 | 100 | 120 | 100 | 140 | 100 | 70 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 | 30 | 40 | 15 | 20 |
| தக்காளி | 160 | 120 | 120 | 180 | 140 | 160 | 140 | 180 |
| வாழைக்காய் | 30 | 30 | 50 | 40 | 20–40 | 30 | 30 | 30 |
| கீரை | 30 | 30 | 40 | 15 | 25–30 | 30 | 20 | 40 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 30 | 20 | 30 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 80 | 120 | 80 | 100 | 80–100 | 100 | 90 | 60 |
| புடோல் | 80 | 50 | 80 | 60 | 60 | 100 | 30 | 60 |
| கோவா | 100 | 80 | 100 | 100 | 100 | 100 | 80 | 70 |
| வெண்டி | 80 | 80 | 80 | 120 | 80–100 | 80 | 50 | 80 |
| போஞ்சி | 180 | 200 | 200 | 240 | 160 | 240 | – | 180 |
| லீக்ஸ் | 180 | 220 | 120 | 120 | 120 | 120 | 100 | 90 |
| தேங்காய் | 40 | 25 | 50 | 40–50 | 30–40 | 30 | 15–30 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 80 | 80–120 | 90 | 70 | 100 |
| தேசிக்காய் | 500 | 400 | 400 | 400 | 360 | 600 | 350 | 300 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10–15 | 20 | 10 | 12 |
| கறிமிளகாய் | 80 | 80 | 100 | 120 | 80–120 | 80 | 120 | 80 |
| இராசவள்ளி | 150 | 150 | 160 | 160 | 140–160 | – | 110 | 120 |
| முருங்கைக்காய் | 200 | 150 | 200 | 180 | 300 | 240 | 150 | 300 |

## முந்திரி குழம்பு



### தேவையானவை

முந்திரிப்பருப்பு - 1 கப்
கெட்டியான தேங்காய்ப்பால் - அரைக் கப்
இரண்டாவது பால் - 1 கப்
நறுக்கிய வெங்காயம் - 1
மிளகாய் - 2
உப்பு - தேவைக்கேற்ப
காய்ந்த மிளகாய், சீரகம் - வறுத்து அரைக்கவும்

### செய்முறை

முந்திரிப்பருப்பை வேக வைத்து தனியே எடுத்து வைத்துக் கொள்ளவும்.

சட்டியில் எண்ணெய் ஊற்றி, சீரகம் போட்டு பொரிந்தவுடன் வெங்காயம், பச்சைமிளகாய், கறிவேப்பிலை போட்டு வதக்கவும்.

வதங்கியவுடன் இரண்டாவது தேங்காய்ப்பால் விட்டு உப்புப் போட்டு கொஞ்சம் கொதிக்க விடவும்.

வெங்காயம் வெந்தவுடன், அரைத்த மசாலாப் பொருள்களைக் கொட்டி கெட்டியான தேங்காய்ப் பாலை ஊற்றி, வேக வைத்த முந்திரிப் பருப்பையும் சேர்த்துக் கிளறவும்.

குழம்பு ஒன்று சேர்ந்து வரும் சமயம் இறக்கவும்.

**நாளை**
சித்திரை-27
செவ்வாய்க்கிழமை
10.05.2016
திதி: சதுர்த்தி
மா.05.44 வரை
நட்சத்திரம்: திருவாதிரை
பி.இ.03.57 வரை
ராகுகாலம்:
02.54-04.24 வரை
சுபநேரம்:
10.24-11.54 வரை
சதுர்த்தி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### இராயப்பு பாவிலுப்பிள்ளை
### (பொன்சிங்கம்)



புலோப்பளை கிழக்கு, பளையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராயப்பு பாவிலுப்பிள்ளை (பொன்சிங்கம்) நேற்று (08.05. 2016) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மத்தியாஸ் இராயப்பு -குணசாந்தம்மா தம்பதியரின் அன்பு மகனும் அல் பிறட்-பற்றிமா தம்பதியரின் மருமகனும் யசிந்தாவின் அன்புக் கணவரும் பிரதீபன் (லண்டன்) ,பௌஜன் (பிரான்ஸ்), சகானா, நம்சிகன், அர்ச்சனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் மத்தியாஸ், மரியறீற்றா, மாக்கிறேட் ராணி, அருளா னந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராசநாயகம் (லண்டன்), ஜெயரஞ்சன் (இத்தாலி), சுகந்தினி, லீலா (பிரான்ஸ்),நிர்மலா (பெல் ஜியம்), செல்வநாயகம் (லண்டன்), லூத்தம்மா , அலெஸ், பேதுறு, மேரி கிறேஸ் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு 09.05.2016 திங்கட்கிழமை பி.ப 3.00 மணிக்கு புலோப்பளை தூய இராயப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புலோப்பளை கிழக்கு,**
**பளை.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி புவனேஸ்வரி ஆறுமுகம்

பிறப்பு
14 . 11 . 1929



இறப்பு
07 . 05 . 2016

நவாலியைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழையை வசிப்பிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி ஆறுமுகம் 07.05.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் ஆறுமுகம் (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சண்முகம் தம்பதிகளின் அன்பு மருமகளும் புவனேந்திரன்( AB Securitas, ஓய்வு பெற்ற விமானப்படை அதிகாரி), புவனச்சந்திரன்(கனடா), புவனரவீந்திரன் (கனடா), புவனயோகேஸ்வரன்(இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்), புவனரஞ்சிதன் (இங்கிலாந்து), மீனலோஜினி, சுஜாதா(சுவிஸ்), ஆகியோரின் அன்புத் தாயாரும் தேவறாயினி, கேதாரகௌரி (கனடா), யோகராணி (கனடா), சதானந்தவதனா, குமுதினி (இங்கிலாந்து), கணேசலிங்கம் (நீர் பாசனத்திணைக்களம்- ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்), திவாகரன்(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் ஜெயப்பிரஷான்(Virtusa Software Engineer), ருக்ஷானி (Vavuniya Campus of Jaffna University), சஞ்ஜீத், சிந்தியா (ம/ அடம்பன் மத்திய மகா வித்தியாலயம்- ஆசிரியை), ரவிசாத்(Uva Wellasa University),ஹேசபர்த்னி (மகாஜனக் கல்லூரி), ராம்கிஷான்( IIS City campus), சாரங்கா (உடுவில் மகளிர் கல்லூரி), லக்ஸ்மன் (யாழ்.இந்துக் கல்லூரி),யோஜீவன்(மகாஜனக்கல்லூரி), சர்மதாயினி( மகாஜனக்கல்லூரி), ஹிஷான் (கனடா), டுஷான்(கனடா), றொஷான் (கனடா), அனோஷான் (கனடா), திவிஷாத் (இங்கிலாந்து), கபில்ஷாத் (இங்கிலாந்து), சர்மிலன்(சுவிஸ்), தாரண்யா(சுவிஸ்), தீபிகா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான இரத்தினம்- மகேஸ்வரி, மாசிலாமணி, மனோகரன் மற்றும் மாணிக்கவாசகர், மகிழ்ராஜா, தம்புமங்களேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை( 10.05.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு தெல்லிப்பழையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தெல்லிப்பழை கொத்தியாலடி பொது இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மணியம் தெரு,**
**தெல்லிப்பழை**

தகவல்: **குடும்பத்தினர்.**
**யோய்: 077 920 3632**
**பவுண்: 071 050 1398, மீனா: 077 699 2511**

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் இரத்தினம்

யாழ். புங்குடுதீவு, 9ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல.60, டிப்போ வீதி, உதயநகர் கிழக்கு, கிளிநொச்சியை நிரந்தர வதிவிடமாகவும் இரத்தினம் ஸ்ரோர்ஸ், டிப்போவீதி, கிளிநொச்சி, மாயவன் களஞ்சியம், சந்தை உட்புறம், கிளிநொச்சி என்பவற்றின் உரிமையாளருமான ஆறுமுகம் இரத்தினம் நேற்று (08.05.2016) காலமானார்.



அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு பாக்கியரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், பாக்கியலட்சுமி யின் (ராணி) அன்புக் கணவரும், மீனலோஜினி, சுகீதரன், காலஞ்சென்ற குணசிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுபசிறீதரன் (ஐயப்பா களஞ்சியம், டிப்போவீதி, கிளிநொச்சி), ரமணி ஆகியோரின் அன்பு மாமனும், சதுர்த்திகா, கிருத்திகா (கிளிநொச்சி மகா வித்தியாலயம்), இளந்தளிர், சொப்பனா (கிளி/ திருவையாறு மகா வித்தியாலயம்) ஆகி யோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2016) திங்கட் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2.00 மணியளவில் திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல. 60, டிப்போ வீதி,**
**உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் வாள்வெட்டுக்கு முடிவுகட்ட கொழும்பில் சந்தித்தனர் புத்திஜீவிகள்

## உரிய தரப்பினரிடம் பேச குழுவும் அமைப்பு

கொழும்பு, மே 9
கொலை, கொள்ளை, வாள்வெட்டு, கோஷ்டி மோதல் மற்றும் போதைப் பொருள் பாவனையால் வடக்கில் தொடரும் அவலநிலையை உரிய தரப்பினரின் கவனத்துக்குக் கொண்டுவருவதன் மூலம் அதனைத் தடுத்துநிறுத்தும் நோக்குடன் கொழும்பில் நேற்று புத்திஜீவிகள் கூடி முக்கிய கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதன்போது வடக்கின் அவலநிலைக்கு உடன் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் செயற்பாட்டுக் குழுவொன்றும் அமைக்கப்பட்டது.

வெள்ளவத்தையில் நேற்று முற்பகல் 10 மணியிலிருந்து பிற்பகல் 2 மணிவரை நடைபெற்ற இந்தச் சந்திப்பில் வடக்கு மற்றும் கொழும்பைச் சேர்ந்த புத்திஜீவிகள் கலந்து கொண்டனர்.

இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த சகலரும், வடக்கின் அவலநிலையை உரிய தரப்பினரின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டும் எனவும், அவலநிலைக்கு உடன் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

இந்தச்செயற்பாட்டை முன்னெடுக்கும் நோக்கு டன் சந்திப்பின் இறுதியில் குழுவொன்றும் அமைக்கப்பட்டது.

இந்தக் குழு ஜனாதிபதி, பிரதமர், பொலிஸ்மா அதிபர் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களைச் சந்தித்து வடக்கின் தற்போதைய அவலநிலைமை குறித்துப் பேசி, அதற்கு உடன் முற்றுப்புள்ளி வைக்குமாறு வலியுறுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அரசியல் சார்பற்ற சமூக நோக்குடன் இந்தச் செயற்பாட்டுக்குழு இயங்கவேண்டும் எனவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

வடக்கு மக்களின் நல்வாழ்வுக்காகக் குரல் கொடுக்கவுள்ள இந்தக் குழு, காலப்போக்கில் ஓர் அமைப்பாகவும் இயங்குவதற்கும் இந்தச் சந்திப்பில் முடிவெடுக்கப்பட்டது எனத் தெரியவருகின்றது.

(வ-5)

## சாட்சி

இதன்போது பெண் ஒருவர் சாட்சியமளித்திருந்தார். அவர் தனது சாட்சியத்தில், மன்னாரிலிருந்து 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்தோம். முல்லைத்தீவுக்குக் கடல் வழியாகச் சென்றுகொண்டிருந்தோம். அப்போது கொக்கிளாய் இராணுவ முகாமிலிருந்து பீரங்கிப் படகில் இராணுவத்தினர் வந்தனர். அவர்கள் எமது படகை வழிமறித்தனர். பின்னர் துப்பாக்கியால் சுட்டனர். இதனால் ஒரே நாளில் எனது உறவினர்கள் 5 பேரை நான் இழந்தேன்.

இந்தத் தாக்குதலில் தப்பித்த எனது அண்ணன்கள் இருவரும் இராணுவத்தினரால் வெள்ளை வானில் கடத்தப்பட்டனர். இதன் பின்னர் எந்தத் தகவலும் இல்லை என்று குறித்த பெண் ஆணைக்குழு முன் தனது சாட்சியத்தைப் பதிவு செய்திருந்தார்.

இவ்வாறான நிலையிலேயே கடந்த 4 ஆம் திகதி புலனாய்வாளர்கள் என்று தங்களை அடையாளப் படுத்திக் கொண்டவர்களால், சாட்சியமளித்த பெண் தேடப்பட்டுள்ளார் என்று தெரிவித்த அன்ரனி மார்க், கடந்த காலங்களிலும் இவரைப் புலனாய்வாளர்கள் என்று அறிமுகப்படுத்திக் கொண்டவர்கள் அச்சுறுத்தியதாகவும் குறிப்பிட்டார். அத்துடன் இவர், காணாமற்போனோர் தொடர்பான பல்வேறு அமைப்புக்களுடன் இணைந்து செயற்பட்டு வருபவர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை சாட்சியமளித்த சம்பந்தப்பட்டவரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் வங்காலையில் காணாமற்போனோர் தொடர்பிலான ஒன்றுகூடல் ஒன்று கடந்த 5 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டது. இதனை ஏற்பாடு செய்துவிட்டு வீட்டுக்கு வர நேரமாகிவிட்டது. இவ்வாறானதொரு நிலையில் இரவு 7.30 மணிக்கு எனது வீட்டுக்கு மூவர் சென்றுள்ளனர். கடற்படைப் புலனாய்வுப் பிரிவினர் என்று அவர்கள் தங்களை அறிமுகப்படுத்தியுள்ளனர். வீட்டில் பிள்ளைகள் மாத்திரமே இருந்த னர்.

இதன்போது அயல் வீட்டாரை அவர்கள் அழைத்துள்ளனர். அயல் வீட்டுக்காரர் வந்து என்ன விடயம் என்று அவர்களிடம் கேட்டபோது, தாம் புலனாய்வாளர்கள் என்று தெரிவித்து, என்னை விசாரித்துள்ளனர். காணாமற்போனோர்தொடர்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கூட்டம் தொடர்பிலும், என்னைப் பற்றியும் விவரங்களை அவர்கள் பெற்றுச் சென்றுள்ளனர். அத்துடன் அங்கிருந்தவர்களிடம் அச்சுறுத்தி எனது தொலைபேசி இலக் கத்தையும் பெற்றுச் சென்றனர். இதன் காரணமாகவே மன்னார் பிரஜைகள் குழுவிடம் நான் முறைப்பாடு செய்தேன் – என்றார்.

## மரண அறிவித்தல்

### திருமதி மேரிமாகிறேற் ஜேக்கப்



ஈச்சமோட்டை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி மேரிமாகிறேற் ஜேக்கப் 07.05.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜேம்ஸ் - அருளம்மா தம்பதி களின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான பொன்னுத்துரை - செல்லம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஜேக்கப்பின் (அருமைத்துரை) அன்பு மனைவியும், காலஞ்சென்ற எட்வேட் மற்றும் கௌறி, ஜெயவதி, வசந்தி, கில்பேட்குணம் (பிரதம கணக்காளர் மாவட்ட செயலகம்- கிளிநொச்சி), நோயல் (வவி), கொலஸ்ரிக்கா, சுகந்தி, றொபேட், சுதா.கியூபேட் (ஆசிரியர் - யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பெரியதம்பி, ஜஸ்ரின், ஜெயமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயசீலி, அகஸ்ரின், சான்டோ, அன்ரன், ஜெனித்தா, லதா, சின்னவன், ரவி, பவா, தர்சினி, றூபா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற நவரட்ணம் மற்றும் குணம், அழகு, செல்வராணி, யோகராணி, காலஞ்சென்ற லூர்த்தம்மா மற்றும் தங்கராசா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதி அடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ஜே.கில்பேட்குணம்
ஜே.கியூபேட்
075 966 4266

இல.19/4, ஈச்சமோட்டை,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
**நல்லம்மா**
**(முத்தம்மா ஆச்சி)**
**முத்துத்தம்பி**

கடந்த 10.04.2016 சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டு உடன் வந்து ஆறுதல் கூறியும் மரணச் சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் உள்நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் அனுதாபங்களைப் பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் இல்லத்தில் நாளை (10.05.2016) செவ்வாய்க்கிழமை நடைபெறும் அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

ஊரெல்லை வீதி,
மீசாலை மேற்கு,
மீசாலை.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

## கண்ணீர் அஞ்சலி

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **செல்வி தம்பிராசா நித்தியவாணி** அவர்களின் அன்புத் தந்தையார்

### மாணிக்கம் தம்பிராசா

அவர்களின் மறைவு எம்மையெல்லாம் ஆழ்ந்த சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலாளரும், நலன்புரி சங்க அங்கத்தவர்கள் அனைவரும் , நலன்புரிசங்கம், பிரதேச செயலகம், தெல்லிப்பழை.**

## முதலாம் ஆண்டு நினைவு

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட

*திருமதி*
*சந்திரபூரணி பூபாலபிள்ளை*



பிறப்பு 13.10.1948
இறப்பு 20.05.2015
திதி:திருதியை 09.05.2016

எம் அம்மா......
எம்மை விட்டுச் சென்று கடந்தது ஓராண்டு.....
என்றும் எம்மை வழிகாட்டி
எம் நினைவில் வாழ்வீர்கள் எம் இறுதி நாள்வரை

கலைமகள் வீதி, நல்லூர்.
கணவர், பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி நடராசா
பரமேஸ்வரி



மலர்வு 14 . 05 . 1944
உதிர்வு 21 . 04 . 2015

கடந்த 21.04.2015 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவி திருமதி பரமேஸ்வரி நடராசா அவர்களின் ஓராண்டு நினைவு தின நிகழ்வுகள் இன்று (09.05.2016) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங் களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கரந்தன் வீதி,
நீர்வேலி தெற்கு.
(மே/996)
(12.18)
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 20 . 08 . 1971
இறப்பு 07 . 05 . 2016

### கனகரத்தினம் சுதாகர்

அரசடி, அம்மன் கோயில் பின்வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் எமது நிறுவனத்தில் கணக்காளராகக் கடமை புரிந்தவருமான கனரத்தினம் சுதாகர் 07.05.2016 சனிக்கிழமை மரணமடைந்த செய்தி எம்மை எல்லாம் ஆழ்ந்த சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாசத்துடன் பழகிய நாங்கள்
ஒரு நொடியில் பறந்துபோன
உங்களை மறுபடியும் காண
எம் கண்கள் ஏங்குதையா.....

உரிமையாளரும்,
ஊழியர்களும்
ஞானா களஞ்சியம்,
இல.09, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

லக்ஸ்மி றேட்சென்ரர்,
இல.31, கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை துரைராஜா

(சாரதி இலங்கை போக்குவரத்து சபை)



மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் அரசடி லேன், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப் பிள்ளை துரைராஜா (C.T.B) நேற்று (08.05.2016) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கணபதிப்பிள்ளை-பூரணம் தம்பதிகளின் அன்பு மகனும் விஸ்வலிங்கம்-மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் தங்கமணியின் அன்புக் கணவரும் கமல ராசா (பிரான்ஸ்), பிரதீபா (பிரான்ஸ்), டபில்ராஜ் ஆகியோ ரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீராகவனின் (பாபு-பிரான்ஸ்) அன்பு மாமனும் கஜலக்ஷி (பிரான்ஸ்), ஆகாஸ் (பிரான்ஸ்), அஸ்வின் (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும் பொன் னம்மா, இரத்தினம், இராசம்மா, செல்லையா ஆகியோரின் அன்பு சகோதரரும் நடராசா, கணபதிப்பிள்ளை, சிங்கராசா, கனகரெத்தினம், சுப்பிரமணியம், இராசதுரை, இராசமணி(கிளி), நாகபூசணி (இந்திரா), மங்களேஸ்வரி (பாப்பா-கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.05.2016 செவ் வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல் வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற் றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி லேன்,
திருநெல்வேலி.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
077 241 9963

### கனகரத்தினம் சுதாகர்



மலர்வு 20.08.1971 — உதிர்வு 07.05.2016

அரசடி அம்மன் கோயில் பின்புறம், திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் சுதாகர் 07.05.2016 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் (கஜன் குறூப்) மற்றும் விமலாதேவி தம்பதிகளின் அன்பு மகனும், நடராசா - கோவித்தம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், நாகேஸ்வரியின் (சியாமளா) (பிள்ளையார் இன்) அன்புக் கணவரும், கண்ணன் (றஜி றெஸ்ரோரன்ட்), காலஞ்சென்ற சந்தர் மற்றும் கவிதா, கதீஷன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், நினோஜின் அன்பு மாமனாரும், பிரதீபனின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2016) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித் தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அரசடி அம்மன் கோயில் பின்புறம்,
திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

077 174 6127

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவகாமிப்பிள்ளை கதிர்காமநாதன்



கோப்பாய் வடக்கு பூதர்மடத்தைப் பிறப்பிடமாகவும் இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோவில் வீதியைப் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவகாமிப்பிள்ளை கதிர்காமநாதன் நேற்று (08.05.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம்-சிவகொங்கை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கதிர்காமநாதனின் (தம்பிவைத்தியர்) அன்பு மனைவியும், ஆனந்தகுமாரசுவாமி, லலிதாம்பாள், இராஜராஜேஸ்வரி (கனடா), ஞானகமலாம்பாள் மற்றும் சிவகலா (யாழ். இணுவில் மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வநாயகம், சிவகுமார், பஞ்சாயுதன், தேவநாயகி ஆகியோரின் அன்பு மாமியும், பிரம்மியா, ஜனகன் ஆகியோரின் பேர்த் தியும், அன்ஜாவின் அன்புப் பூட்டியும் காலஞ்சென்றவர்களான தையல்நாயகி, சுப்பிரமணியசிவம், அனவரத விநாயக மூர்த்தி (V.A. மூர்த்தி) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2016)திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரி யைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பரராஜசேகரப் பிள்ளையார்,
கோவில் வீதி, இணுவில்.
021 321 0711

தகவல்:
குடும்பத்தினர்.

### முருகுப்பிள்ளை கந்தசாமி



அல்வாய் வடமேற்கு, திக்கத்தை பிறப்பிடமாகவும் மாவிலங்கையடி அல்வாய் வடமத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகுப் பிள்ளை கந்தசாமி கடந்த (07.05. 2016) சனிக்கிழமை காலமாகிவிட் டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை - கதிராசிப்பிள்ளை தம்பதி யரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன் னையா - வைராத்தை தம்பதியரின் அன்பு மருமகனும், சிவகொங்கையின் அன்புக் கண வரும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம், இராசம்மா, இரத்தினம்மா மற்றும் மருதபிரான் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுதாஸ் (லண்டன்), சிவாஜினி (திக்கம்), சுதேஸ் (ஆசிரியர், கிளி/மாசார் அ.த.க. பாடசாலை) (துன்னாலை), சுகாஜினி (லண்டன்), சதீஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகந்தி (லண்டன்), றமேஸ்குமார் (திக்கம்), ஜெயராஜினி (துன்னாலை), கர்ணன் (லண்டன்) ஆகி யோரின் அன்பு மாமனும், ஜதுஷன் (லண்டன்), அருண்யா (லண்டன்), அக் ஷயா (லண்டன்), சரண்யா, அபிநயா, அட்சயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைள் நாளை ( 10.05.2016) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திக்கம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாவிலங்கையடி,
அல்வாய் வடமத்தி, அல்வாய்
021 205 5530

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி துரையம்மா கனகன்



நல்லூர், அரசடி முதலாம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துரையம்மா கனகன் 05.05.2016 வியாழக்கிழமை காலமாகி விட் டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடேசு - அன்னம் தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான முருகன் - தெய்வானை தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற கனகனின் (ஓய்வுபெற்ற புகையிரத ஊழியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஜப்பான் மற்றும் சிங்கரட்ணம், ராஜேஸ்வரி, சியாமளா, சேதா, ஜெயம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சரோஜினி மற்றும் திங்கரட்ணம், தம்பித்துரை (மடோனா ஆட்டோ), வவா, மகேந்திரம், கண்மணி ஆகியோரின் மைத்துனியும், யோகராஜா (ராசன்-ஜேர்மனி), ஆனந்தராசா (குட்டி), தியாகராஜா (இந்திரன் - லண்டன்),நாளாயினி (அப்பலோ - நோர்வே), சுதாயினி, விஜயதாஸ் (அன்ரா - ஜேர்மனி), ஜீவதாஸ் (சாது), யசோதினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், பேபி றஜித்தா, பேளின் (கனடா), ரமேஸ், முத்துக்குமார், விஜயா(ஜேர்மனி), சுபோதினி, சதீஸ் ஆகியோரின் அன்பு மிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2016) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நணபர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible]

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

"கிறிஸ்து எனக்கு ஜீவன் மரணம் எனக்கு ஆதாயம்"
பிலிப்பியர் 1:21

### திருமதி எமல்டா அன்ரனி



27, புதுமை மாதா கிழக்கு வீதி, குருநகர் யாழ்ப்பாணத் தைச் சேர்ந்த திருமதி எமல்டா அன்ரனி நேற்று (08.05.2016) ஞாயிற்றுக் கிழமை கர்த்தருக்குள் நித்திரை யடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மனவல் அன்ரனியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பேக்மன்ஸ், றோஸ், ப்வியன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மற்றில்டா (ஜேர்மனி), பிறிடா, சௌந்தரநாயகம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், யோசப், கௌரி ஆகியோரின் அன்பு மாமி யும், காலஞ்சென்ற ஜீன்நிஷானி, ஜெயந்தன், கிறவுதர், சமிலா, நிரோஜி, சுமன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜீன்நிஷானி, அபிஷன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (10.05.2016) செவ்வாயக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தாவடி கல்வாரி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

யோசப்- 077 594 8722
பிறிடா - 077 508 5429

தகவல்:
குடும்பத்தினர்.

### தவசி செல்லமுத்து

(அளவெட்டி, மல்லாகம் பலநோக்கு கூ.ச. முன்னாள் பணியாளர்)



கணேஸ்வரம், அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தவசி செல்லமுத்து கடந்த 07.05.2016 சனிக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தவசி - வள்ளி தம்பதியரின் அன்பு மகனும் ஸ்ரீகாந்தேஸ்வரி (காந்தி) இன் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அப்புக்குட்டி மற்றும் நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் தயாபரன் (கனடா), கிருபாகரன் (சுவிஸ்), கௌதமி ஆகியோரின் பாசமிகு தந்தையும் றெஜீனா, சுகுணா, பாலரத்தினம் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பானுஜன், அஷ்வினி, அபிஷா, அமிதா, சர்விகா, டினீட்டா, மகுர்ஜா, மரூசியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று( 09.05.2016) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கணேஸ்வரம்,
அளவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்

021 224 2769

### திருமதி நாகேஸ்வரி திருநாவுக்கரசு



யாழ். சங்கானையைப் பிறப்பிடமாகவும் கனடா Good Wood ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி திருநாவுக்கரசு 06.05.2016 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மூத்தபுதல்வியும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - மாரிமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும் திருநாவுக்கரசுவின் (இலங்கை போக்குவரத்துச் சபை பரிசோதகர்) அன்பு மனைவியும் விஜயசிறியின் அன்புத் தாயாரும் சிவகங்கையின் அன்பு மாமியாரும் அனூஜன், அஜீதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் சந்திரகானம் (சித்திரா) அவர்களின் அன்புச் சகோதரியும் பொன்னுத்துரை இராசம்மா, காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி முத்தையா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2016) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.

தகவல்:
குடும்பத்தினர்.

திருநாவுக்கரசு 0019056427364

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சறோஜினிதேவி சாம்பசிவம்

(ஓய்வு பெற்ற ஊழியர், தாதியர் பயிற்சிப் பாடசாலை, யாழ்ப்பாணம்)



2ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் நாச்சிமார் கோயிலடி கொழும்பு வத்தளையை வசிப்பிடமாகவும் இந்தியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சறோஜினி தேவி சாம்பசிவம் 07.05.2016 சனிக்கிழமை சென்னையில் காலமா னார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான பொன்னுத்துரை - தையல்நாயகி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அப்பாத் துரை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சாம்பசிவத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வில்வராஜா மற்றும் செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான தயாளன், பாஸ்கரன்(உதயன்பத்திரிகை) மற்றும் ஜனகன்(கனடா), கௌதமி (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜீவா (இந்தியா), சித்திரா, ரகுநாதன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் லோகேந்திரா (கனடா), கோபிநாத்(இந்தியா), ரனுஜன், அனுஜன், சஞ்சிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(09.05.2016) திங்கட்கிழமை சென்னையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**அ.சாம்பசிவம் (கணவர் - இந்தியா)**
**மற்றும் குடும்பத்தினர்.**

**00919043344183** ( சென்னை - இந்தியா)
**021 221 3671, 021 222 7761**

### திருமதி நாகேஸ்வரி நாகராசா



யாழ் சங்கானையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Bobigny நோர்வே ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி நாகராசா 07.05.2016 சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அரியபுத்திரர்-சேதுப் பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நாகராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அரியரத்தினம், செல்லம்மா மற்றும் பார்வதி காலஞ்சென்ற நாகராசா மற்றும் சிவபாக்கியம் சேனாதிராசா, செல்வமலர், தனனேஸ்வரி, இராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் நாகினிதேவி, மல்லிகாதேவி, கமலாதேவி, நாகதாஸ், தவமணிதேவி, விமலதாஸ், மோகனதாஸ், விக்னேஸ்வரி, சாந்தி, இன்பதாஸ், திலகதாஸ் ஆகியோரின் பாசமிகு தாயாரும் யோகரத்தினம், கணேசமூர்த்தி, காலஞ்சென்றவர் களான கனகசுந்தரம் செல்வரஞ்சிதம் மற்றும் சிவபாதம், கருணாதேவி, விமலேஸ்வரி, கமலயோகேஸ்வரன், செல்வநேசன் ஜெயந்தினி, லீலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 13.05.2016 வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00-2.00 மணிவரை (பிரான்ஸ் நேரம்) பிரான் ஸில் நடைபெறும். அன்னாரின் துயர் பகிர்வு நிகழ்வுகள் தொட்டிலடி, சங்கானையிலுள்ள அவரது இல்லத்தில் 13.05. 2016 வெள்ளிக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொட்டிலடி,**
**சங்கானை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**021 791 3152, 077 533 6816**

### பெஞ்சமின் நிக்ஷன் (றொபேட்)



யாழ்ப்பாணம் மத்தியூஸ் வீதியைப் பிறப்பிடமாகவும் தற்போது மலேசியாவை வதிவிடமாகவும் கொண்ட பெஞ்சமின் நிக்ஷன் (றொபேட்) நேற்று (08.05.2016) ஞாயிற்றுக்கிழமை மலேசியாவில் காலமானார்.

அன்னார் பெஞ்சமின் (செல்வராசா) தவமணி தம்பதியரின் பாசமிகு கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற கரோல்ட் கண்ணுச்சாமி மற்றும் எலிசபெத் தம்பதியரின் அன்பு மருமகனும், ஷேளினின் அன்புக் கணவரும், நீல் ஆம்ஸ்ரோங் (றொபின்), நிலானி (இந்தியா), நிதுஷா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், எடித், காலஞ்சென்ற விமலவர்ணன் மற்றும் கிரகரி குயின்ஸ் (பிரான்ஸ்), கரோலின் (கனடா), காலஞ்சென்ற குலோடியஸ் கரோல்ட் (சுரேஸ்) மற்றும் வேளின் தியாகராஜா (கனடா) ஆகியோரின் மைத்துனரும், நிருஷனா, பிரிட்ரிஷா ஆகியோரின் பிரியமான சித்தப்பாவும், பிரசாதன், இனியா, இயல் ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் மலேசியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**17, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.**
**077 841 7582**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## வாழ்க ! இன்று போல் என்றும்...

Best Wishes



Congratulations

### உயர்திரு அ.ஸ்ரனிஸ்லாஸ்

(பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) தீவகக் கல்வி வலயம்)

தீவகம் உங்கள் சொந்த மண்ணல்ல - எப்படி
சப்த தீவுகளுக்கும் சொந்தமாயானீர்
காரணம் கண்டறிய கனநேரம் ஆகவில்லை
அர்ப்பணிப்பும் தியாக சிந்தையும் உள்ளத்து உறுதியும்
நேர்மையும் வாய்மையுமே-உங்களுக்கு
அந்த வாய்ப்பைத் தந்ததென்று அறிந்தோம்
இதனால் தான் தீவக மண்ணின் மைந்தனாய் ஆநீர்

ஈ ரெட்டு வருடங்களுக்கு மேல் அதற்குள் நகர்ந்ததா?
ஆறுபத்து வருடங்கள் அதற்குள் எட்டியதா?
ஈர் நான்கு கல்விப் பணிப்பாளர்களுக்கும் பக்கத்துணை நீங்கள்...
அதிசயமாய் இருக்கிறது ஆயிரம் செயலமர்வுகள் கண்டிருப்பீர்
ஆசிரியர் மகாநாடும் அற்புதமாய் முடித்திருந்தீர்
நீங்கள் இல்லாத - பௌர்ணமி விழாக்கள் நாம் கண்டதில்லை
98 இல் தீவகம் ஓய்ந்திருந்த வேளை
காய்ந்து போன தேசமாய் - எம் தீவகம் நின்றிருந்த வேளை...
மாணவர்கள் விடியல் தேடிய வேளை
ஒளிக்கீற்றாய் ' ஸ்ரனிஸ் ' எனும் நாமம்
தீவகத்தில் படர்ந்ததாய் நாம் அறிந்தோம்...
மெல்ல மெல்ல தட்டி கொஞ்சம் கொஞ்சமாய் நகர வைத்து இன்று
வேக மெடுத்த தீவகக் கல்வியின் இயந்திரம் நீங்கள் தான் என்பதை
மறுப்பவரும் இல்லை மாற்றுக் கருத்து உடையோருமில்லை...!

தீவகக் கல்வி அபிவிருத்தி எனும் நிலையான இடத்தில்
அழியாமல் என்றுமே - உங்கள் தடம் பதிந்திருக்கும்
இயற்கையும் செயற்கையும் இயன்றவரை
எமக்கு எதிரி தான்-ஆனாலும் நீங்கள் அலை எறியும் கடல் தாண்டி
நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவை தீவு என
இராப்பகல் தங்கித் தானே கல்வியின் தரம் பார்த்தீர்கள்- அதனால்
உங்கள் ஓய்வை ஒரு முறை ஆய்வு செய்தால் என்ன?
என்று தான் எல்லோரும் நினைக்கின்றோம்
பாரதத்தில் வீஷ்மர் இராமாயணத்தில் வசிட்டர்
எங்கள் தீவகத்தில் என்றுமே நீங்கள்....!

உங்கள் குணத்திலும் குறையொன்றுமில்லை
கடமையிலும் கறையொன்றுமில்லை - அதனால்
மனம் நிறைந்து வாழ்த்துகின்றோம்,..
அந்த இறை ஆசியோடு ஐயா நீங்கள் !
வாழ்க ! வாழ்க ! வாழ்கவே!
இந்த நாள் போல் எந்நாளும் வளமாக வாழ்கவே.

கவிதையாக்கம்
திரு.த.தயாபரன் (ஆசிரியர்)
அல்லைப்பிட்டி பராசக்தி
வித்தியாலயம்,

**கோட்டக் கல்விப் பணிப்பாளர்**
**அதிபர்கள், அலுவலக ஊழியர்கள்.**
**வேலணைக் கோட்டம், வேலணை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொல்கத்தாவில் கொடியேற்றியது குஜராத் சொந்த மண்ணில் சுருண்ட சோகக் கதை

ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற கொல்கத்தா, குஜராத் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 5 இலக்குகளால் வெற்றிபெற்றது குஜராத். நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற குஜராத் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. கொல்கத்தாவின் ஆரம்ப வீரர்களாக உத்தப்பா மற்றும் கம்பீர். கொல்கத்தாவின் ஆரம்பம் வழக்கமாக சிறப்பாக அமையும். இவர்களில் ஒருவர் தடுமாறினாலும் மற்றவர் அணியைக் காப்பாற்றி விடுவார். ஆனால் நேற்று இந்த இரண்டும் நடைபெறவில்லை. ஐந்தே ஓட்டங்களுடன் கம்பீரை போல்ட் செய்தார் பிரவீன் குமார். அதே பந்துப்பரிமாற்றத்தில் பாண்டேயும் ஆட்டமிழந்தார். உத்தப்பாவை இருக்கைக்குத் திருப்பினார் குல்கர்னி. சூரியக் குமார் யாதேவால் முடிந்தது வெறும் நான்கு ஓட்டங்களே. இதற்காக அவர் 12 பந்துகளை எதிர்கொண்டிருந்தார். 24 ஓட்டங்களில் 4 இலக்குகளை இழந்தது கொல்கத்தா. யூசுப் பதான், சகிப் அல் கசன் இணைய குஜராத்தின் பந்துவீச்சாளர்களால் பிறிதொரு இலக்குச் சரிவை ஏற்படுத்த முடியவில்லை. 15.1 பந்துப்பரிமாற்றங்களில் 100 ஓட்டங்களை தொட்டது கொல்கத்தா. யூசுப் பதானின் அரைச்சதம் 31 பந்துகளிலும், சகிப் அல் கசனின் அரைச்சதம் 41 பந்துகளிலும் பதிவானது. சகிப் அல் கசன் 10 பந்துகள் குறைவாக எடுத்து தனது அரைச்சதத்தைப் பதிவுசெய்திருக்கலாம் என்று தோன்றினாலும் 24-4 என்ற நிலையில் இருந்து பார்க்கின்ற போது ஏற்கத்தான் வேண்டும். இணைப்பாட்டம் தொடர்ந்தும் நிலைபெற முடிவில் கொல்கத்தா 158-4. சகிப் அல் கசன் 66 ஓட்டங்களுடனும், யூசுப் பதான் 63 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.



பந்துவீச்சில் குஜராத்தின் சார்பாக பிரவீன் குமார் 2 இலக்குகளையும், குல்கர்னி, சிமித் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கியது குஜராத். ஆரம்ப வீரர்களாக மக்கலம் மற்றும் சிமித். ரசல் வீசிய முதல் பந்துப்பரிமாற்றத்தில் ஒரு ஓட்டம் மட்டுமே எடுக்க முடிந்தது. இருப்பினும் அடுத்தடுத்த பந்துப் பரிமாற்றங்களில் ஆட்டம் குஜராத்தின் கைகளுக்குள் வந்தது. 27 ஓட்டங்களுடன் சிமித்தை போல்ட் செய்தார் சகிப் அல் கசன். பவர் பிளே முடிவில் குஜராத் 46-1. சிறிது நேரத்தில் மக்கலமும் ஆட்டமிழந்தார். ரெய்னா, டினேஸ் கார்த்திக் இணைய மீண்டும் ஓர் நம்பிக்கையான இணைப்பாட்டம் அரங்கேறியது. தலைவர் என்ற ரீதியில் இலக்குச் சரிவை கவனத்திற் கொண்டு மிகவும் நிதானமாக விளையாடினார் ரெய்னா. ஆனால் டினேஸ் கார்த்திக்கின் ஆட்டம் ரெய்னாவுக்கு முற்றிலும் வேறுபட்டதாக இருந்தது. பவுண்டரிகள் அடிக்கொரு தடவை சென்றுகொண்டிருந்தன.

இணைப்பாட்டமாக 49 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த வேளையில் ரெய்னாவை வீழ்த்தினார் ரசல். ரெய்னாவின் ஆட்டமிழப்பால் கொல்கத்தா ஒன்றும் சாதிக்கவில்லை. பின்ஞ் களமிறங்க குஜராத்தின் வெற்றி வேகமாக உறுதியாகிக் கொண்டிருந்தது. டினேஸ் கார்த்திக்கின் அரைச்சதம் 27 பந்துகளில் பதிவானது. முடிவில் 12 பந்துகள் மீதமிருக்க கொல்கத்தாவை வென்றது குஜராத். பின்ஞ் 10 பந்துகளில் 29 ஓட்டங்களைக் குவித்திருந்தார்.

பந்துவீச்சில் கொல்கத்தா சார்பாக ரசல், சகிப் அல் கசன், சாவ்லா, ஹொக் நால்வரும் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர். (ம)

## நடாலை வீழ்த்தி இறுதியில் முர்ரே

மட்ரிட் ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் முர்ரே இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் இங்கிலாந்தின் முர்ரேயை எதிர்த்து ஸ்பெயினின் நடால் மோதினார். இந்த ஆட்டத்தின் முதல் செற்றில் நடால் கடும் நெருக்கடி கொடுத்தார். இருப்பினும் முர்ரேயிடம் இருந்து ஆட்டத்தை எடுத்துவிட முடியவில்லை. இதனால் அந்த செற் 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முர்ரேயிடம் சென்றது. இரண்டாவது செற்றையும் முர்ரே 6:4 என்று தனதாக்க முடிவில் அவர் 2:0 என்ற செற்கணக்கில் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றார். (ம)

## யாழ்ப்பாணம் சம்பியன்

யாழ். மாவட்ட இளைஞர் சம்மேளத்தினால் நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டத்தில் பெண்கள் பிரிவில் யாழ்ப்பாண அணி சம்பியனானது.

அரியாலை சன சமூக நிலையத்தின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. யாழ்ப்பாண அணியை எதிர்த்து தெல்லிப்பழை அணி மோதிய இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாண அணி 24:21 என்ற புள்ளிகளின் அடிப் படையில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது. (ம-422)

## 300 பக்கத்திலான

கப்பட்டிருந்தது. எனினும், அறிக்கை தயாரிப்புக்காக மே நடுப்பகுதிவரை அவகாசம் நீடித்து வழங்கப்பட்டுள்ளது. (த-வ-சி)

## ஜி.எஸ்.பி. பிளஸ்

உரிமைகளை பாதுகாப்பதற்குப் புதிய வழிமுறைகளை ஏற்படுத்துதல், புலம்பெயர் தமிழர்கள் மற்றும் அமைப்புகளின் பெயர்களைத் தீவிர வாதப் பட்டியலில் இருந்து நீக்குதல், புதிய அரசமைப்பின் ஊடாக அதி காரங்களைப் பகிர்தல், வடக்கில் கைப்பற்றப்பட்ட அனைத்து தனியார் காணிகளையும் மீள ஒப்படைத்தல், மீள்குடியேற்றம் மற்றும் தேசிய நல் லிணக்கம் தொடர்பில் கொள்கை ஒன்றை வகுத்தல், இடம் பெயர்ந்துள்ள அனைவரையும் மீளக் குடியமர்த்தல் மற்றும் காணாமற்போனவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கல் உள்ளிட்ட பல விட யங்கள் அந்த நிபந்தனைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்படும் பட்சத்திலேயே ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பிப்பது தொடர்பில் சிந்திக்க முடியும் எனவும் ஐரோப்பிய ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

குறுகிய காலப்பகுதிக்குள் இந்தக் கடுமையான நிபந்தனைகள் நிறைவேற்றவேண்டுமென இலங்கை அரசிடம் வலியுறுத்தப்பட்டுள்ளதோடு, இது தொடர்பில் பேரம் பேசுவதற்கோ அல்லது நிபந்தனைகளை விதிப்பதற்கோ இலங்கை அரசுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது எனவும் ஐரோப்பிய ஒன்றியம் இறுக்கமாகக் கூறியுள்ளது.

இந்த நிலையில் குறித்த நிபந்தனை களுக்காக இலங்கை வெளிவிவகார அமைச்சு இணக்கம் தெரிவித்துள் ளதாகவும் தெரியவருகின்றது.

இது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவதானம் செலுத்தியுள்ளதோடு, இந்த விடயம் குறித்து ஆராய்வதற்குச் செயற்குழு ஒன்றையும் நியமித்துள்ளார்.

மேலும் கால அவகாசத்தைப் பெற்றுக்கொள்வதற்கு வெளிவிவகார அமைச்சு எதிர்பார்த்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த நிபந்தனைகள் தொடர்பில் இலங்கை அரசின் செயற் பாடுகள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்தும் அவதானித்து வருவதோடு, முன்னேற்றங்கள் தொடர்பில் ஆராய்வதாகவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் டேவிட் டெலி தெரிவித்துள்ளார் என அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (த-வ-5)

## ஒற்றுமையாகப்

சபாரத்தினம், வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆகியோர் இந்த அமைப் பிலேயே இருந்தனர். ஒற்றுமையாக இருந்தமையினால், ஆயுதப் போராட்டத்தின் ஊடாக வெல்வோம் என்ற நம்பிக்கை இருமடங்காக அதிகரித்தது. இராணுவத்தை முதன் முதலில் தாக்கியது ரெலோ. அதன் பின்னர் ஏனைய இயக்கங்கள் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தினர். அவர்கள் சிறப்பாகச் செயற்பட்டனர்.

எங்களது தலைவர்கள் குட்டிமணி, தங்கதுரை ஆகியோர் வெலிக்க டைச் சிறைச்சாலையில் வஞ்சகமாகப் படுகொலை செய்யப்பட்டனர்.

இதன் பின்னர் சகோதரப் படுகொலை ஆரம்பமானது. எந்த இலட்சியத்துக்காக, எந்த இனத்தின் விடிவுக் காக, ஈழம் என்ற தேசத்தை அடைவதற்காக, எந்த புனித நோக்கத்துக் காக எதிரி பக்கம் ஆயுதம் நீட்டியிருந்தோமோ, அதே ஆயுதங்கள் எங்கள் சகோதரர்கள் பக்கமும் திரும்பியது.

இதன் எதிரொலியை அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். இன்று எமது தலைவரின் 30 ஆவது ஆண்டை அனுஷ்டித்துக் கொண்டிருக்கின்றோம். ஆயுதப் போராட்டத்தின் ஊடாகத்தான் ஈழதேசம் கிடைக்கும் என்ற நம்பிக்கை சிதைக் கப்பட்டிருக்கின்றது. அரசியல் தீர்வு ஒன்று கிடைக்குமா ? இல்லையா ? என்று ஏங்கிக் கொண்டிருக்கின்றோம். ஐ.நாவை எதிர்பார்திருக்கின்றோம். இதற்குக் காரணம், எங்களது துப்பாக்கிகள் எங்களின் பக்கம் திரும்பியதே.

ஒற்றுமையீனத்தினால் இவை ஏற்பட்டது. எமது தலைவர் சிறிசபாரத்தினத்திடம் ஒற்றுமை வலுவாகக் காணப்பட்டது. தங்கத்துரை சிறையில் இருந்தவேளை, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும், தமிழீழ விடு தலை இயக்கமும் ஒன்றாகவே செயற்பட்டன. இந்த நல்லூரில் தான் இருந்தோம். இராணுவத்தினர் வருகின்றனர் என்றால், இரண்டு இயக்கமும் ஒன்றாகவே செயற்பட்டுத் தாக்குதல் நடத்தினோம்.

இந்தவேளை, சாள்ஸ் அன்ரனி காயப்பட்டார். அவரைக் காப்பாற்ற பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இறுதியில் சாள்ஸ் அன்ரனியை இந்தியாவுக்கு அனுப்பி வைத்தவர் எமது தலைவர் சிறிச பாரத்தினமே. ஆனாலும் அவரைக் காப்பாற்ற முடியவில்லை.

இதன் பின்னர், மாத்தையா இந்தியாவுக்குச் சென்றார். தலைவர் பிரபாகரனைச் சந்தித்து விட்டு வருவதாகச் சொல்லிச் சென்றார். சென்றவர் திரும்பி வந்து சொன்னார், இனிப் பிரிந்து செயற்படுவதுதான் முடிவு என்றார். இதனால் நாம் வேதனைப்பட்டோம். நண்பர்களை பிரிவதை எண்ணி வருந்தினோம்.

இதன் போது வைத்திருந்த ஆயுதங்கள், பணம் என்ப வற்றைசரிசமனாகவேபங்கிட்டோம். கடந்த கால வரலாறுகளை நாம் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். ஒற்றுமையீனத்தினால் ஏற்பட்ட விளைவுகளிலிருந்து நாம் பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். ஒற்றுமையை உதட்டளவில் மாத்திரம் பேசிக் கொண்டிருக்கக் கூடாது. அவ்வாறு இருந்தால், எமது இனம் மீண்டும் கையேந்தும் நிலைக்கே தள்ளப்படும். இவ்வளவு தியாகங்கள் - உயிரி ழப்புக்களின் பின்னரும் எமது இனம் கையேந்தும் நிலைக்கு வரக் கூடாது - என்றார். (த-வ-5-101)

## ஆற்றங்கரை

சிசு ஒன்று, ஆற்றோரம் வீசப்பட்ட நிலையில் நேற்று மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

புளியம்பொக்கணையில் ஆற்றங் கரையோரம் வீசப்பட்ட நிலையில் கிடப்பதாகப் பொது மக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில், அதனை நேற்று மீட்டதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர். குறித்த சிசுவை மீட்கும்போது, பொலித்தீன் பை ஒன்றில் சுற்றப்பட்டு - உயிரிழந்த நிலையில் காணப்பட்டதாகப் பொலிஸார் கூறினர். அதனருகில் பாதணி உள்ளிட்ட சில பொருள் களும் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தச் சிசு மீட்கப்பட்டு, கிளிநொச்சி வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்த பொலிஸார், இது தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் கூறினர். (த-வ-4-21-109)

## மகிந்தவின்

இராணுவத்தினர் சிவில் உடையிலேயே மகிந்தராஜபக்சவை வீழ்ந்து வணங்கியுள்ளதால், அவர்களுக்கு எதிராக இராணுவச் சட்டத்தின் அடிப்படையில் விசாரணைகளை முன் னெடுக்க முடியாது என்று சட்டவல்லுநர்கள் குறிப்பிடுவதாகவும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-வ-5)

## ரயிலுடன்

னால் அலைபேசியில் இருந்து வெளியிணைப்பு வயரினை காதில் மாட்டியவாறு உரையாடியுள்ளார்.

குறித்த விபத்து இடம்பெறுகின்ற நேரம் வரை தாயாருடன் உரையாடிச் சென்றதன் காரணத்தினால், ரயிலின் ஒலி உள்ளிட்ட அனைத்தையும் தொலைபேசி வழியாகக் கேட்டுணர்ந்த தாயார், நிலைமையின் விபரீதத்தினை உணர்ந்து உடனடியாகவே கிளிநொச்சிக்கு வருகை தந்தார்.

இந்த நிலையில் தனது மகனின் சடலத்தை தாயார் அடையாளம் காண்பித்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன் தினம் சனிக்கிழமை ஒரு பெண் உட்பட மூன்று பேர் ரயிலுடன் மோதுண்டு சாவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-வ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகலதுறை அசத்தல் கைகொடுக்க ஹைதராபாத்துக்கு பெரிய வெற்றி

ஐ.பி.எல். தொடரில் நேற்று மாலை நடைபெற்ற ஹைதராபாத், மும்பை அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 85 ஓட்டங்களால் வெற்றிபெற்றது ஹைதராபாத்.


நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. குஜராத்தின் ஆரம்ப வீரர்களாக வோர்ணர் மற்றும் தவான். தவான் ஒவ்வொரு ஓட்டமாக எடுத்து வோர்ணருக்கு வாய்ப்புக்களை வழங்கிக் கொண்டிருந்தார். வழக்கம் போல நொறுக்கித் தள்ளினார் வோர்ணர். பவர் பிளே முடிவில் ஹைதராபாத் 51-0. 9.5 பந்துப்பரிமாற்றங்களில் அணியின் ஓட்ட எண்ணிக்கை 85ஆக இருந்தபொழுது 48 ஓட்டங்களுடன் வோர்ணருக்கு முடிவு கட்டினார் ஹர்பஜன். வில்லியம்சனும் ஹர்பஜன் சுழலில் ஆட்டமிழக்க தவான், யுவராஜ் இணை மிரட்ட ஆரம்பித்தது. சிக்சர்களையும், பவுண்டரிகளையும் சீரான இடைவெளியில் பதிவுசெய்தார் யுவராஜ். தவானின் அரைச்சதம் 43 பந்துகளில் பதிவானது. 23 பந்துகளில் 39 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார் யுவராஜ். மேலும் சில பவுண்டரிகள் தவானால் பதிவாக, முடிவில் ஹைதராபாத் 177-3. தவான் 82 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். பந்துவீச்சில் மும்பையின் சார்பாக ஹர்பஜன் 2 இலக்குகளையும், மக்கெலிநகன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கியது மும்பை. முதல் பந்துப் பரிமாற்றத்திலேயே பட்டேலை வீழ்த்தி இலக்குச் சரிவை ஆரம்பித்து வைத்தார் புவனேஸ்குமார். இரண்டாவது பந்துப்பரிமாற்றத்தில் சர்மாவை போல்ட் செய்தார் நெக்ரா. 5 ஓட்டங்களில் ஆரம்ப வீரர்கள் இருவரையும் இழந்தது மும்பை. முதல் கோணல் முற்றும் கோணலானது. ராயிடு, பட்லர் முறையே 6 ஓட்டங்களுடனும், 2 ஓட்டங்களுடனும் நெக்ராவின் வேகத்தில் சிக்கினர். குருனல் பாண்டியா, பொலார்ட் இருவரும் பத்து ஓட்டங்களைத் தாண்டினாலும், அவர்களாலும் தொடர்ந்து தாக்குப் பிடிக்க முடியவில்லை. மத்திய வரிசையில் ரகுமானின் பந்துப்பரிமாற்றம் நன்கு எடுபட்டது. அவர் பாண்டியா,



சவுத்தி, மக்கெலிநகன் மூவரையும் வெளியேற்ற முடிவில் 92 ஓட்டங்களில் சுருண்டது மும்பை. ஹர்பஜன் 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் ஹைதராபாத்தின் சார்பாக நெக்ரா, ரகுமான் இருவரும் தலா 3 இலக்குகளையும், சரண் 2 இலக்குகளையும், புவனேஸ்குமார், ஹென்றிக்ஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம)



## ரியல் மட்றிட் இறுதியில் மன்செஸ்டரைப் பந்தாடி

ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதியாட்டம் ஒன்றில் மன்செஸ்டர் யுனைற்ரெட் அணியை வீழ்த்தி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது ரியல் மட்ரிட் அணி. ஆட்டம் ஆரம்பித்து முதல் 20 நிமிடங்கள் வரை எந்தக் கோல்களும் பதிவாகவில்லை. 2[illegible]ஆவது நிமிடத்தில் மட்ரிட் அணியின் நட்சத்திர வீரர்களில் ஒருவரான கரீத் பலே தனது அணியின் சார்பாக முதற் கோலைப் பதிவுசெய்தார். வேறெந்த மாற்றமும் ஏற்படாத நிலையில் 1:0 என்று முடிவடைந்தது முதற் பாதி.

ரியல் மட்ரிட்டின் ஆதிக்கத்துடன் நகர்ந்து கொண்டிருந்தது இரண்டாம் பாதி. ஒரு முனையில் நிமிடங்கள் உருண்டோட மறு முனையில் ரியல் மட்ரிட்டின் வெற்றி படிப்படியாக உறுதியாகிக் கொண்டிருந்தது. பலேயால் பதிவான அந்தக் கோலே ஆட்டத்தில் ஒரே கோலாகவும் அமைய முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது ரியல் மட்ரிட்.

குறித்த தொடரில் அத்லெட்டிகோ மட்ரிட் ஏற்கனவே இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுவிட்ட நிலையில், இத்தாலியின் மிலான் நகரில் எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறும் இறுதியாட்டத்தில் ரியல் மட்ரிட், அத்லெட்டிகோ மட்ரிட் அணிகள் மோதவுள்ளன. (ம)

## கலந்துரையாடல்

இலங்கைப் பாடசாலைகளின் கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்பட்டுவந்த 17வயது, 19 வயது ஆண்களுக்கான ஆட்டங்களும், 19வயதுப் பெண்களுக்கான ஆட்டங்களும் இடைநிறுத்தப்பட்டிருந்தன. மீளவும் தொடரை நடத்துவது தொடர்பான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. தொடரில் பங்கேற்கும் பாடசாலையின் பொறுப்பாசிரியர்களைக் கலந்து கொள்ளுமாறு இணைப்பாளர் காந்தரூபன் அறிவித்துள்ளார். (ம-422)

## யங்ஹென்றிசியன் கிண்ணத்துக்கான கால்பந்தாட்ட தொடர் இன்று

யங்ஹென்றிசியன் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடர் இன்று திங்கட்கிழமை முதல் இளவாலை ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் நடைபெறவுள்ளது. வடமாகாண ரீதியில் நடத்தப்படும், அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான இந்தத் தொடரின் இன்றைய ஆட்டத்தில், பிற்பகல் 6.45 மணிக்கு கரவை சுடர் அணியை எதிர்த்து இளவாலை சென். லூட்ஸ் அணியும், இரவு 8.45 மணிக்கு ஊரெழு றோயல் அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணியும் மோதவுள்ளன. ஆரம்ப நிகழ்வில் விருந்தினர்களாக இளவாலை ஹென்றியரசர் க்ல்லூரி யின் அதிபர் அருட்தந்தை ஜேசுதாசன் அடிகளார், வலிகாம உதைபந்தாட்ட லீக்கின் த்லைவர் யுவராஜ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-422)

## இன்றைய மோதல்

இமையாணன் மத்திய வி.கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் இன்று பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் உடுத்துறை செந்தமிழ் அணியை எதிர்த்து உரும்பிராய் அண்ணாஸ்ரார் அணியும், மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சரஸ்வதி அணியை எதிர்த்து யூனியன் அணியும் மோதவுள்ளன. (ம-108)

## சச்சினை வீழ்த்தினார் கோக்லி

ஐ.பி.எல். தொடரில் புனே அணிக்கு எதிரான ஆட்டத்தில் சதம் விளாசி அசத்திய விராட் கோக்லி சச்சினின் சாதனையொன்றை முடியடித்துள்ளார்.

ஒரு தொடரில் 500 ஓட்டங்கள் என்ற மைல்கல்லை நடப்பு வருடத்துடன் சேர்த்து மூன்றாவது முறையாக கோக்லி எட்டியுள்ளார். இவ்வாறு மூன்று முறை 500 ஓட்டங்கள் பெற்ற முதற் தலைவர் என்ற பெருமை கோக்லிக்கு கிடைத்துள்ளது. இதற்கு முன்னர் சச்சின் இந்த மைல்கல்லை இரண்டு தடவைகள் எட்டியுள்ளார். (ம)



## பருத்தித்துறையிடம் கிண்ணம்

யாழ்ப்பாணம், மே 9

யாழ். மாவட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான கபடியில் பருத்தித்துறை அணி கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் பருத்தித்துறை அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் அணி மோதியது. 8:7 என்ற சண்டிலிப்பாயின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதற் பாதி. இரண்டாம் பாதியில் பருத்தித்துறை அணியின் பக்கம் ஆட்டம் சாய்ந்தது. முடிவில் அந்த அணி 23:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ம-422-23)

## ஐ.பி.எல். கிண்ணம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

நடமாடும் பாண் வாகனம் ஓடுவதற்கு சாரதிகள் மற்றும் பாண் விற்பனை செய்யக் கூடியவர்களும் தேவை.

**புதிய துர்க்கா பேக்கரி**
கலைவாணி வீதி, பொற்பதி றோட்,
கொக்குவில், யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

# தருமரத்தினம் சபாநாதன்

(ஓய்வுபெற்ற நில அளவை அத்தியட்சகர்)

பிறப்பு 29.03.1934 — இறப்பு 06.05.2016



அராலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையையும் சிட்னி ஆஸ்திரேலியாவையும் வசிப்பிடமாகவும் கொண்ட தருமரத்தினம் சபாநாதன் கடந்த (06.05.2016) வெள்ளிக்கிழமை சிட்னியில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தருமரத்தினம் தையல்நாயகி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் (ஆஸ்திரேலியா) அன்புக் கணவரும், ஆஸ்திரேலியாவில் வசிக்கும் யோகா னந்தா, யமுனா, நளினா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் ஜெயலஷ்மி (இலங்கை), ஆனந்த லஷ்மி (இலங்கை), காலஞ்சென்ற ராசரத்தினம் மற்றும் ராஜராஜேஸ்வரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கனகாம்பிகை (லண்டன்), Dr.ரோகினி (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற ஜெயரட்ணராஜா, தர்மலிங்கம் (இலங்கை), பத்மகுமாரி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும், ஆஸ்திரேலியாவில் வசிக்கும் சுபாஸ்சினி, காந்தரூபன், நரேந்திரநாதன் ஆகியோரின் அன்பு மாமனும், வைஷ் ணவி, நித்திலன், பவித்திரன், கார்த்திகா, ஹரினி, அபிராமி, அச்சுதன், அமுதா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை எதிர்வரும் (11.05.2016) புதன்கிழமை மு.ப. 10.30 மணிக்கு Rook Wood Memorial Gardens and Crematorium, South Chapel, Memorial Avenue, RookWook, NSW இல் நடைபெற்று பூதவுடல் தகனம் செய் யப்படும்.

அன்னாரின் பூதவுடல் திங்கட்கிழமை அன்று பி.ப. 6.30 மணிமுதல் 8.30 மணி வரை Liberty Funerals 101 South Street, Grandville, NSW இல் பார்வைக்கு வைக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: யோகானந்தா ஆஸ்திரேலியா
+612 9679 8770, Mob + 61 48866 3585
யமுனா- ஆஸ்திரேலியா, Mob: +61 4 0000 6099

தகவல்:
குடும்பத்தினர்.




SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை O/L,A/L எழுதியோர், இளைஞர், யுவதிகள்,
வெளிநாடு செல்வோர், தொழில்புரிவோர் இணையமுறையும்

சனி, ஞாயிறு பயிற்சி ஆரம்பம் : 14.05.2016
பிரிவு 1 : காலை 08.00-10.00 பிரிவு 2 : மு.ப 10.00-12.00
பிரிவு 3 : பி.ப 01.00-03.00 பிரிவு 4 : மாலை 03.00-05.00

காலை 10.00-12.00

SAAMSON
Experts in English Training

077 1570 486
021 320 3313


## முதலாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
# ஏகாம்பரம் தில்லையம்பலம்

(ஓய்வு பெற்ற அதிபர்)

பிறப்பு
16.02.1916

இறப்பு
09.05.2015



உங்கள் நூற்றாண்டு அகவையிலே
நெஞ்சில் நீங்காத நினைவுகளுடன் உங்கள்
பாதச் சுவடுகளை என்றும் நாம் பின்தொடர்வோம்.

வீரப்பதிராயன்
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

அன்புடன்
பிள்ளைகள், குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

# திருமதி நாகரத்தினதேவமலர் (தேவி) மகாதேவன்



உடுவில் கிழக்கு சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரத்தின தேவ மலர் (தேவி) மகாதேவன் நேற்று (08.05.2016) ஞாயிற்றுக்கிழமை அகால மரண மானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான தங்கம்மா தம்பித்துரை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பு- இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ் சென்ற மகாதேவனின் அன்பு மனைவியும், பத்மநாதனின் அன்புச் சகோதரியும், தங்கலோஜினி, பிறேமதாஸ், கதிர்காமதாஸ் (Nothern Power Chunnakam) காலஞ்சென்ற நிர்மலதாஸ், கமலதாஸ் (இ.போ.ச) ஆகியோரின் அன்புத் தாயாரும், பஞ்சரத்தினம், தேவகி, விஜயகுமாரி (பி.உ.உ. ஆ அலுவலகம், யாழ்), சாலினி ஆகியோரின் மாமியும், சாம்பவி, நந்தகோபி, தேவிகா, அட்சயா, தர்மிலா, கயூரிக்கா, திசான், சைனுஜா, அட்சயம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2016) திங்கட்கிழமை மு.ப.10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆக் லேன், உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர்
# மகேஸ்வரி சிதம்பரப்பிள்ளை

பிறப்பு : 02.05.1941

இறப்பு : 10.04.2016



அமுதிலே அன்பை கலந்தூட்டி
ஒழுக்கத்தை வாழ்வாக்கி
எம்மை சுமுகமாய்
வளர்ந்தோங்க வைத்தவரே
அம்மா... எங்கள் ஆருயிரே
சும்மா நீ இருந்ததில்லை
சுகமான கதைபேசி வளர்த்தெடுத்தீர்
அம்மா! உமையிழந்தோம் உயிரிழந்தோம்
யார் வந்து தீர்ப்பார் இவ்வலியை
தங்கள் ஆத்மா சாந்தியடைய இறையடி பணிகின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி, இணையம் ஊடாக ஆறுதல் கூறியவர்களுக்கும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டும் மலர்வளையம் வைத்தும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மேலும் பல வழிகளில் ஆறுதல் அளித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை (10.05.2016) செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

மாணிக்கவளவு,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

குடும்பத்தினர்.


உ
அக்ஷய திருதியை திருநாளிலே தங்க நகைகளை வாங்கி
ஐஸ்வரியத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்

ஸ்ரீ சிவாஞ்சனா ஜுவல்லறி
SRI SIVANCHCHUNA Jewellery

தங்கப்பவுண் நகை வியாபாரம்
Manufacturers Gold Jewels

149A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021 222 9227, 077 711 0220




## மரண அறிவித்தல்

# திருமதி சிவபாக்கியம் சிவஞானம்



மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், பத்தமேனி அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் சிவஞானம் நேற்று (08.05.2016)ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆர்மோனிய கலைஞர் சிவஞானத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஐயாத்துரை (மீசாலை), அன்னபூரணம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலசரஸ்வதி (ஆவரங்கால்), ரகுநாதன் (K.S ரகு-முன்னாள் யாழ். F.M அறிவிப்பாளர்), செல்வ ராணி (லண்டன்), குணநாதன் (லண்டன்), காலஞ்சென்ற சிவலோகநாதன் (வல்வெட்டித்துறை) மற்றும் சற்குணம் (பிரான்ஸ்), சிவபாக்கியநாதன் (போதகர், அச்சுவேலி நாற்சதுர சுவிசேஷ சபை) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ் சென்ற இராசரத்தினம் (ஆவரங்கால்) மற்றும் தர்ஜனா (கொழும்பு), ரத்தினசோதி ( லண்டன்), யோகேஸ்வரி (வல்வெட்டித் துறை), நிர்மலாதேவி (பிரான்ஸ்), குணரூபா (அச்சுவேலி) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற இராஜலிங்கம் மற்றும் சிவமலர், இராஜமலர்-பாஸ்கரன், காலஞ்சென்ற அமுதலிங்கம் - மற்றும் வனஜா, சாந்திமலர்-இராஜரட்ணம், நித்தியமலர்-காந்தீபன், ரகுசுதன் பக்தகௌரி, பிரியதர்சனா - பகீரதன், அனுப்பிரியா, கஜன், தவச்செல்வி-லோகேஸ்வரன், காலஞ்சென்ற ராஜன் மற்றும் ரங்கன்-பிரியலோசினி, கிருஷா - விஜயகுலராஜ், சுயானி, நிஷானி, நிலானி, அர்ச்சுன், ராகுல், கானுஜன் , நீலஜா, தயாளன், ஆர்த்திகா, அர்வனா ஆகியோரின் பேர்த்தியும், நிசானி, தர்சன், தர்ஷிகா, தீபிசன், துவாரகன், கர்த்திகன், கவிசன், தீபதி, ஷகித், ஜெய், சாய்நிகேசன், கிசோத்தனன், கவிலாசி, விதுசன், அபிஜா, அனாஜா ஆகியோரின் அன்புப் பாட்டியும், அபிஷா, அபிஷேக் ஆகியோரின் கொள்ளுப்பாட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (09.05.2016) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அச்சுவேலி நாற்சதுர சுவிசேஷ சபையில் நடைபெற்று பூதவுடல் வல்லை நாற்சதுரசபை சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பத்தமேனி, அச்சுவேலி.
077 652 8620

தகவல்:
குடும்பத்தினர்.


என்றும் குறையாத ஐஸ்வர்யத்தை
அள்ளித் தரும் அக்ஷய திருதியை
திருநாளாம் 09.05.2016 அன்று எமது
வினோ நகைப் பூங்காவில் தங்க
நகைகளை கொள்வனவு செய்து
ஐஸ்வர்யத்தை அள்ளிச் செல்ல
அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்

வினோ நகைப் பூங்கா

அக்ஷய திதி அன்று காலை 7 மணிமுதல் மாலை 9 மணிவரை
வாடிக்கையாளரின் நன்மை கருதி கடை திறந்திருக்கும்.



குறிப்பாக 08.05.2016 அன்று வாடிக்கையாளர்களின் நன்மை கருதி எமது ஸ்தாபனம்
திறந்திருக்கும் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமக்கு வேறு கிளைகள் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
Tel: 021 222 5394
021 222 9494
Fax: 021 222 2824


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.05.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.